
CONNEMARA PUBLIC LIBRARY
7 - DEC 1967
MADRAS

# திருக்கோயில்


"என்கடன் பணி செய்து கிடப்பதே"



இராச கோபுரம்,
திருவண்ணாமலை.

மாலை 10] பிலவங்க - கார்த்திகை - டிசம்பர், 1967 [மணி 3

சென்னை அரசாங்க அறநிலையப்



நமது தமிழக அறநிலைய அமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் அவர்களும், தருமை ஆதீனத்திற்குச் சென்றிருந்த பொழுது, தருமபுர ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், அண்மையில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கு ரூ. 30,000/- நன்கொடை வழங்குதல் (20—10—67).

## பொருளடக்கம்


1. திருவண்ணாமலைத் தீபச் சிறப்பு
2. சிவப்பிரகாசர் போற்றிய திருவண்ணாமலை
3. மெய்கண்டாரும், சிவஞான போதமும்.
4. சிவஞான போதச் சிறப்பு
5. நக்கீரர் கண்ட நற்காட்சி
6. திருப்பாவைச் செழும் பொருள்
7. ஈசர் உருவம்
8. ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹம்
9. தன்னையுங் காணார்
10. ஞான சித்தர்களும் சித்த மருந்தும்
11. உள்ளபொருளை உணருங்கள்
12. ஸ்ரீவைஷ்ணவ குரு பரம்பரை


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

7 - DEC 1967


# திருக்கோயில்


திங்கள் வெளியீடு

மாலை 10] பிலவங்க - கார்த்திகை - டிசம்பர், 1967 [மணி 3


## திருவண்ணாமலைத் தீபச் சிறப்பு

### முன்னுரை :

நமது அருமைத் தமிழ் நாட்டிற்குப் பெருமைதரும் எண்ணற்ற பல திருத் தலங்களுள், திருவண்ணாமலை மிகவும் தலைசிறந்த தொன்றாகும். பஞ்ச பூதத் தலங்களுள், நெருப்புத் தலம் எனவும், ஆறு ஆதாரத் தலங்களுள் மணிபூரகத் தலம் எனவும், இதனைப் பெரியோர்கள் விதந்து கூறுவர். சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம் எனச் சமய இலக்கியங்கள் இதனைப் பெரிதும் புகழ்ந்து கூறும். இவ்வரலாற்றுக்கேற்ப நிலநூல் அறிஞர்களும் (Geologists), இம்மலை நெருப்பினால் அமைந்தது.—நெருப்புத் தன்மை உடையது (Igneous Rock) என்று ஆராய்ந்து கூறுகின்றனர்.



### திருவண்ணாமலைச் சிறப்பு:

திருவண்ணாமலையை, அப்பர் சம்பந்தர் மாணிக்கவாசகர் என்னும் சைவசமய குரவர்கள் தமது திருப்பாடல்களில் போற்றித் துதித்துள்ளனர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் இத்தலத்திலேயே தோன்றி வாழ்ந்து அருள் பெற்று விளங்கியவராவர். குகைநமச்சிவாயர், குரு நமச்சிவாயர் முதலிய அருட்பெருஞ் சான்றோர்களும் இங்கு வாழ்ந்து இத்தலத்தைப் போற்றியிருக்கின்றனர். இங்கு ஈசானிய மடம் என்பது அமைந்து சிறந்து விளங்கி வருகின்றது. குன்றக்குடி ஆதீனத்தின் முதற் பெருங் குரவராகிய தெய்வசிகாமணிதேசிகர் இந்தத் தலத்திலேயே தோன்றியவராவர். உலகப் புகழ்பெற்ற எழுத்தா

ளர்களாகிய சாமர் செட்மாம் (Somerset Maugham), பால் பிரண்டன் (Paul Brunton) முதலிய மேலை நாட்டுப் பேரறிஞர்கள் பலரும், வியந்து போற்றி மகிழ்ந்த சிறப்புடையவராகிய ஸ்ரீ இரமண மகரிஷி அவர்கள் வாழ்ந்து அமைத்த ரமணாசிரமமும், இத்தலத்திற்கு ஒரு பெரும் சிறப்பை அளிப்பதாகத் திகழ்ந்து வருகின்றது. சேஷாத்திரி சுவாமிகள் என்பவரும் இங்குத் தவம் செய்து அருள் பெற்றார். சேரர் சோழர் பாண்டியர் இராட்டிரகூடர் ஒய்சளர் துளுவர் முதலிய அரசர்கள் பலர், திருவண்ணாமலைக் கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர். இத்தலத்தில் மொத்தம் 360 தீர்த்தங்களும், 400 இலிங்கங்களும் உள்ளன என்பர். கோயிற் பரப்பும, கோபுரச் சிறப்பும் கண்டு களிக்கத் தக்கவை.

### நினைக்க முத்தி:

திருவண்ணாமலையின் தன்னிகரற்ற பெருஞ்சிறப்பினை, நம் சமயச் சான்றோர்கள் பெரிதும் வலியுறுத்தி யுள்ளனர். பிறக்க முத்தி தருவது திருவாரூர்; தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம்; இறக்க முத்தி தருவது காஞ்சி; ஆனால் நினைத்த அளவிலேயே முத்தி தருவது திருவண்ணாமலை என்பது, நம் பண்டைப் பெரியோர்களின் நம்பிக்கை.

"துவக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்,
துயர்ந்திடாது அடைந்துகாண் மன்றும்,
உவப்புடன் நினைத்து மரிக்குமோர் பதியும்,
ஒக்குமோ நினைக்கும் நின் நகரை?"

என இத்தலத்தின் சிறப்பினைக் கவிஞர் ஒருவர், திறந்தெரிந்து புகழ்ந்து பாடித் துதித்து மகிழ்ந்துள்ளார்.

### கார்த்திகைத் தீபவிழா:

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருவண்ணாமலைக் கோயிலில் நிகழும் விழாக்களுள், 'கார்த்திகைத் தீப விழா' என்பது, நமது தமிழக விழாக்களிலேயே தன்னிகரற்ற ஒரு பெருஞ் சிறப்பு விழாவாகத் தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றது. தமிழகத்திலுள்ள எல்லாக் கோயிலிலுமே கார்த்திகைத் தீப விழாக் கொண்டாடப்படுகின்றதாயினும், திருவண்ணாமலைக்கே அவ்விழா மிக்க சிறப்புரிமை யுடையதாகத் திகழ்கின்றது. தமிழகத்தின் பலபாகங்களிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஆண்டுதோறும் மிக்க அன்புடன் திரண்டு, இவ்விழாவைத் தரிசித்து மகிழ்கின்றனர். புகழ மிக்க இப்புனித விழாவைப் பற்றிய பல குறிப்புக்கள், எத்துணையோ பற்பல நூற்றாண்டுகட்கு முற்பட்ட நமது பழந்தமிழ் இலக்கியங்களிலும், அமைந்து காணப்படுகின்றன. அவற்றை இங்கு ஒருசிறிது இயன்ற அளவு ஆராய்ந்து மகிழ்வோம்.

### திருஞான சம்பந்தர்:

தமிழகத்தின் சமய மறுமலர்ச்சி இயக்க வரலாற்றிற் சிறப்பிடம் பெற்றுத் திகழும் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் என்னும் இரு பெருஞ் சான்றோர்களும், தமிழ் மக்கள் பலவகைத் திருவிழாக்களைக் கொண்டாடி மகிழ்தற்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர் எனலாம். திருநாவுக்கரசர் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரை விழாவினைப் பெரிதும் வியந்து போற்றி "முத்துவிதானம் மணிப் பொற் கவரி" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிச் சிறப்பித்துள்ளார். திருஞான சம்பந்தப் பெருமான், நமது சென்னைத் திருமயிலைத் திருப்பதிகத்தில், திங்கள்தோறும் முறை முறையே நடைபெறும் வெவ்வேறு திருவிழாக்களைக் கிளந்தெடுத்துக் கூறி யிருக்கின்றார். அதன்கண்,

"வளைக்கை மடநல்லார் மாமயிலை
வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல
கார்த்திகைநாள்
தளந்தேந் திளமுலையார் தையலார்
கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ
பூம்பாவாய்"

எனவரும் திருப்பாடல், கார்த்திகை விழாவைப் பற்றிக் குறிப்பிட்டு, அதனைத் 'தொல்கார்த்திகை நாள்" என்றும் விதந்து போற்றுகின்றது. இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகட்கு முற்பட்ட திருஞானசம்பந்தர் தாமே, இதனைத்

"தொல் கார்த்திகை நாள்" எனக் குறிப்பிடுவாராயின், கார்த்திகை விழாவின் தொன்மையும் பெருமையும் இனைய வென்று எண்ணி யுணரலாம்.

**அவ்வைப் பிராட்டியார்:**

கார்த்திகை விழாவிற் பெண்கள் வீடுகள் தோறும் வரிசை வரிசையாக மிகப்பல விளக்குகளை ஏற்றி வைத்து மகிழ்வர். எனவே, இதனைப் பெண்களுக்குச் சிறப்பாக உரிய விழா எனக் கூறலாம். 'மனைக்கு விளக்கம்' எனத் திகழும் மடவார்கள், இங்ஙனம் விளக்கேற்றி வைத்து விழா அயர்தல் மிகவும் பொருத்தமேயாம். கார்த்திகை விழா பெண்களுக்கு உரியதாதலையும், அவ்விழாவிற் பெண்கள் வரிசை வரிசையாக விளக்கேற்றி வைத்து வழிபட்டு மகிழ்தலையும், **"தையலார் கொண்டாடும் விளக்கீடு"** என்னும் தேவாரத் தொடர் புலப்படுத்து கின்றது. பெண்களுக்கு உரிய இவ் விழாவின் சிறப்பினைப் பெண்ணின் நல்லார் ஆகிய அவ்வைப் பிராட்டியார்,

> "வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
> நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு
> இலையில மலர்ந்த முகையில் இலவம்
> கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த
> அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
> கயந்துகள் ஆகிய பயந்தபு கானம்"
> —அகநானூறு, 11.

எனவரும் பாடற் பகுதியில், உவமையாகக் கூறி மகிழ்கின்ருர். 'வெப்பம் மிக்க பாலை நிலக் காட்டின்கண் சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருத்தல், மகளிர் பலரும் மகிழ்ந்து கூடி ஒளிமிக ஏற்றி வைத்த விளக்குகளின் நீண்ட பல வரிசைகளைப் போல உள்ளது' என்பது இப்பாடற் பகுதியின் கருத்து.

பாலை நிலத்தைப்பற்றிப் பாடுங்காலும், அவ்வைப் பிராட்டியார் தம்மைப் போன்ற பெண் பாலார்க்குரிய கார்த்திகை விழாவினை இயைபு படுத்திப் பாடியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. 'தையலார் கொண்டாடும் விழா' இது என்பதனைக் **'கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த'** என்னும் தொடர் புலப்படுத்தி நிற்கின்றது. "ஆரவாரம் மிகுந்த மகளிர் கூட்டம் மகிழ்ந்து திரண்டு ஏற்றிவைத்த" என்பது இத் தொடரின் பொருள். சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருத்தலுக்கு, அழகிய ஒளி விளக்குகளின் நீண்ட வரிசையின் பொலிவினை, உவமையாகச் சுட்டி, **'அம் சுடர் நெடுங்கொடி பொற்ப'** என அவ்வைப் பிராட்டியார் அருளிச் செய்துள்ளமை பெரிதும் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

**நக்கீரர்:**

இங்ஙனமே, தெய்வமணங் கமழும் இவ் விழாவின் சிறப்பினைத் தெய்வவுணர்விற் சிறந்து திருமுருகாற்றுப் படை பாடியருளிய ஆசிரியர் நக்கீரர், தமது பாடல் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார், 'அந்திமாலைச் செக்கர் வானத்தில் வெண்ணிறக் கொக்கினங்கள் வரிசையாகப் பறந்து செல்லும் காட்சி, முருகப் பெருமான் தமது சிவந்த மார்பில் அணிந்துள்ள முத்துமாலையைப் போல விளங்குகின்றது' என்னும் கருத்து அமைய,

> "நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
> செவ்வாய் வானம் தீண்டிமீன் அருந்தும்
> பைங்காற் கொக்கினம் நிரைபறை யுகப்ப"
> —அகநானூறு, 120.

என அருளிச் செய்யும் இயல்பினராகிய ஆசிரியர் நக்கீரர், தம் தெய்வ உணர்வின் மாட்சிமை தோன்ற,

> "மழைகால் நீங்கிய மாக விசும்பில்
> குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
> அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்
> மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
> பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
> விழவுடன் அயர வருகதில் அம்ம!"
> —அகநானூறு, 141.

என்னும் வரிகளில், இவ் விளக்கீட்டு விழாவின் இயல்பினை இனிது பாடி இன்புறுத்து கின்ருர். விளக்கீட்டு விழா, கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் பௌர்ணமியை ஒட்டி நிகழும் என்பதனை, **"மதி நிறைந்து, அறுமீன் சேரும், அகல் இருள் நடுநாள்"** என்னும் தொடரால், ஆசிரியர் நக்கீரர் புலப்படுத்தியிருத்தல் அறிந்தின்புறற் பாலது.

**பாலைபாடிய பெருங்கடுங்கோ:**

இவ்வாறே பெருங்கடுங்கோ என்னும் சங்ககாலச் சான்றோரும், கார்த்திகை விழாவின் சிறப்பினைத் தமது கவிதைகளிற் புகழ்ந்து போற்றுகின்றார். இவர் சேரமான் மரபினர். பாலைத்திணை பாடுதலில் வல்லவர். ஆதலிற் "சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ" எனவும் இவர் வழங்கப் பெறுவர். 'முள்முருக்கு கோங்கு அதிரல் பாதிரி மரவம் முதலிய சிறந்த பூக்கள் பலவும் மலர்ந்து மணங் கமழ்ந்து இலங்கும் காட்டின் இயல்பு, பரவுக்கடன் பூண்டோரால் பலநிற நறுமலர்கள் தூவி வழிபடப் பெறும் தெய்வத்தின் திருக்கோயிலைப் போலத் திகழ்கின்றது' என்னும் கருத்து அமைய,

"மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம!"

—அகநானூறு, 99.

எனப் பாடியருளுதலால், இப்பெருந்தகையும் நக்கீரர் போலத் தெய்வ வுணர்வின் மிக்க சிந்தையை யுடையவர் எனத் தெரிகின்றது. இவர் தமது பாடல்களில், இரண்டு இடங்களில், கார்த்திகை விழாவினைக் கவின்மிகச் சுட்டுகின்றார்.

"அருவி யான்ற உயர்சிமை மருங்கிற்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலைஇறந் தோரே"

—அகம், 185.

"கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே"

—நற்றிணை, 202.

தலைவன் கடந்து சென்ற மலையின்கண் சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருக்கும் காட்சியும், காடுகளிற் கோங்க மலர்கள் பூத்துத் திகழும் பொலிவும், பாலை பாடிய பெருங்கடுங்கோவுக்குக் கார்த்திகை விழாவின் விளக்கு வரிசைகளை நினைவூட்டுகின்றன. கார்த்திகை மாதத்தினை "அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்" என்றும், கார்த்திகை விழாவினைப் "பெருவிழா" என்றும், பாலை பாடிய பெருங்கடுங்கோ பாராட்டியுரைத்திருத்தல் போற்றுதற்குரியது.

தமிழ்நாடு முழுவதும் கார்த்திகை விளக்கீட்டு விழா நிகழ்கின்றதாயினும், திருவண்ணாமலையில் ஏற்றப்படும் தீப விளக்கமே மிகப் பெரிதும் சிறப்புடையதாதலைக் குறிக்கும் நிலையில், "அருவி யான்ற உயர் சிமை மருங்கிற் பெருவிழா விளக்கம்" எனப் பெருங்கடுங்கோ மொழிந்தருளியிருப்பது, மிகவும் பொருத்தம் அமைந்து காணப்படுகின்றது. இங்ஙனம் இவர் பாடியதற்கு ஏற்பத் திருவண்ணாமலையில் அருவிகள் நிறைந்திருந்தமை, "மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழவு அதிரும் அண்ணாமலை" எனத் திருஞான சம்பந்தர் தேவாரம் கூறுமாற்றானும் உணரப்பெறும்

**முத்தொள்ளாயிரம்:**

இவ்வாறு நாடு முழுவதும் மகிழ்ந்து கொண்டாடப்படும் பெருவிழாவாகப் பண்டை நாளிற் கார்த்திகை விழா விளங்கியது என்பதனை,

"குடத்துள் விளக்கேபோல் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படின்,
ஆபுகும் மாலை அணிமலையில் தீயேபோல்
நாடறி கெளவை தரும்"

எனவரும் முத்தொள்ளாயிரச் செய்யுள் கொண்டும் உணரலாம். தமிழகத்தில் வேறு எந்த மலையின் மீதும் தீபம் ஏற்றி வைத்துப் போற்றும் சிறப்பும் வழக்கமும் இல்லையாதலின், இதன்கண் 'அணிமலையில் தீ' எனத் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபமே சுட்டப் பெற்றதென்று தெளியலாம். "நாடறி கெளவை தரும்" என்றதும் இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

**பழமொழி நானூறு:**

இங்ஙனம் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபம் நாடறிந்த ஒரு பெரு நிகழ்ச்சியாக, மக்கள் அனைவராலும் அறியப்பட்டுக் கொண்டாடப்பெறும் நிலையில் நிகழ்ந்து வந்தமை பற்றியே, "குன்றின் மேல் இட்ட விளக்கு" என்னும் தொடர் ஒரு பழமொழியாகவும் தமிழ் நாட்டில் வழங்கிவரத் தலைப்பட்டு விட்டது.

"கன்றி முதிர்ந்த கழியப்பன் ஞள்செயினும்
என்றும் சிறியார்கண் என்னும் தோன்ரு
தாம்;
ஒன்ருய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு"

என முன்றுறை யரையனுர் என்னும் சங்க கால முதுபெரும் புலவர், தாம் இயற்றிய பழமொழி நானூறு என்னும் சிறந்த நூலின்கண், பாடியிருத்தலும் ஈண்டு நுனித் துணர்ந்து நோக்கத் தக்கது. தொன்றுதொட்டு நாட்டு மக்கள் அனை வரும் அறிந்துணர்ந்து உடன்பட்டு நின்ற தொரு சிறந்த உண்மை மிக்க செய்தியே மக்களிடையிற் பழமொழியாக வழங்கத் தலைப்படுமாதலின், குன்றின்மேல் விளக் கிடுதல் ஆகிய திருவண்ணாமலைக் கார்த்தி கைத் தீப நிகழ்ச்சியின் சிறப்பும் தொன்மையும் பிறவும், இனையவென எண்ணி யுணரலாம்.

**களவழி நாற்பது:**

கார்த்திகை விளக்கீட்டு விழாவைப் பற் றிய குறிப்புப் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்ருன, களவழி நாற்பது என்பதன் கண்ணும் வந்துள்ளது. கோச் செங்கணுன் என்னும் சோழவேந்தன், கணைக்கால் இரும்பொறை என்னும் சேர மன்னனெடு பொருது அவனைச் சிறையில் இட்டபொழுது, பொய்கையார் என்னும் புலவர், சோழனின் வெற்றித் திறத்தினைப் புகழ்ந்து பாடிச் சேரமானைச் சிறை மீட்ட னர் என்பர். இக் கோச்செங்கணுனே பெரியபுராணம் கூறும் கோச்செங்கட் சோழ நாயனுர் ஆவர். இவரை,

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன்..."

எனத் திருமங்கையாழ்வார் புகழ்ந்து போற்றினர். இவ்வரசர் 'கழுமலம் என்னும் இடத்திற் கணைக்கால் இரும்பொறை யோடு நிகழ்த்திய போரில், போர்க்களத் திற் பல விடங்களிலும் செக்கச் செவே லென இரத்தத் துளிகள் சிந்திச் சிதறிக் கிடந்த காட்சி, கார்த்திகை விழாவில் ஏற்றி வைக்கப்படும் அளவில்லாத ஒளி விளக்குகளைப் போன்றிருந்தது' எனப் பொய்கையார் பாடுகின்ருர்! சிவபக்தி யிற் சிறந்த கோச்செங்கட் சோழர்க்குத் திருக்கார்த்திகை விழாவைப் பற்றிய செய் தியை, உவமையாக அமைத்துப் பாடு தல் மிகவும் மகிழ்வளிக்கும் எனக் கருதியே, பொய்கையார் இங்ஙனம் அழ குறப் புகழ்ந்து பாடினர் போலும்.

"ஆர்ப்பெழுந்த ஞாட்பினுள் ஆள் ஆள்
எதிர்ந்தோடித்
தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப்
போன்றனவே
போர்க்கொடித் தானைப் பொருபுனல்
நீர் நாடன்
ஆர்த்து அமர் அட்ட களத்து"

எனக் களவழி நாற்பது என்னும் நூலின் கண், "கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக் கைப் போன்றன" எனவரும் உவமையும் நாம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

**சீவக சிந்தாமணி:**

இனி, இவைகளேயன்றிச் சீவக சிந்தா மணி என்னும் சிறந்த சமண சமயப் பெருங் காப்பியத்தின் கண்ணும், திரு வண்ணாமலைக் கார்த்திகைத் தீப விழா வைப் பற்றிய குறிப்பொன்று வருகின்றது.

"தார்ப்பொலி தரும தத்தன்
தக்கவா றுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்ன
கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன் அகலம் எல்லாம்
பொன்னென வியர்த்துப் பொங்கி
நீர்க்கடல் மகரப் பேழ்வாய்
மதனன்மற் றிதனைச் சொன்னுன்."

மலைபோன்ற மார்பில் ஒருவன் செங்குவளை மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையை அணிந்திருந்தமை, திருவண்ணாமலைக் குன்றின் மீது கார்த்திகையின் போது ஏற்றிவைக்கப்படும் விளக்குகளைப் போன் றிருந்தது என்பது கருத்து. இதனுற் பிற சமயத்தவர்களும் கார்த்திகை விளககீட்டு விழாவினைச் சிறப்புற மதித்துப் போற்றி யமை புலனுகும்.

சிவபிரான் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய்த் திகழ்பவன். ஒளி களுக் கெல்லாம் மூலகாரணன் சிவபெரு

மானேயாவன். சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய ஒளியுடைய பொருள்களெல்லாம், தம்முடைய ஒளியை இறைவனிடமிருந்தே பெறுகின்றன.

"சோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே!
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள்வெண் நீற்றாய்!
பங்கயத் தயனும்மால் அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தம்மே வியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே!

எனத் திருவாசகமும்,

"ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!"

எனத் திருவிசைப்பாவும்,

"நாயகன் கண்ண யப்பால்
நாயகி புதைப்ப எங்கும்
பாய்இருள் ஆகி மூடப்
பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே
சுடர்ஒளி கொடுத்த பண்பில்
தேயமார் ஒளிகள் எல்லாம்
சிவன்ஒருத் தேசே யாகும்"

எனச் சிவஞான சித்தியாரும், இறைவனே எல்லாவகை ஒளிப் பொருள்களுக்கும் ஒளிதரும் பேரொளிப் பிழம்பாகப் பிறங்கி நிற்றலை விளக்குதல் காணலாம்.

**கார்த்திகையின் முதன்மை:**

இவ்வுண்மையினை விளக்குவதே, கார்த்திகை விளக்கீட்டு விழா ஆகும். கார்த்திகை நட்சத்திரம் அக்கினியை அதிதேவதையாக உடையது என்பர். அதனால் அஃது "எரி" (பரிபாடல். 11) எனவும், "அழல்" (புறம். 229) எனவும் வழங்கப் படும். நட்சத்திரங்களுள் கார்த்திகை மிகவும் சிறப்புடைய தொன்று. ஒரு காலத்தில் கார்த்திகையை முதலாகக் கொண்டே நட்சததிரங்கள் கணக்கிடப் பட்டு வந்தன என்றும், வராக மிகிரர் என்னும் வான நூற் புலவரின் காலத்திற்குப் பின்னர்த்தான் (கி. பி. 6 ஆம் நூற்றுண்டு) அசுவினியை முதலாகக் கொண்டு கணக்கிடும் முறை வழக்கத்திற்கு வந்துவிட்டது என்றும், அறிஞர்கள் யாவரும் இனிது கூறுவர்.

புத்தர் பிரான் தோன்றியருளிய விசாக நாளை, அசுவினி முதலாகக் கணக்கிட்டுப் பதினாறுவதாகக் குறிப்பிடாமல், 27 நாண் மீன்களுள் முன்னுள்ள பதின் மூன்றுக்கும் பின்னுள்ள பதின் மூன்றுக்கும் இடைநிலைப்பட்ட பதினான்காம் நாண்மீனாகக் குறிப்பிட்டு,

"இருதிள வேனில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவயின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்"

என மணிமேகலையிற் சீத்தலைச் சாத்தனார் பாடிச் செல்லுதலால், வராக மிகிரர்க்கு மிக முற்பட்ட அவர்தம் காலத்தில், கார்த்திகையே நாண்மீன்களுள் முதலாவதாகக் கொள்ளப் பெற்றிருந்த செய்தி தெளியப் படும். இவ்வாற்றாற் கார்த்திகையின் முதன்மையை உணரலாம்.

இங்ஙனம் கார்த்திகையே முற்காலத்தில் முதல் நாண்மீனாகக் கணக்கிடப் பெற்றமைக்குக் கார்நாற்பது என்னும் நூலும் சான்று பகர்கின்றது-

"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கில் தகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி சிலமொழி!
தூதொடு வந்த மழை"

வராக மிகிரர்க்கு முற்பட்ட பழங்காலத்தில் நாண்மீன்கள் கார்த்திகையை முதலாகக் கொண்டு கணக்கிடப்பெற்று வந்தமை பற்றியே, கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாண்மீனைத் "தலைநாள்" என மதுரைக் கண்ணங் கூத்தனார் சிறப்பித்துரைப்பாராயினர். அன்றியும் இதன் கண் அவர் "நலமிகு கார்த்திகை" என விதந்து ஓதிய சிறப்பும் உணரற்பாற்று.

**அரும்பெருஞ் சோதி:**

இறைவன் பேரொளிப் பிழம்பாகப் பிறங்கும் பெற்றியை அறிவுறுததும் வகையில் நிகழ்த்தப்பெறும் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீப விழாவின் சிறபபினை நினைவு கூர்ந்தே, மாணிக்கவாசகர் தாம் திருவண்ணாமலையில் அருளிச் செய்த திரு

வெம்பாவையினை "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி" எனத் தொடங்கி யருளினார் போலும்! வட இந்தியாவில் முதலிற் சமண சமயச் சார்புடையதாக விளங்கிப் பின்னர், இந்து சமயத்தினர் என்போர் அனைவராலும் தழுவிக் கொள்ளப்பெற்ற தீபாவளி (தீபம்+ ஆவளி: விளக்கு வரிசை)த் திருநாள் தமிழ் நாட்டில் நெடுங் காலமாகத் தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் 'கார்த்திகை விளக்கீட்டு விழா'வைப் போன்ற தொன்றே யாகும்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் பெருங் கவிஞர், தாம் திருவண்ணுமலையின் மீது பாடியருளிய சோணசயில மாலையின்கண், 'பிறவிக் கடலைக் கடந்து முத்தியாகிய கரையிற் சேர விரும்புவோர், வழி தெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித், தமது தவவொழுக்கம் ஆகிய கப்பலை மேற்கொண்டு செலுத்தி உய்யும் பொருட்டு, ஒரு கலங்கரை விளக்கைப்போல உயர்ந்தெழுந்து ஒளிதந்து விளங்குவது, திருவண்ணுமலைக் கார்த்திகைத் தீபம்' என்னும் கருத்து அமையப் பாடுகின்ருர்.

பிறவி—கடல்
முத்தி—கரை
உலகியல் } வழிதெரியாத
ஒழுக்கம் } திகைப்பு
தவ ஒழுக்கம்—கப்பல்
திருவண்ணுமலை—தீபத் தம்பம்
கார்த்திகைத் தீபம்—கலங்கரை விளக்கு

என அமையும் முறையில், அழகிய இனிய உருவகம் செய்து, சிவப்பிரகாசர் பாடியிருக்கும் திறம், வியந்து மகிழ்தற் குரியது.

"பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே"

## முடிவுரை:

இறைவன் ஒளி வடிவமாகத் திகழுகின்ருன் என்னும் கொள்கை, எல்லாச் சமயத்தாரும் ஏற்றுக் கொள்ளத் தக்க சிறந்ததொரு பேருண்மையே யாகும். ஒளியை விரும்பாதார் உலகத்தில் உளரோ? ஆதலின் 'கார்த்திகை விளக்கீட்டு விழா' யாவருமே கொண்டாடி, இறைவனை வழிபட்டு உய்யத் தகுந்ததொரு சிறந்த விழாவாகும் என்பதிற் பிழையில்லை. எனவே, கார்த்திகைத் திருநாளில் ஒளி வடிவாகத் திகழும் இறைவனை, உலகுயிர்கள் எல்லாம் இடர் தீர்ந்து நலம் பெறற் பொருட்டு, மன மொழி மெய்களால் வணங்கி வழிபட்டு மகிழ்வோமாக!

—ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

திருவண்ணுமலையில் **14-12-67** வியாழக்கிழமை காலை 4 மணிக்குப் பரணி தீப விழாவும், மாலை 6 மணிக்கு மகா தீப விழாவும் நிகழ இருக்கின்றன.

—ஆசிரியர்.

# சிவப்பிரகாசர் போற்றிய திருவண்ணாமலை

**முன்னுரை :**

நம் தமிழ் நாட்டில், அண்மைக் காலத்தில், ஒரு சில நூற்றாண்டு எல்லைக்குள் தோன்றி வாழ்ந்திருந்த சிறந்த பெருங் கவிஞர் பலருள், சிவப்பிரகாசர் ஒருவர்! சிவப்பிரகாசர், குமரகுருபரர், சிவஞான முனிவர் என்னும் முப்பெருங் கவிஞர்களும், சமீப காலத்தில் சைவத் தமிழ் வானில் இணையற்று விளங்கிய முப்பெருஞ் சுடர்கள் ஆவர்.

சிவப்பிரகாச சுவாமிகள் ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்தவர். அவருடைய சமாதி புதுவைக்கு அருகிலுள்ள நல்லாற்றூர் என்னும் இடத்தில் அமைந்திருக்கின்றது. அவர், பொம்மைய பாளையம் சிவஞான பாலைய தேசிக சுவாமிகள் அவர்களைத் தமது ஞானாசிரியராகக் கொண்டவர். தம் ஞானாசிரியரின் மீது அவர், நெஞ்சுவிடு தூது, கலம்பகம், பிள்ளைத் தமிழ் முதலிய சிறந்த பிரபந்தங்களைப் பாடி யிருக்கின்றார்.



'வைராக்கிய சதகம்' 'கொலை மறுத்தல்' 'அவிரோத வுந்தியார்' என்னும் நூல்களை இயற்றியருளிய பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள், இவர்தம் தங்கையின் கணவர் ஆவர். இவருக்கு வேலையர், கருணைப் பிரகாசர் என்னும் இரு தம்பிகளும் இருந்தனர். அவர்களும் புலமை நலம் மிக்கவர்கள். இவருடன் சேர்ந்து, அவர்கள் சீகாளத்திப்புராணம் பாடி யிருக்கின்றனர்.

சிவப்பிரகாசர் பாடிய நூல்களுள் பிரபுலிங்கலீலை மிகவும் புகழ்பெற்ற தொன்று. இவர் இயற்றிய திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, பழமலை அந்தாதி, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக் கலம்பகம் முதலியன, தமிழறிஞர்களால் பெரிதும் வியந்து போற்றப் படுவன. நால்வர் நான்மணிமாலை, நன்னெறி முதலிய இவர்தம் நூல்கள், இளஞ்சிறுவர்களால் விரும்பிப் பயிலப் பெறும் சுவை மிகுந்த அரிய நூல்களாகும்.

**செந்தமிழ்ப் புலமை:**

சிவப்பிரகாசர் செந்தமிழ்ப் புலமையும் சிவநேயமும் நிரம்பிச் சிறந்து திகழ்ந்தவர். பண்டைத் தமிழிலக்கியங்களை யெல்லாம் திருந்தப் பயின்று, தெளிந்த புலமை நலம் வாய்ந்தவர். பழம்பெருந் தமிழிலக்கியங்களை யெல்லாம் அழுந்தி யுணர்ந்து கற்றுச் செழுந் தமிழ்ப் புலமை கை வந்தவர்

அவர் தாம் பயின்று சுவைத்து மகிழ்ந்த சில நூல்களின் சிறப்பினைத் திருவெங்கைக் கோவை என்னும் அகப் பொருள் நூற் கவிதையொன்றில், பின்வருமாறு அழகுறக் குறிப்பிட்டுள்ளார்.

மடலேறியேனும் வந்து, நும் தலைவியை யான் மணந்து கொள்வேன் எனத் தலைவன் தோழியிடம் கூறுகின்றான். அதற்குத் தோழி, "மடலேறுவோர் தாம் விரும்பும் தலைவியின் உருவை ஓவியமாக வரைந்து கொண்டன்றோ, மடலேறுவது வழக்கம்? எம்முடைய தலைவி ஓவியத்து எழுதவொண்ணா உருவழகு உடையவள் ஆயிற்றே! அவள் உருவை நீர் எங்ஙனம் எழுத வல்லீர்? அவள் தன் நூல் போன்ற இடையில் அணிந்துள்ள **மணிமேகலை**யின் நுட்பம், நும்மால் அறிய முடியுமோ? அவளுடைய மார்பில் விளங்கும் **சிந்தாமணி, திருக்கோவை** ஆகிய அணிகலன்களை, ஒருவாறு மிகவும் முயன்று நீர் வரைந்து கொண்டாலும், அவள் தன் வாயாற் பேசும் இனிய உரைத் திறனை, எவ்வாறு நீர் எழுதிக் கொள்ளுதல் இயலும்?" என எதிர் வினவுகின்றாள்.

"மந்தா கினியணி வேணிப்பிரான்
வெங்கை மன்னவனே
கொந்தர் குழல் மணிமேகலை
நூல் நுட்பம் கொள்வதெங்ஙன்?
சிந்தாமணியும், திருக்கோவையும்
எழுதிக் கொளினும்,
நந்தா உரையை எழுதல்
எவ்வாறு நவின்றருளே"

—திருவெங்கைக் கோவை.

என்னும் செய்யுளில், சிவப்பிரகாசர் தாம் பயின்று சுவைத்த பண்டைய இலக்கியங்கள் ஆகிய மணிமேகலை, சிந்தாமணி, திருக்கோவையார் என்னும் சிறந்த நூல்களையும், அவற்றின் அரிய உரை நயங்களையும் பாராட்டிக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

### சிவத்தலங்களில் ஈடுபாடு:

சிவப்பிரகாசர் தேவாரப் பாடல்பெற்ற சிவத் தலங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அதனால் அவற்றின் பெயர்களை அமைத்துக்கூட, அவர் சுவையான கருத்துக்களை வெளியிடுதல் காணலாம். திருச்சோற்றுத்துறை, திருநெய்த்தானம் என்ற இரண்டு பாடல் பெற்ற தலங்களின் பெயர்களைக் குறித்து, அவர் பின்வரும் கருத்தமைத்துப் பாடுகின்றார்:

"புலவர்களே! திருவெங்கை விருத்தகிரிநாத ஈசுவரர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய புலவர்க்கு ஆற்றிலிட்ட பொருளைக் குளத்தில் வரவழைத்துக் கொடுத்தருளினார். மேலும் அவர், சோற்றுத் துறையும் நெய்த்தானமும் தமக்கு உரிமையாக உடையவர். நீங்கள் அவரைத் துதித்தால், உங்களுக்கு நிரம்பச் சோறு அட்டி, நெய் பெய்து, உணவு அளித்து, அவர் உங்கள் பசியைப் போக்கி அருள் புரிந்தருள்வார்."

கீற்றுப் பிறையை அணிந்ததிரு
வெங்கை விருத்த கிரிநாதன்,
ஆற்றுப் பொருளைக் குளத்தில் ஒரு
புலவர்க் கழைத்தன் றருளினோன்!
சோற்றுத் துறையும் திருநெய்த்தானமும்
ஈங்கு உடையான்! சுழலாமல்
தோற்றுப் பசிநோய் தொலைப்பன்! அவன்
தனையே துதியீர்! புலவீரே.

—திருவெங்கைக் கலம்பகம்

### சோண சயிலமாலை:

இத்தகைய சிவபக்தியுடைய வித்தகர் ஆகிய சிவப்பிரகாசர்க்குத் திருவண்ணாமலையின்பால், தனிப்பெருஞ் சிறப்பாக ஈடுபாடு அமைந்திருந்தது. அதனால் அவர் திருவண்ணாமலையில் சிலகாலம் தங்கியிருந்து, அண்ணாமலையண்ணலை வழிபட்டு இன்புற்றார். அப்போது அவர் சுவைமிக்க சோண சயிலமாலை என்னும் துதி நூலை இயற்றியருளினார். அதன்கண் அவர் திருவண்ணாமலையின் சிறப்புக்களைப் பல்வகையாகச் சுவை மிகப் புனைந்துரைத்துப் பாடியுள்ளார்.

சோணசயில மாலையின் முதலிரண்டு அடிகள், இறைவன்பால் அவர் தம் குறைகளை விண்ணப்பம் செய்து கொள்ளும் முறையில் அமைந்திருக்கும். பின்னை இரண்டு அடிகள் திருவண்ணாமலையின் சிறப்புக்களை விளக்கும் கற்பனை நலங்கள்

வாய்ந்திருக்கும். திருஞான சம்பந்தர், திருவையாறு திருவீழிமிழலை முதலிய தலங்களுக்குச் சென்று பாடியருளிய "புலனைந்தும் பொறிகலங்கி" "ஏரிசையும் வடவாலின்கீழ்" எனத் தொடங்கும் திருப்பதிகங்களை யெல்லாம் பலகால் அன்புடன் பயின்றோதி மகிழ்ந்தவர், சிவப்பிரகாசர். ஆதலின் அவ்வமைப்பு முறையினை, எழுசீர விருத்தத்தில், இந்நூலில் அமைத்துக் கொண்டருளினர்.

## திருவண்ணுமலையின் சிறப்புக்கள்:

(1) சிவபிரான் திருவண்ணுமலையில் மலை வடிவம் கொண்டு திகழ்தலைக் குறித்துப் பின்வருமாறு அவர் பாடுகின்றார்:— "மனத்திற்கும எட்டாத நுண்ணியன் என்று மறை யாகமங்கள் எல்லாம் கூறும் குறையறும்படி, உலகுயிர்களெல்லாம் தம் கண்களால் கண்டு மகிழும் வண்ணம், மிகவும் பெரிய மலையுருவில்—அதி ஸ்தூல வடிவில்—இறைவன் இங்கு எழுந்தருளி விளங்குகின்றான்."

கருத்தினும் கருத அரியநுண் ணியன்என்
கடன்அற உலகெலாம் காண்பான்
தரித்துஅதி தூல வடிவுறும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (7)

(2) காலம் தவருமல், உரிய நேரம் உணர்ந்து கோயிலுக்குச் சென்று, முறைப்படி மக்கள் நம்மைத் தரிசித்து உய்தல் அரிது. ஆதலின் அவரவர்கள் தாம்தாம் இருந்த இடத்தில் இருந்தே நம்மைக் கண்டு வணங்கி உய்தி எய்துக! என்றே, இறைவன் இங்கு மிகப்பெரிய மலை வடிவுடன் திகழ்கின்றான்.

காலம்நன் குணர்ந்து சின்கரம் புகுந்து
காண்பரிது எனுது உலகனைத்தும்
சாலநின் றுழியே கண்டிடும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (11)

(3) ஒவ்வோர் ஊரிலும் ஒரு கோயில் இருக்கும். அக்கோயிற் கருவறையில் சிவலிங்கம் விளங்கும். அதுபோன்று, இவ்வண்டமே ஓர் ஊர் எனக்கொளின், அண்டத்தின் சுவர் மதிலாகவும், அண்ட வெளிப் பரப்பு கோயிற் பரபபாகவும், திருவண்ணுமலைத் தலம் கோயிற் கருவறையாகவும், மலை அக்கோயிலின் கருவறையிலுள்ள சிவலிங்கம் ஆகவும் திகழ்கின்றது.

ஏருலாம் அண்டச் சுவர்மதில் மிசைப்பால்
இலங்குறும் அண்ட கோளகையாச்
சாரும ஆலயத்தில் இலிங்கமாம் சோண
சயிலனே கயிலை நாயகனே. (16)

(4) சிறந்த மலைகளில் சுனைகள் இருக்கும். அவற்றில் குவளை முதலிய மலர்கள் பூக்கும். அவற்றை மலை யரமகளிர், வான் அரமகளிர் முதலிய தேவகணத்தார் பறித்து அணிந்து மகிழ்வது உண்டு. ஆனல் திருவணணுமலை மலையிலுள்ள சுனைகளிற் பூக்கும் மலர்களை, வானவர்கள் எவரும் சூடுதற்கு நினையார். ஏனெனில் அம்மலை பிற மலைகளைப் போல்வது அன்று. இறைவனே மலைவடிவம் கொண்டு விளங்குகின்றான். ஆதலின், அம்மலைச் சுனைகளிற் பூக்கும மலர்களை, இறைவனின் திருமேனியிற் சாத்தப் பெற்ற நிருமாலியப் பொருள்களுக்கு உரிமையுடைய சண்டேசுவரர் ஒருவரே, மகிழ்ந்து ஏற்று அணிந்து கொள்ளும் தகுதியுடையவர் ஆவார்.

வண்டுழும் குவளை மலர்தடஞ் சுனையின்
மற்றைவா னவர்க்கு உரித்தன்றிச்
சண்டியுள் மகிழ்ந்து கொளமலர் சோண
சயிலனே கயிலை நாயகனே. (20)

(5) உயிர்கள் உணர்த்த உணரும் தன்மையன. தாமே ஒன்றை யுணர்ந்து கொள்ள வல்லன அல்ல. யாம் காட்டி உணர்த்தினல்தான் உயிர்கள் ஒன்றைக் காண இயலும். இவ்வுண்மை, யாம் இத்துணைப் பெரிய மலை வடிவமாகத் தோனறியும், முன்பு இருவர் எம்மை உணர்ந்து கொள்ள இயலாமையால் தெளியப்படும் என்று, உலகுக்கு அறிவுறுத்தவே இறைவன் மலை வடிவில் ஓங்கி யுயர்ந்து எழுந்து விளங்குகின்றான்.

யாம்முனர் மிகுபே ருருவமாய் வரினும்
இருவரும் உணர்த்திடின் அன்றித்
தாம்உணர் கிலர் என்று எழுந்துயர் சோண
சயிலனே கயிலை நாயகனே. (22)

(6) மலைகளில் மேகங்கள் கவிந்து தவழ்தல் இயல்பு. திருவண்ணுமலையிலும் மேகங்கள அங்ஙனம் மலைமேற் படர்ந்து தவழ்கின்றன. கறுத்த மேகங்கள் தவழ

வது புகை சூழ்ந்ததுபோலக் காணப்படுகின்றது. புகையிருந்தால் நெருப்பு இருக்கும் அன்றே? சிவபிரான் திருவண்ணுமலையில் நெருப்பு வடிவமாக—ஜோதி ஸ்வரூபனுக—ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியாகத்தானே விளங்குகிருன்! மேகங்கள் புகைபோலப் படர்ந்து தவழ்வதனுலேயே. இறைவனின் நெருப்புருவம் திருவண்ணுமலையில் மலை வடிவமாக அமைந்து விளங்குகின்றது என உணரலாம்.

மழைமுகில் வந்து தவழ்ந்துவிண் படரும்
மலிதரு புகைஎன எழுந்து
தழலுரு வுண்மை விளக்குறும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (60)

(7) பிற மலைகள் எல்லாம் உடல் நோய் தீர்க்கும் மருந்திற்குப் பயன்படும் சில மூலிகைகளை மட்டுமே பெற்றிருக்கும். ஆனுல் திருவண்ணுமலையோ, தன்னை உட்கொள்பவர் (தியானிப்பவர்)களின் எல்லா நோய்களுக்கும் மூலகாரணமான பிறவி நோயையே தீர்த்து விடும் சிறந்த மருந்தாக விளங்கும்.

சினவும்நோய் மருந்து வேறுகொண் டிருக்கும்
சிலம்புகள் நாண, உட் கொள்வோர்
சனனநோய் மருந்தாய் எழுந்திடும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (65)

(8) இறைவன் கருணையுடையவன். மலைபோன்ற பெருமை யுடையவன். அதனுல் அவனைக் "கருணைமலை" எனச் சான்றோர்கள் போற்றுவர். "மன்னியதிருவருள் மலையே போற்றி" என்று மணிவாசகர் போற்றுதல் காணலாம். இறைவனுக்குரிய தசாங்கங்கள் என்பனவற்றில், அவனுக்குரிய மலையாக விளங்குவது "கருணை" என்னும் பண்பாகக் கொள்ளலாம். அதனுல் இறைவனைக் குறிக்கும் "கருணை மலை" என்னும் தொடர், "கருணையாகிய மலையையுடையவன்" என்றே, 'மலைபோலும் கருணையை யுடையவன்' என்றே, அன்மொழித் தொகையாக வைத்துப் பொருள் கொள்ளப்படும். ஆனுல் இறைவனே திருவண்ணுமலையில் மலைவடிவம் கொண்டு விளங்குதலின், அத்தொடர் "கருணையை யுடைய மலை" என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் பொருள் கொள்ளக் கிடக்கின்றது.

மொழிதரு கருணை மலைஎனும் பெயர்அன்
மொழிஒரீஇ, வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (91)

(9) மற்ற மலைகள் யாவும் தம்மீது ஏறினவர்களுக்கு உலகைக் காட்டி மயக்கும். திருவண்ணுமலையோ, உலகை வெறுத்துத் தன்பால் அடைந்தவர்க்குத் தன்னையே—சிவபரம்பொருளையே—காட்டி உய்விக்கும்.

தன்னை ஏறினர்க்குச் சகர்எலாம் காட்டும்
தரணியோ டிகலி, மேவினர்க்குத்
தன்னையே காட்டும் மலைஎனும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (93)

(10) ஏனைய மலைகள் வீடு கட்டுபவர்களுக்கு மரங்களைத் தரும். திருவண்ணுமலையோ, தன்னை நினைத்தவர்களுக்கு வீட்டையே—மோட்சத்தையே கொடுத்து வாழ்விக்கும்.

ஓவுறும் மனைசெய் பவர்கொள மரம்தாங்கு
ஓங்கல்கள் நாண, உன்னினர்க்குத்
தாவுறும் உயர்வீடு அளித்தருள் சோண
சயிலனே கயிலை நாயகனே. (99)

(11) இத்தகைய பற்பல சிறப்புடைமையினுலன்றே எத்தனை தலங்களுக்குச் சென்றுலும், அத்தலங்களுக்குரிய பதிகங்களிலெல்லாம் ஒன்பதாம பாடலில், திருவண்ணுமலையின் சிறப்பினை மறவாமற் குறிப்பிடுப் புகழ்ந்தோதிப் பரவுகின்ருர் திருஞான சம்பந்தர், எனப் பாடி மகிழ்கின்ருர் சிவப்பிரகாசர்.

பூம்பொழிற் புகலிக்கு இறைவன்நா னிலம்சேர்
புண்ணியத் தலங்களின் அடைந்து
தாம்புனைபதிகந் தொறும்புகழ் சோண
சயிலனே கயிலை நாயகனே.

—சோண சயிலமாலை, 53.

இங்ஙனமெல்லாம் திருவண்ணுமலையின் சிறப்பினைப் போற்றிப் பாடும் சிவப்பிரகாசர், அங்கு நிகழும் கார்த்திகைத் தீபச் சிறப்புப் பற்றிப் பாடாமல் இருப்பாரா? அதனைத் தம்வாழ்நாளில் அவர் பலகாலும் தரிசித்து மகிழ்ந்திருப்பாரன்றே! தாம் பலகால் தரிசித்து மகிழ்ந்த கார்த்திகைத்

தீபத்தின் சீர்த்தியினை மிகவும் வியந்து போற்றி, அவர் பின்வருமாறு பாடி மகிழ்கின்றார்.

(1) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, புற இருளை மட்டுமேயன்றி, அதனைக்கண்டு வழிபடும் அன்பர்களின் அகஇருள் ஆகிய அறியாமையையும் போக்கி, மெய்யுணர்வு ஒளியை நல்கிநலம் புரிந்து விளங்குகின்றது.

"கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்த்துநின் றெழுந்து விளங்குறுஞ் சோண
சைலனே கயிலைநா யகனே"

(2) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, அவரவர் இல்லங்களில் ஏற்றப்பெறும் சிறுசிறு விளக்குப் போல் இல்லாமல், உலகம் முழுவதற்கும் இடப்பெற்ற ஒரு பெரும் ஒளி விளக்கு எனும்படிச் சிறந்து திகழ்கின்றது.

சீர்தரும் மணியின் அணிந்தன எனகட்
செவியும், ஒண் கேழலின் மருப்பும்,
கார்தரும் உலக விளக்குஎனும் சோண
சயிலனே கயிலை நாயகனே

(3) திருவண்ணாமலையில் கார்த்திகை மாதத்தில் முழுநிலா நாளில் மலையுச்சியின் மீது பேரொளி விளக்கு ஏற்றப்படும் இனிய காட்சியானது, எவருள்ளத்தையும் கவர்ந்து கொள்ளை கொள்ளும் மாட்சிமை உடையதாகும். மலை உச்சியில் தண்மை மிக்க முழு வெண்ணிலாத் தோன்றித் திகழ்தலும், அதனருகே செழுஞ்சுடர்ப் பேராளி விளக்குச் சுடர்விட்டு எரிதலும் கவின் மிகுந்து, காண்பவர் உள்ளத்தைக் களி துளும்பச் செய்யும். திருவிளக்கின் ஒளிச் செழுஞ்சுடர் செந்தாமரை மலரைப் போலவும், அதனை அடுத்து விளங்கும் முழு வெண்ணிலாவின் தோற்றம் அத்தாமரை மலரின் அருகு சென்று அணையும் அழகிய வெள்ளை அன்னம்போலவும், அமைந்து காணப்படுகிறது.

மடலவிழ் மரைமாட் டெகின்என அருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(4) திருவண்ணாமலைக் கார்த்திகை விளக்கீடு, ஒரு கலங்கரை விளக்குப் (Light house) போல, உயர்ந்து எரிந்து ஒளி தந்து விளங்குகின்றது. அது பிறவி ஆகிய கடலைக் கடந்து, வீடுபேறு ஆகிய கரையினை அடைய விரும்புபவர், வழி தெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தவவொழுக்கம் ஆகிய கப்பலைச் செலுத்தி உய்யும்படி செய்து உதவுகின்றது.

பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே

**முடிவுரை:**

இத்தகைய பல சிறப்புக்களை உடைய திருவண்ணாமலையையும், அங்கு நிகழும் கார்த்திகை விளக்கீட்டு விழாவினையும் நாம் அனைவரும் அன்புடன் கண்டு வழிபட்டு, அண்ணாமலை அண்ணலின் அருளைப் பெற்று உய்ய முற்படுவோமாக!

—ஆசிரியர்.

## செய்தி சுருக்கம்

**இலட்சார்ச்சனை விழா:**

சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ குமரகுருபரக் கடவுளுக்கு, 3—11—67 முதல் 8—11—67 முடிய, சிறப்புற நடைபெற்றது.



ஸ்ரீ ரங்கநாதசுவாமி

ஸ்ரீரங்கம்

# மெய்கண்டாரும், சிவஞான போதமும்

முன்னுரை :

தமிழ்நாட்டில் தோன்றியருளிய தலை சிறந்த சான்றோர்களின் வரிசையில், ஆசிரியர் மெய்கண்டார் மிகவும் குறிப்பிடத் தகுந்த பெருஞ் சிறப்பினை உடையவராவர். தெய்வப்புலவர் திருவள்ளுவர், இந்நாளில் உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற பெருஞ் சான்றோராக, அறிஞர்கள் அனைவராலும் மதிக்கப்பெறும் மாட்சிமை பெற்றுத் திகழ்தல் போல, ஆசிரியர் மெய்கண்டார் தாமும் உலக அரங்கில் ஒப்புயர்வற்ற பெருஞ் சான்றோராக மதித்துப் போற்றத் தகுந்த பெருஞ் சிறப்பிற்கு உரியவராவர் எனலாம்.

உலகிற் சிறந்த தத்துவநூற் பேராசிரியர்கள் எவரெவர்? என வினவினால், பிளேட்டோவுக்கும் முன்பு வாழ்ந்த பலரிலிருந்து தொடங்கிப் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் வரையில் அனைவரையும் பற்றி, ஆங்கிலம் அறிந்த பெருமக்கள் மிகவும் புகழ்ந்து வியந்து கூறுவர். ஆனால், நம் தமிழ்நாட்டில் தோன்றி வாழ்ந்திருந்த தமிழர் ஆகிய மெய்கண்டார் பற்றியோ, அவர் இயற்றியருளிய சிவஞான போதம் பற்றியோ, பலருக்கு ஒன்றும் தெரிவதில்லை. இந்நிலை, நம்மனோர் மிகவும் இரங்கி வருந்துவதற்குரிய செய்தியாகும். உலக முழுமைக்கும் உரிய தத்துவநூற் பேரறிஞர்களின் திரளில், நமது மெய்கண்டாரும் ஒருவராகற் பாலர் என்பது மிகையன்று.

அறிவின் முனைவர் :

நூலாசிரியர்கள் இருவகைப் படுவர். மனித நிலையிற் கல்வி யறிவின் துணை கொண்டு, உலகியற் பொருள்களை அளவை முறையால் ஆராய்ந்துணர்ந்து, அவ்வாற்றால் நூல்களை இயற்றி யளிப்பார் ஒருசிலர். மனிதரே யாயினும், மனித நிலையின் மேம்பட்டுத் தெய்விக நிலையினை எய்திச் சிறந்து திகழ்ந்து, இறையருள் உணர்வின் துணைகொண்டு, வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவராய் முற்றுணர்வு கைவரப் பெற்று, உலக நலங்கருதி உயர்ந்த பொருள் உண்மைகளை உள்ளவாறு உணர்ந்து, நூலியற்றி யளிப்பவர்கள் வேறு சிலர்.

இவ்விரு திறத்தினர்களுள்ளும், முன்னையரினும் பின்னையரே பலவகைகளில் முதன்மையும் சிறப்பும் மிக்கவர்களாவர். ஆசிரியர் மெய்கண்டார் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவராய்ப் பிறங்கிய இறையியல் ஞானப் பெருங் குரிசில்.

ஞானச் செழுஞ்சுடர் :

ஆசிரியர் மெய்கண்டாரின் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல. அவைகள், 'விரிப்பின் அகன்றும் தொகுப்பின் எஞ்சியும்' செல்லும் மாட்சிமை மிக்கன. திருநாவுக்கரசரையும் திருஞானசம்பந்தரையும், சேக்கிழார் பெருமான், 'பொருட்சமய முதற்சைவ நெறி தான் பெற்ற புண்ணியக்கண் இரண்டு' எனப் புகழ்ந்து போற்றினர். அந்நிலையிற் கூறலுறின், தொல்காப்பியர் திருவள்ளுவர் மெய்கண்டார் என்னும் மூவரையும், 'செந்தமிழ் நாட்டின் தலை சிறந்த மூன்று ஞானச் செழுஞ்சுடர்கள்' எனப் புகழ்ந்து போற்றுதல் பொருந்தும்.

வரலாறு :

திருமுனைப்பாடி என்னும் நடுநாட்டில் திருப்பெண்ணாகடம் என்னும் சிவத்தலத்தில், அச்சுத களப்பாளர் என்னும் வேளாண் குலத்தலைவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்த வேளாண் செல்வர் ஒருவரின் மகளை மணந்து கொண்டு, இல்லறம் நடத்தி வந்தார். அவருக்கு நெடுங்காலமாகப் பிள்ளைப்

பேறு இல்லாமலிருந்தது. அதனால் மிகவும் வருந்திய அச்சுத களப்பாளர், தமது குல குருவாகிய திருத்துறையூர்ச் 'சகலாகம பண்டிதர்'பாற் சென்று, தம்குறை நீங்கும் வழியாது? என விண்ணப்பித்துக் கொண்டார். அவர் திருமுறையைப் பூசித்துக்கயிறு சார்த்திப் பார்த்தபோது,

"பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினோடு உள்ளம்நினைவு
ஆயினவே வரம்பெறுவர்
ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
தோயாவாம் தீவினையே"

என்னும் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல் கிடைத்தது. அதன்கண், 'பிள்ளையினோடு உள்ளம் நினைவு ஆயினவே வரம் பெறுவர். ஐயுற வேண்டா ஒன்றும்' என அமைந்திருந்த பகுதி, அச்சுத களப்பாளருக்கு ஆறுதல் அளித்தது. அத்திருப் பாடலில் குறித்துள்ளபடியே, அச்சுத களப்பாளர், திருவெண்காடு என்னும் சிவத் தலம் சென்று, அங்குள்ள சோமகுளம்-சூரியகுளம்-அக்கினிகுள்ம் என்னும் மூன்று குளங்களிலும் முறையே நீராடி, சிலகாலம் அங்குத் தங்கியிருந்து, தமது துணைவியாருடன் இறைவனை வழிபட்டு வந்தார். அதன் பயனாக, இறைவன் அருளால் தோன்றிய சான்றோரே, மெய்கண்டார் என்னும் சைவ சித்தாந்தப் பெருஞ்சான்றோர் ஆவர். இவருடைய பிள்ளைத் திருப்பெயர் சுவேதவனப் பெருமாள் (திருவெண்காடர்) என்பது. பெண்ணாகடம்-திருவெண்காடு-திருவெண்ணெய் நல்லூர் என்னும் முப்பெருந் தலங்களும், மெய்கண்டாருடைய வாழ்க்கையோடு மிக்க தொடர்புடையன. எனினும், அவர் திருவெண்ணெய் நல்லூரில்தான் தம் வாழ்நாளிற் பெரும் பகுதி தங்கியிருந்து வாழ்ந்திருந்தார் என்று தெரிகிறது. கம்பரை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல், அச்சுத களப்பாளரின் மிக நெருங்கிய உறவினர் என அறிஞர்கள் கூறுவதுண்டு.

திருக்குறளும் சிவஞான போதமும் :

மெய்கண்டார், திருவள்ளுவர் பெருந்தகையைப் போலவே, ஓர் ஒப்புயர்வற்ற சிறந்த தெய்வப் புலவர். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் போன்று, மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதமும், உலகப் பெரும் பொதுமை நூல்களுள் ஒன்றாக ஒளிர்தற்குரியது.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், நீதிநூல்களின் வரிசையில் உலகப் புகழ் எய்தித் திகழ்தல் போன்றே, ஆசிரியர் மெய்கண்டார் இயற்றியருளிய சிவஞான போதம் என்னும் செந்தமிழ் ஞானத்திரு நூலும், தத்துவ நூல்களுள் உலகில் தலை சிறந்த தொன்றாகப் போற்றிப் புகழ்வதற்குரிய நிலையிற் பொலிகின்றது.

அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருள்களைப் பற்றிய செய்திகளைத் திறம்பட விளக்குதலில், திருக்குறளைப் போன்ற நூல் வேறுபிறிது ஏதும் இல்லை. அங்ஙனமே, இறை உயிர் தளை (பதி பசு பாசம்) என்னும் முப்பொருளின் இயல்புகளை எத்திறத்தவரும் இசைந்து உடன் பட்டு வியக்கத் தக்கவாறு விளக்கும் திறத்தில், சிவஞான போதம் போன்ற சிறந்த நூல் வேறுபிறிது எதுவும் இல்லை எனலாம். கடவுள் உயிர் மலம் மாயை வினை வீடு பேறு என்பனவற்றின் இயல்புகளையெல்லாம் அளவையியல் பிழையாத, அரிய ஆராய்ச்சி நெறிமுறையில், பகுத்தறிவிற்கு மாறுபடாமல், காரண காரிய இயல்புகளிற் பிறழாமல், தடை விடைகளால் ஐயமறச் செவ்விதின் விளக்கி நிற்கும் தனி முதற் பெருநூலாகிய சிவஞான போதம் போல்வதொரு சிறந்த நூலை, நாம் யாண்டும் காண்டலரிது.

திருவள்ளுவர் தமது திருக்குறளில் தனியே எடுத்து விளக்க முற்படாத வீடுபேற்றியல் பற்றிய ஆராய்ச்சியினைக் கிளந்தெடுத்துக் கொண்டு, சிவஞான போதத்தின் மூலம் தெளிவுற விளக்கிய பெருமை, ஆசிரியர் மெய்கண்டார் பெருமானுக்கே உரியது எனக் கூறலாம். இவ்வாற்றால், ஒருவகையில் திருக்குறளுக்கு ஓர் 'ஒழிபியல்' போலச் சிறந்து திகழ்வது, சிவஞான போதம் எனக் கூறுதல் முற்றிலும் பொருத்தமாகும்.

மெய்ப்பொருள் நூல் :

சிவஞான போதம் நமது அருமைச் செந்தமிழ் மொழியிலுள்ள தலைசிறந்த நூல்கள் பலவற்றில் மிகவும் முதன்மை வாய்ந்தது. இலக்கண நூல்களில் தொல்காப்பியமும், நீதி நூல்களில் திருக்குறளும், காப்பிய நூல்களில் சிலப்பதிகாரமும், யோக

ஞான அநுபவ நுட்பங்களை உணர்த்துதலில் திருமந்திரமும், வரலாற்று உண்மைகளை வளம்பெறப் பாடுதலிற் பெரிபுராணமும், கற்பனைத் திறன் செறிந்த கவிதை நலத்தில் கம்பராமாயணமும் பிறவும் தலைசிறந்தனவாதல் போல, அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின்கண் ஒப்புயர்வற்ற மெய்ப்பொருள் நூலாக வீறுற்று விளங்குவது 'சிவஞான போதம்' ஆகும். இலக்கண அறிவு, இலக்கியப் புலமை, தர்க்கநெறிப் பயிற்சி, திருமுறைகளிற் செறிந்த சிறந்தவுணர்வு, பல்வேறு சமய தத்துவ நூல்களில் ஆராய்ச்சி, இறையருள் நலம் முதலியன பலவும், சிவஞான போத நூலைக் கற்றுணர்தற்கு இன்றியமையாத தகுதிகளாக விளங்குகின்றன. சுருங்கக் கூறலுறின், நம் தமிழ் முன்னோர்களின் தத்துவ ஞானம் அனைத்தும் ஒருங்கே சேர்ந்து திரண்டு நிற்கும் அமிழ்த கலசம் போன்றது, சிவஞான போதம் எனக் குறிப்பிடுதல் சாலும்.

ஞான ஞாயிறு :

தமிழகத்தில் தோன்றிய ஒருபெரும் ஞான ஞாயிறே மெய்கண்டார் எனலாம். ஞாயிற்றின் தோற்றத்தால் இருள் அகலுதலும், தாமரை மலர்தலும், தேன் பிலிற்றி நறுமணம் கமழ்தலும், வண்டுகள் மிழற்றுதலும், இயற்கை. அம்முறையில் மெய்கண்டார் பெருமானாகிய ஞானஞாயிறு தோன்றியதனால், அறியாமை இருள் நீங்கியது; அன்பர்களின் உள்ளங்களாகிய தாமரைகள் விரிந்து மலர்ந்தன; பண்டை மறைகளாகிய வண்டுகள், அத்தாமரை மலர்களிலிருந்து மிழற்றி ஒலித்து மகிழ்கின்றன. சிவமணமும் தமிழ்மணமும் யாண்டும் பரவி இன்புறுத்துகின்றன.

பண்டைமறை வண்டரற்றப்
பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம்
பரந்து நாறக்
கண்டஇரு தயகமல
முகைகள் எல்லாம்
கண்திறப்பக் காசினிமேல்
வந்தஅருட் கதிரோன்;
விண்டமலர்ப் பொழில்புடைசூழ்
வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு
சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச்
சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும்
போற்றல் செய்வாம்!

—அருள்நந்தி சிவம்.

தத்துவ வுலகம் :

தமிழகத்தில் மெய்கண்டார் தோன்றிய காலம் (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு), மிகவும் முதன்மையான காலமாகும். அக்காலத்தில் சமய தத்துவ ஆராய்ச்சிகளுக்கு உரியதாக வடமொழியே பெரிதும் ஏற்றம் பெற்றிருந்தது. வாதராயணர் எனப்படும் வேதவியாசர் இயற்றிய பிரம்மசூத்திரம் என்னும் பெருநூல், தத்துவ ஆராய்ச்சித் துறையில் மிக்க முதன்மை உற்றுத் திகழ்ந்து வந்தது. சங்கரர் இராமாநுசர் மத்துவர் நீலகண்டர் என்னும் பேரறிஞர்கள் அதற்குத் தத்தம் கருத்துக்களை ஏற்றி, அதற்கு உரைகள் வகுத்தனர். சங்கரர் கேவலாத்துவைதம், இராமானுசர் விசிட்டாத்துவைதம், மத்துவர் துவைதம், நீலகண்டர் சிவாத்துவைதம் என்னும் கொள்கைகளை ஒட்டி, பிரம்ம சூத்திரத்திற்குப் பேருரைகள் வகுத்தனர். அவைகள் அறிவுலகில் மிக்க செல்வாக்குப் பெற்று விளங்கி வந்தன. அவற்றை இயற்றிய சான்றோர்கள் அனைவரும் தென்னாட்டவரே எனினும், அவர்தம் பேருரைகள் யாவும் தமிழிலன்றி வடமொழியிலேயே இயற்றப் பெற்றன. அதனால் நச்சினார்க்கினியர் போன்ற செந்தமிழ்ப் பேரறிஞர்களும் கூட, 'வீடுபேறு தமிழாற் கூறல் அரிது போலும்' என மனமயங்கி மருள நேர்ந்தது.

இத்தகையதொரு காலத்தில்தான், மெய்கண்டார் தோன்றியருளினர். எத்துணைத் திட்ப நுட்பமான தத்துவக் கருத்துக்களையும், தமிழில் எளிமை தெளிவு இனிமை நுண்மை சுருக்கம் என்னும் இயல்புகள் அமைய விளக்குதல் கூடும் என்பதனை, நிலைநாட்டினர். சங்கரர் இராமானுசர் மத்துவர் நீலகண்டர் முதலியோர் இயற்றிய கொள்கைகளின் வேறாகச் சுத்தாத்துவைதம் என்னும் தூய இனிய சைவசித்தாந்தக் கொள்கையை விளக்கியருளினர். அத்துவைதம் என்னும் சொல்லுக்குப் பிறரெல்லாம் இன்மைமறுதலை என்னும பொருள்களைக் கொள்ள, மெய்கண்டார் அன்மைப் பொருள் கொண்டு, தமது கொள்கையினை நிலைநிறு

விஞர். அத்துவைதம் என்னும் சொல்லின் மெய்ம்மைப் பொருளை விளங்கக்கண்டு உணர்த்திய பெருமைக்கு உரியவராதல் பற்றியே, சுவேதவனப் பெருமாள் என்னும் திருவெண்காடர்க்கு, மெய்கண்டார் என்னும் சிறப்பியற் பெயர் வழங்குவதாயிற்று.

''பொய்கண்டார் காணுப்
புனிதம்எனும் அத்துவித
மெய்கண்ட நாதன்அருள்
மேவும்நாள் எந்நாளோ?''

எனத் தாயுமானவ சுவாமிகள், ஆசிரியர் மெய்கண்டாரின் சிறப்பினைத் திறம் தெரிந்து பாராட்டி இருத்தல் காணலாம்.

''நல்வியாத முனியுரைசெய் சூத்திரத்தின்
பாடியமோர் நான்குங் கொண்ட
சொல்வாய்மை பொருள்வாய்மை
தெளிதலுற்ற
தோராது, சோகம் உற்றோர்
எல்லாரும் அத்துவித சுத்தநிலை
யினிதெய்திச் சோகம் ஏயப்
பொல்லாத சமயகளும் அதிசயிப்பப்
புவனிமிசைப் போதம் ஓங்க''

மெய்கண்டார் தோன்றியருளினர் எனச், சைவ சித்தாந்த 'சந்தான ஆசிரியர் புராண சங்கிரகம்' கூறுதலும் இங்கு உணரற்பாலது.

சைவ சித்தாந்தம் :

மெய்கண்டார் தோன்றியதனல், சைவ சமயம் ஒருவகைப் புதுப்பொலிவும் வளமும் பெற்றது எனலாம். சைவ சமயத்தின் கொள்கைகளைத் திட்பநுட்பமாகவும் தெளிவாகவும் வரையறுத்து உணர்த்தியருளியவர், மெய்கண்டாரே ஆவர். இமயம் முதல் குமரி வரையில் இந்திய தேசம் எங்கணும் சைவ சமயம் பரவி விரவித் திகழ்கின்ற தாயினும், அதன் கொள்கைகள் ஒரு வரையறையின்றித் தெளிவற்ற நிலையிலேயே இருந்து வந்தமை புலனுகின்றது. பாசுபதம் - மாவிரதம் - காபாலம் - வாமம்- வைரவம் - ஐக்கியவாதம் என்னும் அகப்புறச் சமயங்களும், பாடாணவாதம் - பேதவாதம்–சிவசமவாதம்-சங்கராந்த வாதம்-ஈசுவர அவிகாரவாதம்-நிமித்த காரண பரிணும வாதம் முதலிய அகச் சமயங்களும், எல்லாம் சைவ சமயம் எனவே கொள்ளப்படுகின்றன.

ஆனல் அவைகள் அனைத்தும் தம்முள் ஒன்றனோடு ஒன்று மாறுபட்டு மலையும் பல வகைக் கொள்கை முரண்பாடுகள் உடையனவாக உள்ளன என்பது வெள்ளிடைமலை. எலும்புமாலை அணிதல் முதலியவற்றை வற்புறுத்தும் மாவிரதமும், மண்டை ஓடாகிய கபாலத்தில் உண்ணுதலை விரதமாகக் கூறும் காபாலிகமும், கள்ளுண்டல் முதலிய இழிசெயல்களையும் உயரிய நேன்புகளாக உரைக்கும் வாமமும் ஆகிய சமயங்கள், சைவம் என்ற ஒரே பொதுப் பெயரின் கீழ் வழங்கப் பெறுவதுண்டு. கன்னட நாட்டில், கன்னட மொழியில் பசவர் முதலிய பெருமக்கள் பரப்பிய இலிங்காயதம் என்னும் வீர சைவமும் சைவத்தின் ஒரு பிரிவே ஆகும்.

இவ்வாறு கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் வெவ்வேறு பட்டு, அங்கங்கு விதவிதமாகச் சைவ சமயம் ஒரு தெளிவற்ற நிலையில் விளங்கி வந்தது. ஆசிரியர் மெய்கண்டார்தான், நமது தமிழகத்துச் சான்றோர்களாகிய அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் முதலிய அருளாளர்கள் பாடிய திருமுறைகளை அடிப்படையும் உயிர்ப்புமாகக் கொண்டு, தமிழகப் பழம் பெரும் பண்டைய சங்ககாலத் தமிழிலக்கியங்களுக்குச் சிறிதும் மாறுபடாத வகையில், அறிவு நெறிக்கும் அன்பு நெறிக்கும் இயையச் சைவசித்தாந்தம் என்னும் தமிழகத் தத்துவக் கொள்கையினை வரையறுத்து உணர்த்தியருளினர்.

மெய்கண்டார் இயற்றியருளிய சிவஞான போதம் என்னும் சைவ சித்தாந்தத் தலைமணி ஞானநூலின் நுண்பொருளை, அவர்பாற் கேட்டுத் தெளிந்தோர், திருத்துறையூர் அருள்நந்தி சிவாசாரியர், திருவதிகை மனவாசகங் கடந்தார், சீகாழிச் சிற்றம்பல நாடிகள் முதலிய நாற்பத்தொன்பதின்மர் ஆவர். அந் நாற்பத்தொன்பதின்மர்தம் திருமரபின் வாயிலாகவே, நமது தமிழ்நாடெங்கும் சைவசித்தாந்த ஞானப் பேரொளி நிலையங்களாகிய திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம், குன்றக்குடித் திருவண்ணமலை ஆதீனம், கச்சிஞானப் பிரகாச தேசிகர் ஆதீனம் முதலிய, பற்பல திருமடங்கள் தோன்றி வளர்ந்து இன்றளவும் நிலைபெற்று வருகின்றன. இவைகளை யெல்லாம் நுனித்துணர வல்லார்க்கு மெய்கண்டாரின் பெருமை தெற்றென விளங்கும்.

மெய்கண்டார் ஒரு சிறந்த பகுத்தறிவு நெறிச் சிந்தனையாளர் (Rationalist); அதனுலேயே தமது கொள்கைகளை வலியுறுத்த அவர், பிறரைப்போல் வேதம் உபநிடதம் முதலிய நூல்களினின்று வெறும் மேற்கோள்கள் காட்டும் முறையினை மேற்கொண்டிலர். தாம் தமது அநுபூதி அல்லது உள்ளொளி வாயிலாகக் கண்டுணர்ந்து தெளிந்த மெய்ப் பொருள்களை, அவர் நம்மனோர் பொருட்டு அநுமான அளவை ஆராய்ச்சி முறைகளின் வைத்துச் சிவஞான போதத்தில் தெளிவுறக் கூறி விளக்கி யருள்கின்ருர் (What is discovered by intuition is demonstrated by logic). தாம் கூற மேற்கொள்ளும் கருத்தினைத் துணிபொருள் (பிரதிஞ்ஞை), காரணம் (ஹேது) எடுத்துக்காட்டு (திருட்டாந்தம்) என்னும் தருக்க நெறிக்குரிய அநுமான முறைகளின்கண் வைத்து, நம்மனோர்க்கு அவர் அறிவுறுத்தருளியிருக்குந் திறம், மெய்கண்டாரின் சிந்தனைத் தெளிவின் சிறப்பியல்புகளுள் ஒன்ருகும்.

மெய்கண்டார் பகுத்தறிவுச் சிந்தனை நெறிக் கேற்பவே சிவஞான போதம் இயற்றியருளினர் என்னும் செய்தி, பின்வரும் சிவஞான முனிவர் பேருரைப் பகுதியாலும் தெற்றெனத் தெளியப்படும்.

"இங்ஙனம் மூன்று சூத்திரத்தாலும் சைவாகமங்களிற் கூறப்படும் பதி முதலிய பொருள்களினுண்மை அநுமானத்தாற் சாதிக்கப்பட்டது.

அற்றேல், ஆகமவளவையானே அமையுமாகலின், அநுமானப் பிரமாணத்தானுஞ் சாதித்தல் மிகையாம் பிறவெனின்—ஆகாது; மந்தவுணர்வுடைய மாணுக்கர்க்கு வேற்றுச் சமய நூல்களை நோக்கியவழி ஆகமப் பொருள்களின் மலைவு நிகழாமைப் பொருட்டும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை யென்னும் நான்கு வகையானன்றி, ஆகமங்களைக் கேட்ட துணையானே அநுபவ நிகழ்தல் கூடாமையின், சிந்தனை செய்து வன்மை மென்மை யுணர்ந்து கோடற்பொருட்டும், வழியளவையும் வேண்டப்படுமாகலானென்க.

—சிவஞானபோதப் பேருரை.

" மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும் "

எனத் தொல்காப்பியனுர் பணித்ததற்கேற்ப மெய்கண்டார் பெருமான், தாம் கூறமுற்பட்ட சிவஞான போதப் பொருளைப் பல வேறு பாகுபாடுகள் (அதிகரணங்கள்) அமைய வகுத்துக் கொண்டு விளக்கியுள்ள அருமைப்பாடும், பெரிதும் போற்றற் பாலதாகப் பிறங்குகின்றது. ஒவ்வோர் அதிகரணமும் ஐந்து கூறுகள் கொண்டதாகும்.

1. தன்னுற் கூறப்படும் பொருள்
2. அதன்கண் ஐயப்பாடு
3. அதற்குப் பிறர்கூறும் பக்கம்
4. அதனை மறுத்துக் கூறும் சித்தாந்தம்
5. ஒன்றனேடு ஒன்றற்குள்ள தொடர்பு

என்னும் ஐந்திற்கும் உரிய நிலைக்களம் அதிகரணம் எனப்படும்.

இவ்வைந்தினையும் வடநூலார் முறையே விஷயம்-சம்சயம்-பூர்வபட்சம்-சித்தாந்தம்-சங்கதி என்னும் குறியீட்டுச் சொற்களால் வழங்குவர். இவற்றுள் இறுதியிற் குறிப்பிடப் பெற்ற இயைபு என்பதும், நூலியைபு அதிகார இயைபு ஒத்தியைபு பாதஇயைபு அதிகரணஇயைபு என ஐவகைப்படும். இவ்வாற்ருனெல்லாம் எடுத்துக் கொண்ட மெய்ப் பொருளாராய்ச்சியைச் சிறிதும் நெறிபிறழாது விளக்கிச் செல்லும் தனிப் பெரு மாட்சிமை சான்றது சிவஞான போதம்.

செந்தமிழ் முழுமுதல் நூல்:

சிவஞானபோதம் பலவகைகளில் தனிச் சிறப்பியல்பு உடைய செந்தமிழ் நூல். பேராசிரியர் மறைமலையடிகள், பேரறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை, மயிலைகிழார் இளமுருகனுர் ஆகிய சிவநெறிச் சான்ருேர்கள், சிவஞான போதம் செந்தமிழ் முழுமுதல் நூலே, மொழி பெயர்ப்பு நூலன்று, என்பதனைத் தம் ஆராய்ச்சியுரைகளால் நிலைநாட்டியுள்ளனர். பெருஞ்சிறப்பு மிக்க சிவஞானபோதத்தின் அரும்பெரும் நுண் பொருள்கள் அனைத்தையும் ஈண்டெடுத்து விளக்குதல் எளிதின் இயல்வதொன்றன்று. "விரிப்பிற் பெருகும் தொகுப்பின் எஞ்சும்" *எனவரும் புறநானூற்றுவரியே,

* " Anyone who has ever tried to present a rather abstract scientific subject in a popular manner knows the great difficulties of such an attempt. Either he succeeds in being intelligible by concealing the core of the problem and by offering the reader only superficial aspects or Vogue allusions, thus deceiving the reader by arousing in him the deceptive illusion of comprehension; or else he gives an expert account of the problem, but in such a fashion that the untrained reader is unable to follow the exposition and becomes discouraged from reading any further. "

—**Dr. Albert Einstein,**

*Dr. Einstein and Universe.*

இங்கு நினைவிற்கு வருகின்றது. எனினும், வேறு பிறிதோராறு ஏதும் இன்மையின் அந்நூற் பொருள் குறித்து ஒருசில முதன்மையான செய்திகளை மட்டுமாதல் ஈண்டுக் கண்டு அமைவோம்.

மங்கல வாழ்த்து :

தமிழ் நூல்களுள் முதன்முதலில், மங்கல வாழ்த்து என்னும், ஒருவகைச் சிறப்பு முறைத் தொடக்கத்தினை அமைத்துக் கொண்டது, சிவஞான போதமே யாகும். நூலினுட் கூறப்பெறும் பொருட்பாகுபாடுகளைக் குறிப்பால் தன்னகத்தே அடக்கி நிற்றல், மங்கல வாழ்த்துக்கு இலக்கணம் என்பர். இனையதொரு மங்கலவாழ்த்துப் பாடல் சிவஞான போதத்திற் காணப்படுதல் போல, முன்னைய தமிழ் நூல்களில் எதன்கண்ணும் காணப்படவில்லை.

''கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே''

என்பது, சிவஞானபோத மங்கல வாழ்த்துப் பாடல். இதன்கண் சிவஞானபோத நூலின்கண் விளக்கப்பெறும் பொருட்பாகுபாடுகள் அனைத்தும் குறிப்பாற் புலப்படுத்தப் பெற்றிருத்தல் காணலாம்.

நுண்பொருள்கள் :

சிவஞானபோதம் சுருங்கிய நூலாதல் புலப்பட, இச்செய்யுள் மிகக்குறுகிய 'வஞ்சித்துறை'யின் இயன்றுள்ளது. பன்னிரண்டு சூத்திரங்களால் இயன்றுள்ளமை தோன்ற, இப்பாடல் ''கல்-ஆல்-நிழல்-மலை-வில்லார்-அருளிய-பொல்லார்-இணை-மலர்-நல்லார்-புனைவர்-ஏ'' என்னும பன்னிரண்டு சொற்களால் அமைவதாயிற்று.

1. பதியுண்மைக்குப் பிரமாணம்
2. பாசமுண்மைக்குப் பிரமாணம்
3. பசுவுண்மைக்குப் பிரமாணம்
4. பசு இலக்கனம்
5. பாச இலக்களம்
6. பதி இலக்கனம்
7. ஞானம் பெறுவோன் இயல்பு
8. ஞானத்தை யுணரும்முறை
9. சாதிக்கும் முறை
10. பாச நீக்கம்
11. சிவப்பேறு
12. அணைந்தோர் தன்மை

இச்செய்யுளகத்துள்ள 'அருளிய', 'புனைவர்' என்னும் இரண்டு வினைச்சொற்களால் இந்நூல் பொது என்றும், உண்மை என்றும் இரண்டு அதிகாரப் பாகுபாடுகளை உடையதாதல் சுட்டப்பட்டது. மும்மூன்று சொற்கள் ஒவ்வோர் அடியாக வைத்து, 'நான்கு அடிகளான் இச்செய்யுள் யாக்கப் பட்டிருத்தலின் இந்நூலும் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோர் இயலாக, இந்நூல் நான்கு இயல்களில் வகுக்கப் பெற்றுள்ளமை உணர்த்தப் படுகின்றது. இச்செய்யுளில் ''மலை வில்லார்'' என்னும் தொடர், மலை+வில்லார் எனக் கொள்ளப்படுவதேயன்றி, மலைவு+இல்லார் எனவும் பிரித்துணரவிருக்கும் திறனால், இந்நூலின் மூன்றும் சூத்திரமும் நான்காம் சூத்திரமும் தம்முள் தொடர்புடையனவாய், 'இதுவும் அது' என மாட்டெறிய நிற்கும் தன்மை புலனாகும்.

அன்றியும், இச்செய்யுளிற் 'கல்லால் நிழல்மலை' என இடமும் 'அருளிய' எனச் செய்கையும், 'இணைமலர்' எனத் திருவடியும், 'புனைவர்' எனப் பெயரும் உணர்த்தப் பெற்றிருத்தலால், இந்நூலின் நான்கு இயல்களும் முறையே பிரமாணம்-இலக்கணம்-சாதனம்-பயன் என்பனவற்றை உணர்த்துதல் கொள்ளப்படும்.

முடிவுரை :

பாண்டிப் பெருமாள் விருத்தியுரையிற் காணப்பெறுமல், ஆசிரியர் சிவஞான சுவாமிகளால் திறநன்கு தெரிந்து விளக்கப் பெற்றுள்ள, இன்னோரனைய சிறந்த நுண்பொருட் குறிப்புக்களுக்கு இடனாக யாகப் பெற்றுள்ள, இம்மங்கல வாழ்த்துப் பாடல் ஒன்றே, சிவஞான போதத்தின் அருமை பெருமைகளை விளக்கப் போதியதாகும்.

---

[சைவப்பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில், மெய்கண்டார் திருநாள் விழாவில், சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசச் சார்பில், திருமயிலைக் கபாலீச்சுரத்தில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (12-11-67). ஆசிரியர்]

# சிவஞான போதச் சிறப்பு

எல்லா நூல்கள் தம்முள்ளும்
இனிதே சுருங்கித் திகழ்வதெனச்
சொல்லா நிற்பர் திருக்குறளைச்;
சூழ்ந்து கருதின், அதனினுமே
பல்லாற் றனும் சிவஞான
போதம் சுருங்கிப் பயன் பெருகும்!
நல்லோர் புகழும் மெய்ந் நூலின்
நலங்கள் பெரிதும் வரம்பிலவாம்! (1)

நாற்ப தடியால், இருநூற்றுப்
பத்து றெளிய நற்சொல்லால்,
ஏற்ற அறுநூற் றிருபான்நான்(கு)
எழுத்தால், சமயக் கொள்கையெலாம்
தேற்றித் தெருட்டும் சிவஞான
போதச் செழுநூல் போல்எங்கும்
வேற்றோர் நூலின் றெனவுரைப்பின்
மிகக அதன்சீர் விளம்புவர்யார்? (2)

இறையே உயிரே உலகென்றே
இலங்கும் மூன்று பெரும்பொருளும்
முறையே தருக்க நெறிநின்று
முன்னும் பின்னும் முரணுமே
நெறியே ஆய்ந்து தடைவிடையால்
நிறுத்தும் மறுத்தும் மெய்ந்நிறீஇக்
கறையின றுணர்த்தும் சிவஞான
போதம் கடல்போற் பெருஞ்சீர்த்தாம்! (3)

ஒன்றாய் வேறாய் உடனாக
உயிர்கள் தம்மோ டொருங்கியைந்து
நன்றே அருளால் அவற்றினுக்கு
நயந்து கண்டும் காட்டியுமே
நின்றே உதவும் இறைவனருள்
நிலையை, அததுவிதப்பொருளால்
வென்றே விளக்கும் சிவஞான
போதம் அறிவுக் குயர்விருந்தாம்! (4)

அறிவின் முடிந்த முடிபாக
அருமை பெருமை பலநிறைந்து
செறியும் சைவ சித்தாந்தம்
என்னும் சிறந்த கொள்கையினை,
நறிய அளவும் அறிவியலும்
நல்லோர் அடைவும் நடைமுறையும்
நெறியின் அமையச் சிவஞான
போதம் விளக்கும் நிலைவியப்பாம்! (5)

—ஆசிரியர்.

# நக்கீரர் கண்ட நற்காட்சி

முன்னுரை:

தமிழார்வமும் அன்பும் உடைய தக்கார் அனைவரும், சங்ககாலத் தமிழ்ப் பெரும் புலவர் தலைவரும், சான்றோரும் ஆகிய நக்கீரர் என்னும் நல்லிசைக் கவிஞரை அறிவர். அவர் இயற்றிய நூல்களுள் திருமுருகாற்றுப்படை என்பது மிகவும் புகழ் பெற்றதொன்று.

ஆற்றுப்படை:

தமிழ்ப் பெருங் கடவுள் ஆகிய முருகனின் அருளைப்பெற விரும்பும் அன்பன் ஒருவனுக்கு, அவனது அருளைப் பெற்ற சான்றோன் ஒருவன், முருகனின் இயலையும் செயலையும் எடுத்து மொழிந்து, அப்பெருமான் எழுந்தருளி விளங்கும் தலங்களைப் பற்றிக் கூறி, அவனைக்கண்டு வழிபடும் வகையினையும் அறிவித்து, முருகனிடத்தே அவ்வன்பனை ஆற்றுப்படுத்தும் நிலையில் பாடபெற்ற அரும்பெறல் நூலே, திருமுருகாற்றுப்படை.

அதன்கண் நக்கீரர், முருகனைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் சிறப்புரை, அழகுற அமைந்துள்ளது. முருகப் பெருமான், சேந்தன் என வழங்கும் தன் பெயருக்கு ஏற்ப, மிக்க செந்நிறம் வாய்ந்தவன். சேண் விளங்கு அவிர் ஒளியாகச் சோதி வடிவமாகத் திகழ்பவன். அவன் தன்னை வழிபடும் அன்பின் மிக்க அடியார்கட்கு அருள்புரிய, நீலநிறம் கொண்ட மயிலாகிய பறவையின் மீது இவர்ந்து எழுந்தருளிப் போதருகின்றான். அக்காட்சி, நீல நிறக் கடலின் முகட்டில் ஊர்ந்து வரும் உதயச் செஞ்ஞாயிற்றைப் போன்றுள்ளது என்கின்றார் நக்கீரர்!

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி"!

என்பன, திருமுருகாற்றுப் படையின் தொடக்க வரிகள்! இவ்வரிகள் செவ்விய இனிய பொருள் நலங்கள் பல செறிந்து திகழ்கின்றன.

நுண்பொருள்:

(1) ஞாயிற்றின் உதயத்தைக் கண்டு உயிர்கள் அனைத்தும் உவப்புறுகின்றன; அதுபோல முருகனின் அழகிய காட்சியைக் கண்டும் அன்பர்கள் அனைவரும் அகமிக மகிழ்கின்றனர்.

(2) ஞாயிற்றின் ஒளி உலகுக்குப் பெருநலம் புரிந்து வருகின்றது; அதுபோல முருகனின் திருவருள் உலகுயிர்களுக்குச் செய்துவரும் நலங்களுக்கும் எல்லையே இல்லை.

(3) ஞாயிற்றின் ஒளிநலத்தினைப் பெரிதும் விரும்பி, அதனைப் போற்றாதார் எவரும் இலர். எல்லாச் சமயத்தவரும் சூரியனைப் புகழ்ந்து போற்றி வழிபடுவது உண்டு. அம்முறையில், முருகன் என்னும் தமிழ்க் கடவுட் டத்துவச் சிறப்பினையும் அறிஞர்கள் அனைவரும் புகழ்ந்து போற்றி மகிழ்கின்றனர்.

(4) ஞாயிறு உலகின் புறஇருளை நீக்கும்; முருகன் தன் அடியவர்களின் அக இருளைப் போக்கியருள்வன்.

(5) ஞாயிறு தீய புன்மைகளைக் காய்ந்து தூய நன்மைகளை வளர்ப்பன்; அங்ஙனமே முருகனும் கொடியோரைச் செற்றுச் செவ்வியோர்க்குத் தண்ணளிகள் இயற்றுவன்.

(6) ஞாயிற்றின் ஒளியும் வெப்பமும் உலகுயிர்களின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் இன்றியமையாதன; அங்ஙனமே

முருகனின் திருவருளும் உலகுயிர்கள் அனைத்திற்கும் இன்றி யமையாத தாக இருக்கின்றது.

(7) நீலக் கடலின் ஓரத்தில் தோற்றும் காலைச் செங்கதிரவனின் ஒளியிற் படிந்து, அவன் திரட்டிவரும் இனிய மெல்லிய காற்றினை (Ozone) நுகர்வோர், உடற் பிணிகள் நீங்கி நலம்பல பெறுவர்; அவ் வண்ணமே நீலமயில் ஏறிவரும் சேயோன் ஆகிய முருகனைத் தமது மனத்தே நினைத் துத் தியானித்து வழிபடுவோர், அவன் றன் திருவருளால் உளப்பிணிகள் அனைத் தும் ஒழிந்து உயர் நலங்கள் பல உறுவர்.

சான்றோர் ஏற்பு:

இனைய பல நுண்பொருள்கள் நனி பொருந்தி, ஆசிரியர் நக்கீரனார் அருளிய மேலைத் திருமுருகாற்றுப் படைவரிகளின் சிறப்பினை, என்னென்பது? தொன்று தொட்டு வாழையடி வாழையாக வந்த சான்றோர்கள் எல்லோருமே, இவ்வரி களின் சிறப்பினை இனிது வியந்து ஏற்றுத் தழுவிப் போற்றிப் பாராட்டி யுள்ளனர்.

மாக்கடல் நிவந்து எழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாறே

—புறநானூறு

உததியிடை கடவும்மர கதவருண குலதுரக
உபலளித கனகரத சதகோடி
சூரியர்கள்
உதயமென அதிகவித கலபகக மயிலின்
மிசை
உகமுடிவின் இருளகல ஒருசோதி
வீசுவது

—திருவகுப்பு.

இன்றெனக்கு அருளி இருள்கடிந்து
உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்;
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்து ஒன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றும்நீ அல்லை; அன்றி ஒன்றில்லை;
யார் உனை அறியகிற் பாரே?

—திருவாசகம்

நீலக் கடல்முகட்டில் நேர்உதய சூரியன்போற்
கோலக் கலாபக் குரகதமேற்—சாலவும்நீ
தோன்றி அடியேன் துயர்தீரப் போரூரா
ஊன்றி அடி என்முடிமேல் ஓது

—சிதம்பர சுவாமிகள்,

திருப்போரூர்ச் சந்நிதிமுறை

நக்கீரர்:

பழந்தமிழ் மக்கள் இயற்கையில் திளைத் தவர்; இயற்கைக் காட்சிகளைக்கண்டு இன் புற்றவர்; இயற்கை வழி வாழ்க்கையை நடாத்தியவர்; இயற்கையோடு இயைந்து இன்ப வாழ்வு நடாத்திய பண்டைத் தமிழ் மக்களின் வழிவந்தவர், சங்ககாலப் பெரும் புலவராகிய நக்கீரர். காலைப் போதில் நீலக்கடலில் தோன்றும் செங்கதிரவனின் சிறந்த பேரழகை, அவர் பல்கால் கண்டு கண்டு திளைத்து இன்புற்றனர் போலும்! அவ்வியற்கைக் காட்சி அவருக்குத் தெய் வக் காட்சியாய்த் தெரிந்தது போலும்! அதனால் அவர்தம் செந்தமிழ் உள்ளம், தெய்வத் திருவருள் உணர்வில் மிகவும் ஊன்றித் தோய்ந்து நிற்பதாயிற்று. அதன் விளைவாக அவர்தம் பாடல்களில் ஒரு சிறந்த தெய்விக மணம் கமழ்ந்து நிலவுதலை நாம் காண்கின்றோம்.

புறநானூறு :

பாண்டிய மன்னன் ஒருவனைப் பாட முற் படுகின்றார் அவர். மனிதனாகிய மன்ன னைப் பாடும்பொழுதும், அவர் உள்ளத் தில் ஊறிப் பெருகி நிற்கும் தெய்விக உணர்வு சிறந்தினிது வெளிப்படுகின்றது. “நீ தீயவர்களைச் சினந்து ஒறுத்தலில் உருத்திரனைப் போன்றவன்; வலிமையில் நம்பிமுத்தபிரானை(பலராமனை) ஒத்தவன்; புகழில் திருமாலை நிகர்த்தவன்; அன்பர் கள் நினைத்தவற்றை முடித்து நிறை வேற்றி வைப்பதில், முருகப் பெருமானைப் போன்றவன்”.

கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுநர் அடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்

—புறநானூறு, 56.

எனவரும் புறநானூற்றுப் பாடல், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

அகநானூறு:

அந்திமாலை நேரத்தில் வானம் செக்கச்செவேரெனச் சிவந்து கவின்மிக்குத் திகழ்கின்றது. அச்செக்கர் வானத்தினூடே வெண்ணிறம் வாய்ந்த பறவைகளாகிய கொக்குகள், திரண்டு வரிசையாக மேலே பறந்து செல்கின்றன. இவ்வியற்கைக் காட்சியை நக்கீரர் காண்கின்றார். தெய்விக உணர்விற் சிறந்து திளைத்து நின்ற அவர்தம் திருவுள்ளத்திற்கு, அவ்வியற்கைக் காட்சியும் முருகனின் நினைவையே எழுப்புகின்றது. அந்திமாலைச் செக்கர் வானத்தை முருகனின் விரிந்து பரந்த அழகிய மார்பாகவும்; வரிசையாகப் பறந்து செல்லும் வெண்ணிறப் பறவைகளை, முருகனின் மார்பில் அசைந்து திகழும் அழகிய முத்து மாலைகளாகவுமே, அவர் கருதிக் கண்டு களிப்புறுகின்றார்.

"நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானம் தீண்டி மீன்அருந்தும்
பைங்காற் கொக்கினம் நிரைபறை உகப்ப"

அகநானூறு—120.

ஆசிரியர் நக்கீரனாரின் அறிவாராய்ச்சி மிக்க புலமை உள்ளத்திற்குக் காலைக் கதிரவனின் உதயக்காட்சி, கடவுட் காட்சியையும் உணர்வையும் உண்டாக்கிய செய்தியைத் திருமுருகாற்றுப் படை நமக்குத் தெரிவிக்கின்றது.

ஜீன்ஜேக்ஸ் ரூஸோ:

இங்ஙனமே மேலைநாட்டில் வாழ்ந்திருந்த தத்துவநூற் பேராசிரியர் ஆகிய ஜீன் ஜேக்ஸ் ரூஸோ (1712—78) என்னும் அறிஞர் ஒருவருக்கும், காலைச் செஞ்ஞாயிற்றின் உதயக்காட்சி, கடவுள் உணர்ச்சி ஊட்டிய செய்தியை, அவரே பின்வருமாறு கூறியிருத்தல், நாம் இங்கு உணர்ந்து மகிழ்தற்குரியது.

"ஆ, பெருமாட்டி! சில சமயங்களில் எனது படிப்பறையில் தனிமையாக, யான் என் கைகளினால் கண்களைப் பொத்திக் கொண்டோ, அல்லது இரவின் இருளிலோ இருக்கும் போது, கடவுள் இல்லை என்று யான் கருதுவது உண்டு. ஆனால், அதோ பாருங்கள்; உலகைக் கவிந்து கொண்டிருக்கும் பனிப் படலங்களைச் சிதறச் செய்து கொண்டும், இயற்கையின் மினுமினுப்பான வியத்தகு காட்சிகளை வெளிப்படுத்திக் கொண்டும், உதயஞாயிறு தோன்றுகின்றது. புறத்தே கவிந்துள்ள பனிப்படலங்களை மட்டுமேயல்லாமல், என் உள்ளத்தே சூழ்ந்துள்ள அறியாமையும் ஐயமுமாகிய மேகங்களையும் கூட, அஃது அகன்றொழியுமாறு செய்கின்றது. என்னுடைய பக்தி உணர்வையும், எனது கடவுளையும், அவரிடத்தில் என் நம்பிக்கையையும், யான் மீண்டும் கண்டுணர்கின்றேன். நான் அவரை வியக்கின்றேன்; அவரை வழிபடுகின்றேன்; அவர்தம் முன்னிலையில் யானே அவரது திருவடிகளில் நெடுக விழுந்து பணிந்து வணங்குகின்றேன்".*

முடிவுரை:

நக்கீரர் கண்ட நற்காட்சியும், ஜீன் ஜேக்ஸ் ரூஸோ என்னும் தத்துவ அறிஞரின் உள்ளத்து உணர்ச்சியும், எத்துணைப் பொருத்தமுற ஒன்றி இயைந்து காணப்படுகின்றன.

—ஆசிரியர்.

---

"Ah, Madame!", Rosseau writes to an aristocratic ladv, 'Sometimes in the privacy of my study, with my hands pressed tight over my eyes or in the darkness of the night, I am of opinion that there is no God. But look yonder: the rising of the sun, as it scatters the mists that cover the earth, and lays bare the wondrous glittering scene of nature, disperses at the same moment all cloud from my soul. I find my faith again, and my God, and my belief in Him. I admire and adore Him, and I prostrate myself in His presence."

—*Bertrand Russel,*
History of Western Philosophy, p. 66.

# திருப்பாவைச் செழும்பொருள்

முன்னுரை :

சைவம், வைணவம் என்னும் இரு பெருஞ் சமயங்களும் தமிழ் நாட்டிற்கு இரண்டு கண்களைப் போன்றவை. திருவெம்பாவை, திருப்பாவை என்னும் இரண்டும், அச்சமயங்கள் ஆகிய கண்ணிற் கருமணியுள் ஆடும் பாவைகளைப் போன்ற சிறப்புடையவை. "என் இரு கண்ணே கண்ணிற் கருமணியே மணி ஆடு பாவாய்" என்றாற்போல வரும், பெரியோர் திருமொழிகள் ஈண்டுக் கருதியுணரற் பாலன.

பாவை நோன்பு :

மார்கழி மாதத்தில் வைகறையில் துயில் எழுந்து நீர்நிலைக்குச்சென்று நீராடி, மணலால் ஸ்ரீகாத்யாயநீ தேவியின் திருவுருவம் (பாவை) சமைத்துச் சந்தனம் மலர் தூபம் தளிர் பழம் ஆகியவற்றாலும், மற்றும் பல சிறந்த நைவேத்தியங்களாலும் வழிபட்டு, உலக நலங் கருதி மழை பொழிதற் பொருட்டும், தம் நலம் கருதித் தமக்கு ஏற்ற இனிய கணவர் வாய்த்தற் பொருட்டும், இளம் மகளிர் ஆகிய பாவையர், தேவியை வேண்டிக் கொள்வர்.

> "நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்"
>
> "நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்"
>
> "பிள்ளைகள் எல்லோரும் பாவைக்களம் புக்கார்."

எனவரும் சிறந்த திருப்பாவைத் தொடர்களில், 'பாவை' என்பது தேவியின் திருவுருவத்தைக் குறித்து நிற்றல் காணலாம். எனவே, இதனைப் 'பாவை நோன்பு' என வழங்குவர். 'பாவை' என்பது 'கொல்லிப் பாவை' என்புழிப் போல, ஈண்டுப் பெண் தெய்வத்தின் பிரதிமையாகிய திருவுருவத்தைக் குறிக்கும். பாவையைக் குறித்துச் செய்யப்படும் நோன்பு (வழிபாடு), 'பாவை நோன்பு' எனப் பெயர் பெற்றது.

பாவைப் பாட்டு :

பாவை நோன்பு பற்றிய பாடல்கள் ஆதல் பற்றியே, திருவெம்பாவை திருப்பாவை என்னும் பெயர்கள் ஏற்பட்டன. பெயருக்கு ஏற்ப இந்நூல்களின் ஒவ்வொரு பாடலும் "எம்பாவாய்" என்னும் தொடரினை ஈற்றிற்கொண்டு முடிகின்றது. ஆதலின் இன்னோரன்ன பாடல்களைப் 'பாவைப் பாட்டு' என்று முன்னோர்கள் வழங்கியுள்ளனர். சைவ வைணவ சமய மக்களால் மட்டுமேயன்றி, சைன பௌத்த சமயங்களைச் சேர்ந்த மக்களாலும் "பாவைப் பாட்டு" நூல்கள் இயற்றப் பெற்றுப் போற்றப்பட்டமை, யாப்பருங்கல விருத்தியுரையால் புலனாகின்றது. பிற்காலத்தில் தத்துவராய சுவாமிகள் பாடிய 'பாடுதுறை' என்னும் நூலின்கண் "சொருபானந்தர் திருவெம்பாவைகள்" வேதாந்த பரமாகக் காணப்படுகின்றன. மேலும் கடல் கடந்த பிற கிழக்காசிய நாடுகளிலுங்கூட, இந்நூல்கள் பெரிதும் போற்றிச் சிறப்பிக்கப்பட்டு வரும் செய்திகள், அறியப்படுகின்றன.

திருப்பாவையின் சிறப்பு :

பாவைப் பாட்டு நூல்களுள் திருப்பாவையின் சிறப்பு மிகவும் பெரிது. எம்பெருமானாரை "ஒருரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச்செய்யவேணும்" என்ன அவர் "திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைக்கிலும் திருப்பாவைக்கு ஆள் கிடையாது" என்று அருளிச் செய்தார் எனத் திருப்

பாவை ஈராயிரப்படி அவதாரிகை கூறு கின்றது.

பெரியாழ்வார் வயிற்றிற் பிறக்கையா லும், தானே யான தன்மையினுலும், ஞான பக்திகள் கணந்தோறும் பெருகப் பெற்றுப் பிறங்கிய ஸ்ரீ ஆண்டாளின் திருப் பாவைக்குக் கருத்து: "மார்கழி நீராடுதல் என்ற ஒரு தலைக்கீட்டாலே எம்பெருமான் பக்கலிலே சென்று உனக்கு அடிமையாய் இருக்கிற இந்த ஆத்மா அநர்த்தப்படாத படி பண்ணி இதுக்கு ஸ்வரூபமான கைங் கரியங்களையும் கொடுத்து, அவை தாமும் ஆன்மா இருக்கும் அளவும் உளவாகும்படி பண்ணியருள வேணும்" என்று அபேட் சித்தல் ஆகும்.

ஆண்டாள் சிறப்பு:

திருப்பாவை அருளிச் செய்த ஆண் டாளின் அளப்பரும் சிறப்புக்களை உரை யாசிரியர்கள் பல வகையிற் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

"திருத்துழாய் பரிமளத்தோடு கூட முளைக்குமாபோலே, ஆண்டாளும் பால்ய யௌவநாவத்தைகள் தோறும் பர பக்தி பரஞான பரம பக்திகளை அதிகமாக உடையவள். ஆகையாலே, பகவத் விஷயப் பிராவண்யம், அல்லாத ஆழ் வாரைக் காட்டில் இவளுக்கு மிகவும் அதிச யித்திருக்கும்."

"பத்து ஆழ்வார்களுடைய ஸார பூதை யாகத் திகழ்பவள் ஆண்டாள். பதின் மருடைய ஞானமும் ஸ்த்ரீதனமாக இவள் பக்கலிலே யிறே குடி கொண்டது. பத்துப் பேர்க்கு ஒரு பெண்பிள்ளையிறே."

"ஆழ்வார்களுக்கும் எம்பெருமான் மயர் வற மதிநலம் அருளவேண்டிற்று. எம் பெருமானை எழுப்பித் தன் குறையை எம் பெருமானுக்கு விண்ணப்பம் செய்கையால், இவள் தான் எம்பெருமானுக்கு மயர்வற மதிநலம் அருளினுள்."

"இளையபெருமாள் படி ஆழ்வார்களது. ஸ்ரீபரதாழ்வான்படி பெரியாழ்வாருடையது. ஸ்ரீசத்ருக்நாழ்வான்படி அவர் திருமகளது. ஆழ்வார்களும் இளையபெருமாளும் பகவத் அநுபவத்தை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீபர தாழ்வானும் பெரியாழ்வாரும் பகவத் ஸம்ருத்தியை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீசத்ருக்நாழ்வானும் ஆண்டாள் நாச்சி யாரும், பாகவத சேஷத்வத்திலே நின்றுர் கள்."

"தேகாத்மாபிமாநிகளுக்கும் ஆத்ம ஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணு வோட்டை வாசி போரும்: ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசி போரும். பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனை வாசி போரும்."

"அவர்களில் இவளுக்கு வாசி என்? என்னில்; "அநாதிமாயயா" என்கிற படியே, ஸம்ஸாரத்திலே யுறங்குகிறவர் களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக்காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள். இவள் தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். ஆகையாலே, அவர்களைக் காட்டிலும் இவள் மேலானவள் ஆவாள்."

"அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்தஎன் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கு என்றே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்
இற்றியே"

என்கிறபடியே, பிறந்ததன் தொடக்கமே பிடித்து ஆண்டாள் பகவத் குணங்களிலே ஈடுபட்டுப் போந்தாள். மேலும் புருஷன் புருஷனைக் கண்டு ஸ்நேகிப்பதனைக் காட்டி லும்,ஸ்திரி புருஷனைக் கண்டு ஸ்நேகிக்கை பள்ளமடை யாகையாலே, ஆழ்வார்களிற் காட்டிலும் எம்பெருமான் பக்கல் பரபக்தி யுடையவள் ஆண்டாள்."

"அஞ்சு குடிக்கொரு சந்ததியாய்,
ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மை
யளாய்ப்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து."

மேலும், இவள் தாட பிராம்மணியாய் இருந்து வைத்தும், யாகத்திலே விர தத்தை மேற்கொண்டவர்கள் தேவதத் தாதி நாமங்களைத் தவிர்த்து, யாகம் முடி யும் அளவும் 'யஜமானன்' என்றும் 'அத்வர்யு' என்றும் 'ஹோதா' என்றும் இத்யாதி நாமங்களே யாகிருப்போலே, இங்கே ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், இங்குள்ள பெண்களே இடைப் பெண் களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தி யாகவும், வட பெருங்கோயிலே ஸ்ரீ நந்த

கோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவன் கிருஷ்ணனாகவும் அநுசந்தித்து, தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப் பாடியில் நினைவின் முதிர்ச்சியாலே குடிபோய், அநுகாரம் முற்றி அவை தாமேயாய், இடை நடையும், இடை முடியும், இடைப்பேச்சும், முடை நாற்றமுமாய் மாறி நின்று, ஸ்ரீஆண்டாள் இந் நூலை அருளிச் செய்கின்றாள்.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்—
கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

உரைத்தொகுப்புச் சுருக்கம் :

இவ்வரும் பெரும் நூலுக்குப் பண்டைப் பேரறிஞர்கள் அருளிச் செய்த வியாக்யானங்கள் பல விரிந்து பரந்துள்ளன. அவை "மொழிக்கு மொழி தித்திப்பாக" அமைந்துள்ளன. அவ்வரிய பெரிய உரை நுட்பங்களில் யாவரும் அறிந்துணர்ந்து மகிழத் தகுந்தனவும், நினைவிற் பதித்துக் கொண்டு என்றும் சுவைத்து இன்புறத் தக்கனவுமாக உள்ள ஒரு சிலவற்றை மட்டும், உரைத் தொகுப்புச் சுருக்கமாக ஈண்டு நாம் இயன்ற அளவு காண்போம்.

மார்கழித் திங்கள்
மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் !
போதுமினோ நேரிழையீர் !
சீர்மல்கும் ஆய்ப்பாடிச்
செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேற் கொடுந்தொழிலன்
நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி
யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண்
கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே
நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப்
படிந்தேலோர் எம்பாவாய். (1)

மார்கழித் திங்கள்: மிகு வெப்பமோ மிகு குளிர்ச்சியோ இல்லாதது. நாளுக்கு வைகறையைப் போல, ஆண்டுக்கு மிகவும் சிறந்தது. 'மாதங்களில் நான் மார்கழியாகிறேன்' என்று அவன்தானே அருளிச் செய்கையால் வைஷ்ணவமான மாஸம். மற்றவர்களைக் காட்டிலும் பெருமானுக்கு உள்ள முதன்மைபோல மாதங்கள் எல்லாவற்றுக்கும் முதலான மாதம்.

மதிநிறைந்த : மாதம் நேர்ப்பட்டாற் போலப் பக்கமும் நேர்ப்பட்டது. ஒருவரை ஒருவர் முகம்கண்டு அநுபவிக்கைக்கும், எல்லாரும் கூடிச் சென்று கிருஷ்ணனை எழுப்புகைக்குமாக, நிலா உண்டாகப் பெற்றது.

நன்னாளால் : இறைவனின் திருவருளுக்கு இலக்காகப் பெற்றநாள் அன்றோ, ஆத்மாவுக்கு நன்னாள் ஆகிறது.

நீராட : கிருஷ்ணனின்மேற் காதலால் பிறந்த வெப்பம் ஆறும்படி போய்க் குளிக்க. தமிழரும் கலவியைச் 'சுனையாடல்' என்பர்.

போதுவீர் போதுமினோ : இச்சையே அதிகாரம். 'போதுவீர்' என்று வெறுப்புடையாரையும் சேர்த்துக்கூறும் காரணம், அவர்களைத் திருத்துகைக்கு. பிராட்டியைப்போல இவர்களும் கடகர் ஆகையாலே, திருத்துகை இவர்களுக்கு இயல்பு.

'வம்மின்' என்னாமல் 'போதுமினோ' என்றது, அவர்கள் முன்னே போகத் தாங்களும் வாழும்படி அவர்கள் நடையழகு கண்டு பின்னே போவதைக் குறிக்க.

நேரிழையீர்: விலக்ஷணமான ஆபரணத்தை யுடையீர்! (1) கலவிக்குப் போகிற விரைவின் மிகுதியால் அவயவங்களை மாறாடி ஆபரணங்கள் பூணுவதால் வரும் புதுக்கணிப்பு. (2) அவன் எப்போது வந்து மேல்விழும் என்று அறியாதபடியாலே, எப்போதும் அலங்கரித்தபடியிருத்தல். (3) முன்பு கிருஷ்ணனோடு கலந்த கலவியாற் பிறந்த புகர் இப்போதும் தோற்றும்படி இருத்தல்.

சீர்மல்கும் ஆய்ப்பாடி : இவ்வூரில் ஐஸ்வரியம் வழிந்துபோய் வேறோர் ஊர்க்கு வெள்ளமிடப் போந்திருக்கை. அந்தகாரத்தில் தீபம்போலப் பிரகாசிக்கும் கிருஷ்ணனுடைய இங்குத்தை நீர்மை, பரமபதத்திலும் சென்று அலை எறியும்படியாய் இருக்கை. நாழிப்பால் நாழிநெய் போதருகை என்றுமாம்.

ஆய்ப்பாடி: பரமபதம் போலே தேவதாந்தர பரிக்ரஹம் பண்ணிச் சென்று அநுபவிக்க வேண்டாத ஊர்; இடக்கையும் வலக்கையும் அறியாத இடையர் வர்த்திக்

கிற ஊர்; பெருமாள் குணங்கண்டு உவக்கும் ஊர்போல் அன்றியே கிருஷ்ணன் தீம்பு கண்டு உவக்கும் ஊர்.

செல்வச் சிறுமீர்காள்: இவ்வாத்மாவுக்கு நிலைபெற்ற செல்வமாவது, பகவத்ப்ரத்யாஸத்தி. கிருஷ்ணனோடு ஒத்த பருவமாய் இருக்கை. அந்ய சேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்கள் இன்றி யிருக்கை.

கூர்வேற்கொடுந் தொழிலன் நந்தகோபன்: முன்பு பசும்புல் சாவ மிதியாதவர் பிள்ளைகள் பிறந்த பின்பு அவர்கள் மேல் உண்டான வாத்ஸல்யத்தால், 'அவர்களுக்கு என் வருகிறதோ' என்று அஞ்சி வேலைப் புகர் எழக்கடைந்து, தொட்டிற் கீழே எறும்பு புகினும் சிங்கத்தின் மேலே விழுமாப்போலச் சீற்றத்தின் மிகுதியால் உதிரக் கையாதல் நந்தகோபன் - பிள்ளையைக் கண்ட ப்ரீதியாலே ஆநந்தத்தை யுடையவன்.

ஏரார்ந்த கண்ணி யசோதை: பிள்ளையை மாருதே பார்த்துக் கொண்டிருக்கையாலே அவ்வாசி யடையக் கண்ணிலே தோற்றும்படி யிருக்கை.

இளஞ்சிங்கம்: செருக்கும் மேனுணிப்பும் தோன்ற நிற்கும் நிலை: சிறுமியர்க்கு ஒத்த பருவமாய் இருக்கை.

கார்மேனி : நம்முடைய சகல தாபங்களும் ஆறும்படியான வடிவு. செங்கண் அத்திருமேனிக்குப் ப்ரபாகமான சிவப்பை யுடைய திருக்கண்கள்.

கதிர்மதியம் போல் முகத்தான்: ப்ரதிகூலர்க்குக் கைப்பற்ற இயலாதவனாய், அநுகூலர்க்குக் கிட்டி நின்று அநுபவிக்கலாம்படி யிருக்கை. பிரதாபமும் குளிர்ச்சியும் உடையது; பிரகாசமும் கண்கவர் கவினும் உடையது. அவ்வளவிலும் உபமானம் நேர்நிற்க மாட்டாமையாலே உபமேயம் தன்னையே சொல்லுகிறது.

நாராயணனே: ஸர்வேசத்வம் பெண்களுக்கும் தெரியும்படியாயிறே இவ் அவதாரந்தான் இருப்பது. நோன்புக்கு அங்கமாக ஜபிக்கும் மந்த்ரமுமாம். வைகிறவனுக்கும் பேர் சொல்லி வைய வேணும். இத்தனையிறே காகமும் சிசுபாலனும் செய்தது.

நமக்கே: அவனாலேதான் பேறு, வேறு காப்பாளராலே அல்ல என்று அநந்ய கதிகளாய் இருக்கிற நமக்கே: கைம்முதல் அற்றவராய் அவன் கை பார்த்திருக்கிற நமக்கே: அன்பில்லாத இழிந்த நமக்கும் என்றுமாம்.

பறைதருவான்: இத்தலை இசையாத அன்றும் தான் விடமாட்டாத வாத்ஸல்யம். நாட்டுக்குப் பறை (நோன்பு) என்று ஒரு வியாஜமாய், தங்களுக்கு விருப்பமான அடிமையினை யாய்த்து நினைக்கின்றது.

'தருவான்' என்றது, ப்ராப்தி யுண்டானாலும், அவன் தரக்கொள்ள வேண்டும் என்பது.

பாரோர் புகழ: நாடு முழுவதும் மழையின்மை தீர்ந்து நீர் நிறைந்தது என்று கொண்டாட. படிந்து—இந்நோன்பிலே ஈடுபட்டு "நீராடப் போதுவீர் போதுமினோ" என்று அந்வயம்.

ஏலோர் எம்பாவாய்: 'ஏல்' இப்படியாகில் என்றபடி. 'ஏல்' என்றது ஸம்போதனை (விளி). ஓர் புத்தி பண்ணு. 'எம்பாவாய்' என்றது எங்கள் சந்தஸ்ஸைப் பின்செல் என்றபடி. அன்றிக்கே செய்யுள் அடிக்குறைவுக்கு நிறைவு தரும் இடைச் சொற்களுமாம். 'பாவாய்' என்றது ரதியைச் சொல்லிற்றுகவுமாம். எங்கள் திருவுள்ளத்திற்கு இயைந்ததனைப் பண்ணுக என்னவுமாம்.

வையத்து வாழ்வீர்காள்!
நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள்
கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற
பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம்!
நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம்!
மலரிட்டு நாம்முடியோம்!
செய்யாதன செய்யோம்!
தீக்குறளை சென்றோதோம்!
ஐயமும் பிச்சையும்
ஆந்தனையும் கைகாட்டி,
உய்யுமா றெண்ணி!
உகந்தேலோர் எம்பாவாய்! (2)

வையத்து வாழ்வீர்காள்: ஸர்வேச்வரன் திருவாய்ப்பாடியிலே கிருஷ்ணனாய் வந்து திருவவதரித்துத் தன்னைத் தாழவிட்டுப் பரிமாறுகிற காலத்திலே வாழப் பிறந்த பாக்யவதிகாள்.

வாழ்வீர்காள்: கிருஷ்ணாவதாரத்துக்கு முன்னாதல் பின்னாதல் அன்றிக்கே ஸம

காலத்திலே, வேறு இடங்களிலே யன்றி ஆயர்பாடியிலே, அவனுடைய கடாக்ஷத்துக்கு இலக்காகும்படி ஒத்த பருவமாகப் பிறந்திருக்கை. வர்த்தநம் என்றும் வாழ்ச்சி என்றும் இரண்டில்லாமல் அவன் நித்தியவாசம் பண்ணுமிடத்தில் வாழப் பெற்றவர்களே. இஃதொரு பாக்யாதிசயம் இருக்கும்படி என்!

சொல்லுகிற தங்களுக்கும் வாழ்ச்சி ஒத்திருக்க "வாழ்வீர்காள்" என்று பிறரைச் சொல்லுகிறது என் என்னில்; தாங்கள் தனியே அநுபவிக்கும் அநுபவம் சுவையநுபவமாய்த் தோற்றுமையாலே, அதனைச் சுவையாக்கித் தருமவர்களைக் கொண்டாடுகின்றார்கள்.

நாமும்: நாராயணனே நமக்கே பறை தருவான் என்று தெளிந்த அறிவும், உறுதியும் உடைய நாமும்.

நம்பாவைக்கு: நம்முடைய நோன்புக்கு. பிறர் அழிதற்காகச் செய்யும் யாகம்போல் அன்றிக்கே, கிருஷ்ணனும் அடியவரும் வாழ்வதற்காகச் செய்யும் நோன்பு.

செய்யும் கிரிசைகள்; ஆரம்பித்துத் தவிருமவை யல்ல; பத்தும் பத்தாகச் செய்தற வேணும்; 'மடல்' போலக் காட்டிவிடுக்கும் அதுவல்ல.

கேளீரோ: பகவத் விமுகர் கோலாஹலத்திலே கிருஷ்ணநுபவத்துக்கு இத்தனை பேர் உண்டாவதே! என்ற மகிழ்ச்சியாற் கூறுதல்; சிரவணந்தானே பிரயோஜனமாய் இருக்கிறபடி. சொல்லுகிறவர்கள் தான் ஆசார்ய பதம் நிர்வகிக்கைக்காகச் சொல்லுகிறார்கள் அல்லர்; கேட்கிறவர்கள் தாங்கள் அஞ்ஞாதமாய்க் கேட்கிறார்கள் அல்லர்; இங்ஙனே யல்லது போது போகாமல் இருந்தபடி. நாங்களும் வாய் படைத்த லாபம் பெற்று, நீங்களும் செவி படைத்த லாபம் பெற வேண்டாவோ? என்றுமாம்.

பாற்கடலுள்: பரமபதத்தினின்றும் அன்பர்களைக் காப்பதற்காகத் திருப்பாற் கடலளவும் ஒரு பயணம் எடுத்துவிட்டு உலகைக் காத்தருளும் சிந்தையிலே அவகாஹிதனாய் ஆர்த்த த்வநிக்குச் செவி கொடுத்துக் கொண்டு கிடக்கிறபடி.

பையத்துயின்ற பரமன்: பிராட்டிமாரோடு போகத்துக்கு இடங் கொடாதே 'ஆராலே ஆருக்கு என்ன நலிவு வருகின்றதோ?' என்று அதிலே மனம் ஈடுபட்டுக் கொண்டு நிற்கச் சாய்ந்தபடி.

கிருஷ்ணனை அநுபவிக்கப் புகுந்து க்ஷீராப்தி நாதனைச் சொல்லுகிறதென்? என்னில்; கிருஷ்ணனைச் சொல்லிப்பண்டே சங்கித்திருக்கிற இடையர், நமக்குத் தைவம் தந்த இச்சேர்த்தியை அழிக்கின்றார்களோ என்று பயப்பட்டு, கிருஷ்ணனுக்கு மூலமான க்ஷீராப்தி நாதனைச் சொல்லுகின்றார்கள்.

அடிபாடி: மகரிஷிகளோடு அல்லாதாரோடு வாசியறச் சேஷத்வம் ஸமாநமாய் இருக்கையாலே திருவடிகளைப்பாடி; அவனுடைய வடிவழகைப் ப்ரீதி ப்ரேரிதைகளாகக் கொண்டு பாடி. ஸ்தநந்தயப் பிரஜை தாய் முலையிலேயிறே வாய்வைப்பது. அதுபோல இவர்களும் திருவடியைப் பாடினார்கள்.

நெய்யுண்ணோம் பாலுண்ணோம்: "உண்ணுஞ் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்" என்றிறே இருப்பது. விரகதசைக்கு அநுகுணமாக ப்ரணய ரோஷம் தோற்றச் சொல்லுகை. இடையர் பேச்சில் குடியோம் என்னாது உண்ணோம் என்கை. இவர்கள் உண்ணாதொழிந்தால் பட்டினி விடுவான் அவன்போல காணும். ஆகையால் இவர்கள் இங்ஙனே சொல்லுகிறது.

நாட்காலேநீராடி: அவன் போகார்த்தம், அவனைப் பெறுகைக்குச் சாதனம், விரக தாபம் மாறுகைக்கு. பிராம முகூர்த்தத்திலே நீராடக் கடவோம். அதிலே அவனைப் பிற்பாடன் ஆக்குவோம். "ஓதி நாமம் குளித்து உச்சி தன்னால் ஒளிமாமலர்ப் பாதம் நாளும் பணிவோம் நமக்கே நலம் ஆதலில்" என்னும் துடிப்பு பிறவித் துன்பம் ஆகிய வெப்பம் ஆறுமபடி, ஸ்ரீ பராதாழ்வானைப் போலே அபர ராத்திரியில் குளிக்கை.

மையிட்டெழுதோம்: இனி அஞ்சனம் இடுவதும் மங்களார்த்தமாகவிறே. இவர்கள் அஞ்சனம் எழுதப் புக்கால் குறையும் தலைக் கட்டுவான் அவனேயாவன்.

மலர் இட்டு நாம்முடியோம்; இனி, பூவுக்குத் தான் நாற்றங் கொடுக்கைக்காக ஆயிற்றுப் பூ முடிப்பது; அது செய்யக் கடவோ மல்லோம் என்கை. அவன் தானே வந்து சூட்டில் செய்யலாவதில்லை.

செய்யாதன செய்யோம்: விதியுண்டாய் வசநலித்தமே யாகிலும் பூர்வர்கள் ஆசரித்த அநுஷ்டானமே ஒழிய "வேறு செய்யக் கடவோமல்லோம்; நம்மில் நாம் "நப்பின்னை நங்காய்" என்றும், "நாயகப் பெண் பிள்ளாய்" என்றும், "பேய்ப் பெண்ணே" என்றும் ஒருவர்க் கொருவர் இட்டிடு கொண்டு சொன்னவைகளைக் கிருஷ்ணன் செவிப்படுத்தக் கடவோம் அல்லோம்.

ஐயமும் பிச்சையும்: ஐயமாவது யோக்ய விஷயத்திலே குருவாக வ்யயிக்குமது; பிச்சையாகிறது பிரமசாரிகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும் இடுமது. ஐயம் விபுவான கிருஷ்ணனை அநுபவிக்கை. பிச்சை அணு ஸ்வரூபரான ததீயரை அநுபவிக்கை. ஐயம் ஈச்வரனுடைய ஸ்வரூப குண விஷய ஞானம். பிச்சை ஆத்ம ஸ்வரூப ஞானம்.

ஆந்தனையும்: அவர்கள் கொள்ள வல்லராகுந் தனையும்; அர்த்திகள் எல்லோருக்கும் கொடுத்து இனி அர்த்திகள் இல்லை என்னும் அளவுமாம்.


கைகாட்டி: ஸர்வத்தையும் கொடுத்தும் கூட, ஒன்றும் செய்யப் பெற்றிலோம் என்றிருக்கை.

உய்யுமாறு எண்ணி: பகவத் விஷயத்தில் உள்புக்க அன்றிறே இவன் உஜ்ஜீவித்தானாகிறது.

எண்ணி உகந்து: மநோரத வேளையே தொடங்கி ரஸிக்கிறபடி. "எண்ணியுகந்து செய்யுங் கிரிசைகள் கேளீரோ" என்று அந்வயம்.

(தொடரும்)

—ஆசிரியர்.



நமது அறநிலைய ஆணையர் திருமிகு. ஆ. இராதா கிருஷ்ணன், M.A., B.L., அவர்கள், சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி கோயிலில், வரவேற்கப் பெறுதல் (16—10—67).

# ஈசர் உருவம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்கள்,
தேவகோட்டை.

சிவபெருமானை ஈசர், ஈசுவரர், ஈசானர் முதலிய 'திருப்பெயர்களால் வேதாகமங்களும், செந்தமிழ்த் திருமுறைகளும் போற்றிப் பரவுகின்றன. "ஈசர்" என்பது, "ஆளுகின்றவர்" என்னும் பொருளையுடையது. இது ஈசாவாசியம், அதர்வ சிகை யாதிய உபநிடதங்களிற் காணப்பெறுவதாகும். "எங்கும் ஈசன் எனாதவர்க்கில்லையே" என்று, ஈசநாம செபத்தின் சிறப்பை ஆளுடைய அரசர் அருளியுள்ளார்.

எல்லாச் செல்வங்களையும் தனது உடைமைகளாகக் கொண்டிருப்பவன் ஈசுவரன். அவனது உடமைகளை அவன் தரச் சில காலம் வரை ஆன்மாக்கள் அநுபவித்து வருகிறார்கள். ஈசுவரனது ஆணைக்குட்பட்டே ஆன்மாக்களுக்கு அவ்வுடைமைகளில் தொடர்பும் பிரிவும் நிகழுமாதலின், ஆன்மாக்களை அவனது அடிமைகளென்று ஞான நூல்கள் கூறும். "எல்லாம் உன் அடிமையே", "எல்லாம் உன் உடைமையே" என்பது, தாயுமான அடிகள் திருவாக்கு. "உடையாய் அடியேன் உன் அடைக்கலமே" என்பது திருவாசகம்.

பரமேசுவரராகிய சிவபெருமானது "ஈசானர்" என்ற திருப்பெயருக்கு உபநிடதங்களில் பல பொருள்கள் கூறப்பெற்றுள்ளன. "எல்லா உலகங்களையும் ஆளுவனவும் உண்டாக்குவனவுமாகவுள்ள மேலான சத்திகளை யுடையவர் எவரோ, அவரே 'ஈசானர்' என்பது, அதர்வ சிரசிற் காணப்பெறுகின்றது.

உலகுயிர்களைக் கடந்து சொருப நிலையில் அகளமாய் இருக்கின்ற பரசிவம் உயிர்களின் உய்திப்பாட்டில் திருவுளம் வைத்து அவ்வுயிருலகுகளைக் கலந்து சகளமாய் உருவங் கொண்டு வந்தருளும்.

"அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீ பற
தானாகத் தந்ததென் றுந்தீபற"

என்று திருவுந்தியாரும்,

"அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகில் தங்கி—நிகளமாம்
ஆணவ மூல மலமகல ஆண்டனன்காண்
மாணவக என்னுடனாய் வந்து"

என்ற திருக்களிற்றுப்படியாரும், இவ்வுண்மையை உணர்த்துவனவாகும்.

இங்ஙனம் சொரூபசிவமே, தடத்த சிவமாக வந்து அருள் புரிகின்ற பெருமையைத் திருமூல தேவநாயனார் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து இருபதாவது செய்யுளில் தெளிவு செய்தருளுகின்றார். அச்செய்யுள்,

"முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்றம் மலையது தானே"

என்பதாகும்.

"எங்கிருந்து பிறந்தோம்? எவரால் நிலையுறுகின்றோம்? எவரில் ஒடுங்குகின்றோம்? எவரால் இன்பதுன்பங்களை ஏற்று நுகர்கின்றோம்? எவரால் கட்டு நீக்கம் எய்துகின்றது? என்று கடவுள் வாதிகள் கூறுவார்" எனச் சுவேதாசுவதர உபநிடதம் உரைத்தது. "விண் முதல் பூதலம், ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும், படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை" என்பது, நம்மை ஆளுடைய பிள்ளையார் அருண்மொழி.

படைத்தல் முதலிய ஐந்து தொழில்களும் பரமசிவனுக்குச் சுதந்தரமானவையே யெனினும், அழித்தற்றொழிலே அவனது பரத்துவத்தைப் புலப்படுத்தி நிற்பதாதலின், 'முடிவும்' என்று அதனை முன்னே வைத்துக் கூறினார் ஆசிரியர். முடிவும் பிறப்புமாகிய இரண்டும் கூறவே, இடைப்பட்டனவாகிய 'நிலை' முதலிய மூன்றும் கூறியதாக ஆயிற்று. "முன்னே படைத்த" என்பதனால் காலங்கடந்த அநாதி குறிக்கப் பெற்றது.

'அடிகள்' என்னும் சொல்லால் ஆண்டவனை உணர்த்திச் சிவசத்தியையும் தனக்குள் ஒடுக்கிக்கொண்டு தானொருவனேயாய் அவன் நிற்கும் கடையூழிக் காலத்து ஒடுக்கத்தையும் அதன்பின் நிகழும் மறுபடைப்பையும் இங்கே ஆசிரியர் நினைவுபடுத்துகின்றார். கடையூழி யொடுக்கமொன்றே பரசிவத்தால் நிகழ்த்தப் பெறுவதென்பதும், இடையூழிகளில் நிகழும் ஒடுக்கங்கள் மற்றையோராலும் நிகழ்த்தப் பெறுவன வென்பதும் அறியத்தக்கனவாகும்.

உயிர்களை அநாதியே பற்றி நிற்கின்ற ஆணவ மலத்தைக் கெடுத்துக் கன்மங்களை நுகர்வித்தொழித்து, மாயைத் தொடர்பை நீக்கிக் கரையேற்றுவதற்காக முடிவையும் பிறப்பையும் மாறிமாறி அவற்றிற்குத் தந்தருளுவது இறைவனது செயல். முடிவு என்பது, அவன் எல்லாவற்றையும் தன்னகத்தே ஒடுக்கிக் கொள்ளுவதையும், பிறப்பு என்பது அங்ஙனம் ஒடுக்கிக் கொண்டவற்றை மீண்டும் படைப்பதையும் உணர்த்தும்.

வேதாகமங்கள் சிவபெருமானால் அருளிச் செய்யப் பெற்றவை. வேதத்தில் ஒழுக்க நெறியும், ஆகமத்தில் உய்யும் நெறியும் உரைக்கப் பெற்றுள்ளன. வேதாகமங்கள் ஞானவடிவினனாகிய சிவபெருமான் மகிழ்ந்துறையும் இடங்களாகும். இதனாலேயே வேதாகமங்களைச் சிவபெருமானது திருமேனிகளாக வைத்துப் பூசிப்பது மரபாயிருந்து வருகின்றது. அறநெறியாகிய வேதாகமங்கள் சிவபெருமானால் அருளிச் செய்யப் பெற்றன என்பதைவிட, அவை சிவபெருமானது நிலைக்களங்கள் என்பது சிறந்ததாகையால், "அடிகள் உறையும்" என உறைதலை விதந்து கூறினார்.

வேதாகம உண்மைகள் கலையறிவுக்குப் புலப்படுவனவல்ல. திருவருளே கண்ணாகக் காண்பவர்க்கு மட்டும் தெளிவுறுவன. "ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி" என்பது, சிவஞானபோத உரைப்பாயிரம். எனவே, திருவருளில் அடங்கி நின்று அது காட்டக் காணும் மெய்ஞ்ஞானியரது காட்சியே, உண்மைக் காட்சியாகும். இவரைத் "தவந்தரும் ஞானத்தோர்" என்று அருணந்திசிவம் அருளிச் செய்கின்றார்.

இத்தகைய ஞான நாட்டத்தினர் "வானத்தில் உண்டாகிற இடி மின்னலையும், அதன் ஓசையையும், மணமலர் மிக்க மலையையும் கடலையும், ஈசர் உருவங்களே என்று காண்பார்கள்" எனப் பின்னிரண்டடிகளில் ஆசிரியர் அருளியுள்ளார். சொரூப சிவம் தடத்த சிவமாக வருகின்றபொழுது அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளையும் கொண்டு எழுந்தருளியிருக்கும்.

இத்திருமந்திரத்தில் "அடிகள் உறையும் அறநெறி" என்பதுசிவபெருமானது ஞான வடிவத்தை உணர்த்தி அவரது சொரூப நிலையை அறிவித்தது. தடத்த நிலையில் முதற்படியாகிய அருவத் திருமேனியை இடி முழக்கமும், இரண்டாவதாகிய அருவுருவத் திருமேனியை மின்னலும், மூன்றாவதாகிய உருவத் திருமேனியை மலை—கடல்களும் உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

காட்சிக்கும் கருத்துக்கும் உட்படுகின்ற எல்லாப் பொருள்களையும் அவ்வப் பொருள்களாகவே காண்பது, நம்மனைய உலகியல் நெறியாளர் இயல்பு. அங்ஙனமின்றி எல்லாப் பொருள்களையும் இறைவனது திருவுருவங்களாகவே மெய்ஞ்ஞானியர் கண்டு இன்புறுவர். "பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே" என்பார் தாயுமானப் பெருந்தகை. "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே, பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" என்பது சிவஞான சித்தியார்.

மன வாக்குக் காயங் களுக் கெட்டாது கடந்த நிலையிலிருக்கும் கடவுளை எல்லாவற்றிலும் கண்டு களிக்கும் இயல்பு, யாருக்கும் எளிதிற் கைகூட மாட்டாதென்பதை "நாடில்" என்ற ஒரு சொல்லை வைத்து உணர்த்தியும், காண்டற்கரிய கடவுளாயினும் கருதுவார்க்கு ஆற்ற எளியனாயிருப்பவன் அவன் என்பதை, இடியோசையாயும் மின்னலாயும் மலையாயும் கடலாயும் அவன் காட்சிதரும் இயல்பில் வைத்து அறிவித்தும், ஆசிரியர் தெளிவுறுத்தி யுள்ளார்.

> "ஓதி யாருமறி வாரிலை ஓதி உலகெலாம்
> சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்
> வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெரி காற்றுமாய்
> ஆதி யாகிநின் றானுமை யாறுடை ஐயனே"

என்னுந் திருஞான சம்பந்தப் பெருந்தகையார் திருவாக்கை, இத்திருமந்திரத்துடன் ஓதியுணர்ந்து பயன் பெறுவோமாக.

# ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹம்

(மகாவித்வான் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

(முற்றொடர்ச்சி)

வான்மீகி நாரத ஸம்வாதத்தில் இது நான்காவது வினு. குணவான் யாவன்? வீர்யவான் யாவன்? தர்மஜ்ஞன் யாவன்? என்னும் மூன்று வினுக்கள சென்றன. க்ருதஜ்ஞன் யாவன்? என்கிற இந்த நான்காவது வினு இனி விவரிக்கப் படுகின்றது.

**க்ருதக்நனுடைய கொடுமை:**

செய்த நன்றியை மறவாதவனுக்கு க்ருதஜ்ஞனென்று பெயர். மனிதர்களுக்கு உரிய குணங்களுள் இக்குணமே முதன்மை பெறும். "எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டாம் உய்வில்லே, செய்நன்றி கொன்ற மகற்கு" என்பது திருக்குறள். வடமொழியறநூல்களும் "க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:" என்று அறைகின்றன. எல்லாப் பாவங்களுக்கும் பிராயச்சித்தங்களினுல் போக்கடியுண்டு; செய்ந்நன்றி மறக்கை, அல்லது செய்ந்நன்றி கொல்லுகையாகிற பாவமொன்றுக்கு மாத்திரம் பிராயச்சித்தம் ஒரு சாஸ்திரத்திலும் காணக் கிடைக்காதென்றே, வடநூலாரும் தமிழ் நூலாரும் ஒரு மிடருகக் கூறியுள்ளார்கள்.

**ஸங்கல்ப ஸூர்யோதய ஸ்ரீஸூக்தி:**

ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் வேதாந்த தேசிகர் இவ் விஷயத்தைச் சிறிது விவரித்து மிக விசித்திரமாகக் கூறியுள்ளார். பிறர் செய்த உபகாரங்களே மறப்பது என்கிற அளவிலே நில்லாமல், உபகாரம் செய்தவர்களுக்குப் பிரதியாக அபகாரங்களேச் செய்பவன் க்ருதக்நன் எனப்படுவான்; அவன் பஞ்ச மகாபாதகிகளிற் காட்டிலும் மேம்பட்டவன். என்றைக்கோ செய்து கழிந்த உபகாரங்களே மறப்பதென்பது கிடக்கட்டும்; செய்துகொண்டேயிருக்கும் உபகாரங்களே மறப்பவனும், அவ்வுபகாரங்களுக்குப் பிரதியாகத் தீங்கிழைப்பவனும் அவனினும் மேம்பட்ட பாதகி. இதுவுங்கிடக்க; 'இவர் நாளேக்கு நமக்கோர் பேருதவி செய்யப்போகிருர்' என்று தெரிந்துகொண்டு, முந்தியே அப்பெரியோர்க்குத் தீங்கிழைப்பவன் பாதகிகளில் மிக மேலானவன் என்றபடி.

**அசேதனங்களிடத்திலேயே க்ருதஜ்ஞதை காணவெளிது:**

க்ருதஜ்ஞதை என்னும் குணம் வாய்ப்பதரிது. இப்பெருங் குணத்தை நாம் அஃறிணைப் பொருள்களிடத்துக் காணமுடியுமேயன்றி, உயர்திணைப் பொருள்களிடத்துக் காண்பது மிகவும் அரிது என்று கருதி ஒரு பெரியார் கூறுகிருர், "நின்று தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலேயாலே தான்தருதலால்" என்று. தென்னே மரங்களுக்கு நாம் உமிழ்நீர் முதலிய அற்பமான நீர்களே யிடுகிருேம்; இதற்குப் பிரதியாக அவை நமக்கு நல்கும் நீர் மிக மதுரமானதென்பதைக் காணுகின்ருேம். இத்தகைய க்ருதஜ்ஞதாகுணம் உலகில் சில வ்யக்திகளிடத்தில்தான் காணமுடியும். இராமபிரானிடத்துக் காணும் இக்குணம் லோகோத்தரமானது.

**இராமபிரானது க்ருதஜ்ஞதையின் ப்ரஸ்தாவம்:**

அயோத்தியா காண்டத்தில் உள்ள ஒரு சுலோகமானது (1-11), இராமபிரானுடையதான இக்குணத்தை நன்கு வெளியிடுகின்றது. ஏதேனும் ஒருவிதத்தில் யாரேனும் ஓர் உதவி செய்தாலும் அதனுல் எப்

போதும் உள்ளம் பூரித்திருப்பதாகவும், நூற்றுக்கணக்கான தீங்குகள் இழைத்தாலும் அவற்றைச் சிறிதும் நெஞ்சிற் கொள்வது இல்லையாகவும், இந்தச் சுலோகத்தில் ஸ்ரீராமகுணாதிசயம் கூறப்பட்டுள்ளது. இதில் கதஞ்சித் என்று முன்னம் பிரயோகிக்கப் பட்டுளள பதம் குறிக்கொள்ளத் தக்கது. உபகாரம் செய்ய வேணுமென்கிற எண்ணத்தோடு செய்கையன்றியே, அபுத்தி பூர்வகமாகச்செய்ததாயிருந்தாலும் அதையும் பேருதவியாகக் கொண்டு மகிழ்பவனும் இராமன். நெஞ்சாரவே நூற்றுக் கணக்கான தீங்குகள் செய்யினும் அவற்றை நெஞ்சிற் கொள்ளானும்.

**இராமனது க்ருதஜ்ஞதை கண்ட விடம்.**

இப்பெருங் குணத்தை நாம் ஸ்ரீராமாயணத்தில் எங்கே கண்டோம் என்னில்; பல விடங்களிற் கண்டாலும் சிலவிடங்களையே இங்கெடுத்துக் காட்டுவோம். ஆனால், இங்கு முன்னம் ஒன்று சொல்ல வேண்டியதாகிறது; "**வெறிதேயருள் செய்வர்**" என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி ஒன்றுமே செய்யாதவர்கட்குங்கூட மிகச் சிறந்த அருளைச் செய்யும் இயல்பினனான இராமன், ஒன்று செய்தவர்களுக்கு உகந்திருக்கிறானென்றால், இது வியப்போ? இது பாராட்டத் தக்கதொரு குணமாகுமோ? ஆகாதுதான். ஆனாலும், இராமன் தன்னை ஒரு மனிதனாக நடித்துக் காட்டினனாதலால், 'உலகில் மனிதர்களிடத்துக் காணுங் குணங்களெல்லாம் இராமனிடத்து உள்ளன' என்று காட்டவேண்டுவது ப்ராப்தமாகிறபடியால் அந்த முறையில் காட்டலாமன்றோ. கேண்மின்;

குரக்கரசனான சுக்ரீவனிடத்திலும் அரக்கர் கோமானான விபீடணனிடத்திலும் இராமபிரான் காட்டியருளிய திருவருள், வாயாற் சொல்ல வொண்ணாதது, நெஞ்சாலும் நினைப்பரிது. இதற்கீடாக அவர்கள் செய்த நன்றி யாதென்று பார்க்குமளவில், விபீஷணன் சரணாகதி செய்தான் என்றுவது சொல்லத் தக்கதாக வுள்ளது; ஸுக்ரீவனிடத்திலோ வென்னில் அதுவுமில்லை; இராமன் ஸுக்ரீவனைச் சரணம் புக்கதாகக் காண்கிறோமே யல்லது சுக்ரீவன் இராமனைச் சரணம் புக்கதாக இல்லை. ஆனாலும், இராமபிரானது திருவுள்ளத்தினால் சுக்ரீவன் பேருதவி செய்தானாகக் கொள்ளப்பட்டான்; அவ்வுதவி யாதெனில் இராமன் சீதையைப் பிரிந்து மிகவருந்தி இன்னது செய்வதென்று தோன்றாமல் சென்று கொண்டிருக்கையில், பம்பைக் கரையில் அனுமன் வந்து சந்தித்தனன் அன்றோ; இது சுக்ரீவனது கட்டளையினால் தானே நிகழ்ந்தது.

அனுமன் இராமனிடம் வந்து சேர்ந்ததும், 'நான் சுக்ரீவனால் அனுப்பப்பட்டு இவ்விடம் வந்தேன் உங்களைக் காண' என்றே சொல்லியிருக்கின்றனன். இத்தகைய மகா குணசாலியான ஆஞ்சநேயனை யனுப்பினது, ஸுக்ரீவன் தன்னுடைய காரியத்திற்காகவாயினும், இராமன் அங்ஙனம் கொள்ளாது அதனைத் தனக்குச் செய்த பேருதவியாகக் கொண்டே சுக்ரீவனிடத்துப் பேரருள் புரிந்தனன். விபீடணன், "ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே" என்று சொல்லிக் கொண்டு தன்னிருப்பிடம் தேடிவந்த ஒரு சிறிய செயலையே பேருதவியாகக் கொண்டு, அவனிடத்து மிக்க பரிவு காட்டியருளினன் இராமன்! அந்தப் பிரிவு எப்படிப்பட்டது என்பதை ஸ்ரீவசநபூஷணத்தில் ஒரு வாக்கியத்தில் காணலாம்; அதாவது—(228) 'விபீஷணனை ராவணன் குலபாம்ஸநம் என்றான்; பெருமாள் இக்ஷ்வாகு வம்ஸ்யராக நினைத்து வார்த்தை யருளிச் செய்தார்".

இராமன் விபீடணனை இட்சுவாகு வம்சத்தவர்களுள் ஒருவராகத் திருவுள்ளம்பற்றி வார்த்தை யருளிச் செய்தான் என்பது ஸ்ரீராமாயணத்தில் எங்கே காண்கிற தென்னில்; விபீடணனை இராமபிரான் அங்கீகரித்த பிறகு இலங்கையி லுள்ளாருடைய பலாபலங்களைச் சொல்லுமாறு வினவுகின்ற இராமன், 'ராக்ஷஸர்களின் பலாபலத்தை உள்ளபடி எனக்குச் சொல்லு' என்றான். 'விபீஷணா! உன்னினத்தாருடைய பலாபலங்களைச் சொல்லு' என்றாவது 'ராவணனுடைய பலாபலங்களைச் சொல்லு' என்றோ சொல்லவேண்டுமிடத்து, அப்படிச் சொல்லாமல் 'ராக்ஷஸர்களின் பலாபலங்களைச் சொல்லு' என்றதானது, விபீடணனை ராக்ஷஸ ஜாதியில் வேறுபடுத்திக்

காட்டியே தீரும் என்று ஆசார்யர்கள் திருவுள்ளம் பற்றினர். "செல்வ விபீடணற்கு வேருக நல்லானை" என்கிருர் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில். இராமனுக்கு மற்ற பக்தர்கள் யாவரும் ஒரு தட்டு, விபீஷ்ணுழ்வான் தனித்தட்டு என்பது இப்பாசுரத்தின் கருத்து.

நபஸ்மரத்யகாரணும் என்றதில் சங்காஸமாதானங்கள் :

ஆக, விபீடணன் சுக்ரீவன் போல்வார் செய்த செயல்களைக் கனத்ததாகக் கொண்டு அவர்களுக்கு நன்மை புரிந்த விஷயம் நிற்க; 'பிறர் எவ்வளவு அபகாரங்கள் செய்தாலும் அவற்றைச் சிறிதும் நினைப்பதில்லை' என்று இதுவும் ஒரு பெருங்குணமாக இராமனுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றதே! சுக்ரீவன் விஷயத்தில் இது மாறுபாடாகக் காண்கிறதே; எங்ஙனேஎனின்; வாலியை வதைத்துச் சுக்ரீவனுக்கு மகுடாபிஷேகஞ்செய்து, கார்காலம் நீங்கினவுடனே வானரசேனைகளைத் திரட்டிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டு, அவனைக் கிஷ்கிந்தைக்குப் போகவிட்டனன் இராமன். போனவன் மன்மத லீலைகளில் கால் தாழ்ந்திருந்ததனுல் கெடு தவறிப் போனதை நினையாமலே யிருந்தான்.

அப்போது இராமன் இளையோனை நோக்கிக் கூறுகின்றனன்; 'லக்ஷ்மணு! அரசர்கள் போர்க்குப் புறப்படவேண்டும் இக்காலத்தில் சுக்ரீவன் என்னை அடியோடு மறந்து வாளா கிடக்கின்றனனே; செய்ந்நன்றி மறந்த காதுகன் அல்லவா அவன்; நீ உடனே அவனிடஞ் சென்று நான் சொன்னதாக இங்ஙனம் கூறுவாயாக; செய்ந்நன்றி மறந்த தீ வினையாளன் புருஷர்களில் கடையானவன்; மாமிசம் தின்னப் பிறந்த ஜந்துக்களும்கூட அவனது மாமிசத்தைத் தின்னுதென்று சொல்லு; லக்ஷ்மணு! என் பராக்கிரமத்தை அவன் நன்கறிந்திருந்தும் மழைகாலம் சென்ற பின்பும் சிறிதும் அச்சமின்றிக் காமபரவசனுய்க் கிடக்கிருனே: வாலி சென்ற வழி அவனுக்கும் திறந்திருக்கின்றதென்று அவனிடம் கூறு. அவனை உற்றுருறவினரோடும் கூட யமபுரம் அனுப்பச் சித்தமாயிருக்கிறேன் என்று தெரிவி; அப்படிப்பட்ட கதியை வரவழைத்துக் கொள்ள வேண்டாமென்று சொல்லு' என்று.

இவ்வளவு சீற்றம் இராமனுக்கு ஏன் உண்டாயிற்று? 'நூற்றுக்கணக்கான தீங்குகள் கண்டாலும் நெஞ்சு கன்றுவதில்லை' என்று கொண்டாடப் பெற்ற இராமனுக்கு உயிர்த்தோழன் திறத்து இத்தனை சீற்றம் தகுமா? இது குணக்கேடு அல்லவா? என்கிற கேள்வி பிறக்கக் கூடும்.

இதற்குச் சொல்லுகிருேம் கேண்மின்; மேற்சொன்ன விதமாக இராமன் லக்ஷ்மணனிடம் சொன்னபோது அவ்விளையோன் "சத்தியம் தவறின சுக்ரீவனை இன்றே கொன்று விடுகிறேன்; வாலியின் மகனுன அங்கதன் நமக்குத் துணை புரிவான், சுக்ரீவனைத் தொலைத்தே விடுவோம்" என்றனன். அதற்கு இராமன் சொல்லுகிருன், 'லக்ஷ்மணு, நன்னடத்தையுள்ள நீ இப்படிப்பட்ட நண்பனை ஆராயாது கொல்லலாகாது; அவனிடம் பழையபடி நல்ல குளிர்ந்த வார்த்தைகளையே பேசு; அவன் நம் விஷயத்தில் நன்றிகெட்டவனே யென்பது நிச்சயமாகத் தெரிந்தால், பிறகு உன் விருப்பத்தின்படி செய்' என்று.

இதனுல் நாம் தெரிந்து கொள்வதென்ன? உலகில் நன்றி மறத்தல் என்பது பெரும் பாதகம். அப்பாதகியை என்ன செய்யினும் குற்றமில்லை என்கிற நூற் கொள்கையை எடுத்துரைப்பதொன்றே இராமனுக்கு இலக்கியமானது; "தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி" என்று சொல்லித் தரும நெறியை நிலைநாட்டுதற்கென்றே திருவவதாரம் செய்தருளின பெருமாள், இத்தகைய நூற்கொள்கைகளைத் தெரிவிக்கும் முகத்தால், தர்ம ஸ்தாபனம் செய்ய வேண்டுவதும் அவசியமாதலால், இதனுல் இராமனுக்குக் குணக்கேடு யாதொன்றுமில்லை யென்றுணர்க.

இலங்கைக்கு வழிவிட வேண்டுமென்று கடலரசனை நோக்கிச் சரணுகதி செய்தார்

பெருமாள்; அவன் முகங் காட்டவில்லை யென்று சீறிச் சிவந்தார்; உடனே அவன் விநயத்தோடு வந்து நிற்க, அவன்மீது எய்யத் தொடுத்த அம்பை, அவனது பகைவர்களின் மேற்செலுத்திப் பரம கருணையைக் காட்டி யருளினார் என்று இராமாயண கதையுள்ளது. இதனால், சீற்றமும் நன்மைக்கே யாகிறதென்று நன்கு தெரிகின்றதன்றோ. கருணாமூர்த்தியான இராகவனுக்குச் சீற்றம் உண்டாக வழியில்லைதான். சீற்றமுண்டானதாகக் காணுமிடங்களில் தரும நுணுக்கம் ஏதேனும் தெரியவந்தே தீரும்.

## ஸ்ரீமந் நாராயணமூர்த்தியிடத்தில் க்ருதஜ்ஞதா குணவிவரணம் :

கிருதஜ்ஞதை என்னும் மகாகுணத்தை மானிடவடிவனை இராமனிடத்தில் நாம் நிரூபித்துக் காட்டுவது ஒரு புறமிருக்கட்டும். பரந்தாமனை ஸ்ரீமந்நாராயண மூர்த்தியிடத்தில் இக்குண முண்மையை நம் ஆசாரியர்கள் வெகு அற்புதமாக நிரூபித்துக் காட்டி யருளுகிறார்கள். மனிதர்களின் க்ருதஜ்ஞதாகுணம் ஒருவிதமானது. பகவானுடைய க்ருதஜ்ஞதாகுணம் மிகச் சீரியது; இதனை நம் ஆசாரியர்கள் நிரூபிக்கும் விதம் மிகவும் ஆச்சரியமானது. அஃது இங்கு விவரிக்கப்படுகின்றது.

க்ருதஜ்ஞ: என்னும் சொல்லானது (க்ருதம் ஜாநாதி இதி க்ருதஜ்ஞ:) என்கிற வியுத்பத்தியின்படி, செய்கிற காரியங்களை யுணருபவன் என்று பொருள்படும். ஜீவர்களாகிய நாம் செய்கிற காரியங்களை யுணருபவர் பகவான் என்றதாயிற்று. அனந்தகோடி ஜீவராசிகள் ஒவ்வொரு கணத்திலும் செய்யும் காரியங்களை எம்பெருமான் தன்னுடைய சிறந்த சக்தி விசேஷத்தினால் உடனிருந்து அறிகிறான் என்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமன்றோ; அதையா இங்குச் சொல்லுகிறது ? என்னில், கேண்மின்.

ஸர்வேசுரன் நம்போன்ற சேதனர்களைத் தன்னருளுக்கு இலக்காக்கிக் கொள்வதற்கு உறுப்பாக நாம் செய்ய வேண்டிய காரியங்களை சாஸ்திரங்களில் சொல்லி வைத்திருப்பதை யாவரும் அறிவர். அவற்றுக்கு ஸுக்ருதம் என்று பொதுவான பெயர் வழங்கும். 'நன்றாகச் செய்யப்பட்டது' என்பது இதன் பொருள்: நாம் செய்யுங்காரியங்களில் நன்றாகச் செய்யப்படுவதும், தீதாகச் செய்யப்படுவதுமாக இரண்டு வகைகள் உள்ளனவன்றோ. அவை வடமொழியில் ஸுக்ருத-துஷ்க்ருத பதங்களாலும், தென்மொழியில் நல்வினை தீவினை என்னும் சொற்களாலும் வழங்கப் பெறும்.

ஸுக்ருதத்தைப் பற்றியே இங்குப் பேசுவோம். இது பொதுவாக இருவகைப்படும்– ஜ்ஞாதஸுக்ருத மென்றும், அஜ்ஞாத ஸுக்ருதம் என்றும். மனப்பூர்வமாகத் தெரிந்து செய்யும் நன்மைகள் ஜ்ஞாதஸுக்ருதம் எனப்படும். நமக்கும் தெரியாமல் விளையும் நன்மைகள் அஜ்ஞாதஸுக்ருதம் எனப்படும். இவற்றுள் முதல் வகுப்பான ஜ்ஞாதஸுக்ருதங்கள் பலபலவாயிருக்கும்; தவம் புரிவது, தானஞ்செய்வது, யஜ்ஞயாகங்களைச் செய்வது, கங்கை யமுனை காவேரி முதலிய புண்ணிய தீர்த்தங்களிற் சென்று குடைந்தாடுவது, கோயில் திருமலை, பெருமாள் கோயில், திருநாராயண புரம் முதலான திவ்விய தேசங்களிற் சென்று பகவத் ஸேவை செய்வது, 'பேராயிரமும் ஓதுமின்கள்' என்கிற கட்டளைக்கு உட்பட்டு ஸஹஸ்ரநாமம் முதலான துதிகளை வாயாரச் சொல்லுவது, திருவிளக்கெரிக்கை, திருமாலை யெடுக்கை என்று சொல்லப்படுகிற பலவகைக் கைங்கரியங்களைச் செய்வது, ஆகிய இப்படிப்பட்ட காரியங்களை 'இது செய்யக்கடவோம்' என்று ஸங்கல்பித்துக் கொண்டு மநஸ்கரித்துச் செய்வதானது ஜ்ஞாதஸுக்ருத மெனப்படும்.

## அஜ்ஞாத ஸுக்ருத ப்ரஸ்தாவம் :

கீழே சொன்னபடி இன்ன நல்வினையைச் செய்ய வேணுமென்று நாம் சங்கல்பித்துக் கொண்டு செய்யாவிடினும் கோல்விழுக் காட்டாலே நல்வினையாகப் பரிணமிக்கும் செய்கைகள் அஜ்ஞாத ஸுக்ருதம் எனப்படும். நல்லது செய்ய வேணும் என்று நாம் நினைத்துச் செய்யாதவற்றை ஸுக்ருதமென்னுஞ் சொல்லால் வழங்க

லாமோ? சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட தாய் கர்த்தாவான சேதநனுலே புத்திபூர்வ மனுஷ்டிக்கப்பட்டதான செய்கையை யன்ருே ஸுக்ருதமென்று வழங்கலாம். இன்ன ஸுக்ருதம் பண்ணிஞேமென்று கர்த்தாவான சேதனன் அறியாதவற்றை ஸுக்ருதமென்று எப்படிச் சொல்லக் கூடும்? என்று ஆக்ஷேபிக்க இடமுண்டு. இதற்கு நம் பூருவாசாரியர்கள் அருளிச் செய்யும் ஸமாதானத்தையே இங்குத் தெரி விக்கிருேம்.

ஸ்ரீ வசனபூஷணத்தில் பகவந் நிர்ஹேதுக க்ருபா வைபவ ப்ரகரணத்தில் (396), "சாஸ்த்ரமும் விதியாதே நாமுமறியாதே யிருக்கிற வித்தை ஸுக்ருதமென்று நாம் பேரிடுகிறபடி யென்னென்னில், நாமன்று, ஈச்வரனென்று கேட்டிருக்கையாய் இருக்கும்" என்றுள்ளது. நம்மை யறியா மல் நேர்ந்த நல்வினைக்கு ஸுக்ருதம் என்று பேரிடுகிறது நாமன்று; ஸர்வ முக்திப் பிரஸங்கம் வாராமைக்காக ஸர்வ ஜ்ஞுன ஸர்வேசுரன்தான் ஸுக்ருத மென்று பேரிட்டு வைத்தான் என்று, ஆசாரியர்கள் அருளிச் செய்வர்களாம். இதனுல் என்ன தேறுகிற தென்னில்; நமக்கு அஜ்ஞாதமாயிருந்தாலும் எம்பெரு மானுக்கு ஜ்ஞாதமாயிருக்கையாலே, ஸுக்ருதமென்னக் குறையில்லை என்றதா யிற்று.

**ப்ரஸங்காத் எம்பெருமானுடைய பரமக்ருபா நிரூபணம்**

இதற்குமேல் ஒரு கேள்வி பிறக்கும். எம்பெருமானே யதார்த்த ஜ்ஞானநிதி; அவனுக்கு அந்யதாஜ்ஞான விபரீதஜ் ஞானங்கள் அடியோடு கிடையாதென்று சாஸ்த்ரங்களால் அறிகிருேம். நாம் மநஸ் கரித்துச் செய்யாததொன்றை அவன் ஸுக்ருதமென்று கொண்டானுகில் அது யதார்த்த ஜ்ஞானமாகுமோ? ஒருவன் ஸந்நிபாதஜ்வரம் முதலான கொடிய நோய் களினுல் துன்பப் படுங்காலங்களில் தன்னை யறியாமல் ஏதேதோ உளறுகிருன். அபுத்தி பூர்வமாக வெளிவரும் அந்த வுளறல்களில் யாராவது அர்த்தம் காண் கிருர்களோ, இல்லையன்ருே. அப்படியே நம்மையறியாமல் நாம் செய்யும் செயல் களை எம்பெருமான், ஸுக்ருதமென்று எப்படிக் கொள்ளக்கூடும்? என்கிற கேள்வி பிறக்கும். கேண்மின்;

எம்பெருமான் சேதநர்களிடத்தில் இயற் கையான இன்னருள் பொருந்தியவன். இவனை எவ்வகையினுலாவது தான் அங்கீ கரிப்பதற்கு அப்பெருமான் வழிதேடுபவன். இச்சேதநன் புத்திபூர்வமாகச் செய்யும் நல்வினைகளை முன்னிட்டே இவனை அங்கீ கரிப்பதாக எம்பெருமான் வைத்துக் கொண்டால், ஒருவனைக்கூட அங்கீ கரிக்க அவகாசம் நேராது. ஏனென்னில், நாம் புத்திபூர்வமாகச் செய்வது தீவினை களையே யாதலாலும், நல்வினையை நாம் நெஞ்சாலும் நினைப்பவர்கள் அல்லோமாத லாலும், நம்மை அங்கீகரிக்க எம்பெரு மானுக்கு அவகாசமேது? நாமும் இழந்து அவனும் இழந்து போகவேண்டிய தாகிறது. நம்முடைய இழவு கிடக்கட்டும், இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே யிருக் கிற நாம் நம்மிழவைப்பற்றிக் கவலைப்படா தொழிந்தாலும், சொத்துக்கு உடைய வனுய் சுவாமி யென்று பேர்பெற்றிருக்கும் எம்பெருமான் இழந்து தரிக்கமாட்டா னன்ருே. 'ஸுக்ருதம் செய்பவர்களை யன்றி மற்றையோரை நான் அங்கீகரிக்க மாட்டேன்' என்று சாஸ்த்ரங்களில் அவன் பொறித்து வைத்திருப்பதனுல் ஸுக்ருதம் செய்தவர்களை அங்கீகரிக்க முடியாமலிருக் கிறது; சேதநர்களோ புத்திபூர்வமாக ஸுக்ருதம் செய்ய மாட்டாதவர்கள் ஆகையாலே இவர்களை அங்கீகரிக்க இட மில்லாமலிருக்கிறது; ஆகவே இழந்தே போக வேண்டியதாகிறது.

இழவாமைக்காக அப்பெருமான் ஒரு கள்ள வழியில் நுழைகிருன். (அதாவது) கரணகளேபரங்களைம் பெற்றிருக்கிற சேதநன் வாளா கிடப்பதில்லை; கீதையில் சொன்னபடி, எப்போதும் ஏதாவதொரு காரியம் செய்துகொண்டே போதைப் போக்கிவருகின்ற சேதநன் செய்யும் காரி யங்களிலே, நாம் நன்மை என்று பேரிட்டுக் கொள்ளும்படியான காரியம் ஏதாவது இருக்குமாவென்று பார்ப்போம்– என்று ஆராயத் தொடங்குகிருன். அவனு டைய அத்ருஷ்டத்தாலே அப்படிப்பட்ட

காரியங்கள் நம்மிடத்திலே அவனுக்குக் கிடைத்து விடுகின்றன. அவற்றை ஸுக்ருதமாகவே அவன் திருவுள்ளம் பற்றுகின்ருன். நாம் மனப்பூர்வமாக ஸுக்ருதமென்று செய்யாததாகையாலே அஜ்ஞாதமென்கிறது. அவன் திருவுள்ளத் தாலே இது ஸுக்ருதமாகக் கொள்ளப் பட்டு விட்டபடியால் ஸுக்ருதம் என்கிறது. ஆகவே, அஜ்ஞாதஸுக்ருதமென்று பேர் பெற்றுவிட்டது.

## அஜ்ஞாத ஸுக்ருதத்தின் பாகுபாடுகளும் அவனூரைச் சொன்ன ஸுக்ருதமும்

இந்த அஜ்ஞாதஸுக்ருதமானது, யாத்ருச்சிக ஸுக்ருத மென்றும், ஆநுஷங்கிக ஸுக்ருதமென்றும், ப்ராஸங்கிக ஸுக்ருத மென்றும், பல பெயர்களை யுடைத்தா யிருக்கும். இவை நம் போல்வாரிட மிருந்து எம்பெருமானுல் எவ்விதமாகக் கொள்ளப்படுகின்றன என்பதை இனி நிரூபிப்போம்.

நாம் ஸம்ஸாரிகள் ஆகையாலே மக்களைப் பெறுகிறேம்; மகளை ஒருவனுக்கு மணம் புரிவிக்க வேண்டியதாகிறது; மகனுக்கு ஒரு பெண்ணைக் கொள்ள வேண்டியதாகிறது. ஆகவே, ஸ்ரீரங்கத்திலுள்ள ஒருவரனுக்குத் தன் மகளைக் கொடுக்கவும், திருவேங்கடத்திலுள்ள ஒரு பெண்ணைத் தன் மகனுக்குக் கொள்ளவும் நேருகிற தென்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த ஸம்ஸாரி அடிக்கடி தன்னுடைய வாய்ப் பேச்சுக்களில், ஸ்ரீரங்கத்தையும் திருமலையையும் வாயாரச் சொல்லவேண்டி வருகிறது. 'என்னுடைய மாப்பிள்ளை ஸ்ரீரங்கத்திலிருக்கிருர்' 'ஸ்ரீரங்கத்திலிருந்து என்னுடைய மாப்பிள்ளை நேற்று வந்தார்' 'மாப்பிள்ளையை அழைத்துவர ஸ்ரீரங்கம் போய்வரப் போகிறேன்' 'என்னுடைய நாட்டுப்பெண் திருவேங்கட மலையிலிருந்து வந்தாள்' என்றிப்படி, பலகால் சொல்லும்படி நேர்கின்றது.

இந்தப் பேச்சுக்களில் திருவரங்கத்தையும் திருமலையையும் பலகால் சொல்லுவதானது "இந்த திவ்யதேசங்களை நாம் சொன்னுல் ஸுக்ருதமுண்டு" என்கிற எண்ணத்தினுலன்று; அம்பத்தூர், ஆவடி என்கிற ஊர்ப்பெயர்களைச் சொல்லுவது போலவே, கோயில் திருமலை என்னுமூர்ப் பெயர்களையும் இவன் சொல்லா நின்ருன். ஆனுலும் ஏதேனுமொரு வியாஜத்தை எதிர்பார்ப்பதில்நோக்குடையனுனஎம்பெருமான் 'என்னூரைச் சொன்னுனிவன்' என்று இதையொரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்ருன்.

## அவன் பேரைச் சொன்ன ஸுக்ருதம்

மற்றுங் கேண்மின்; ஸம்சாரிகளுக்குப் பிறக்கும் மக்களுக்கு ரங்கன், ராகவன், திருவேங்கடன், கோவிந்தன், கோபாலன், நாராயணன், மாதவன் என்றிப்படி பெயரிட்டு அந்தப் பிள்ளைகளை ஆர்வத்தோடு அழைக்கும் போதெல்லாம், இந்தப் பெயர்களைச் சொல்லி அழைக்க நேருகின்றது; தவிரவும் பேச்சுக்கிடையில் "ரங்கன் வந்தான், ராகவன் போனுன், கிருஷ்ணனைக் கண்டேன், ராமனேடு பேசினேன்' என்றிப்படி பலகாலும் சொல்ல நேருகின்றது. எம்பெருமானுடையதிருநாமங்களைச் சொல்லுகிறேம் என்கிற எண்ணம் சிறிதுமில்லாமல், இங்ஙனே நிகழும் உலக மக்களின் உரையாடல்களில் எம்பெருமான் 'என் பெயரைச் சொன்னுனிவன்' என்று இதையொரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்ருன்.

## அவனடியார்களை நோக்கின ஸுக்ருதம்

சில பாகவதர்கள் திருவேங்கட யாத்திரையாக வழி நடந்து செல்லா நிற்கையில், கள்ளர்கள் அவர்களை யடித்துப் பொருள்களை அபகரிப்பதாக அணுகினுர்கள்; அதே சமயத்தில் சில ராஜசேவகர்கள் தங்களுடைய காரியமாக ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு அவ்வழியே வந்து கொண்டிருப்பதைக் கள்ளர்கள் கண்டு, 'இவர்கள் இந்த பாகவதர்களுக்குத் திருமேனிக் காவலாக வருகின்ருர்கள் போலும்; இங்கு நம்முடைய எண்ணம் ஒன்றும் நிறைவேருது' என்றெண்ணி வாளா விலகி யொழிந்தனர். இந்த நிகழ்ச்சி அங்கு யாத்ருச்சிகமாக வந்த ராஜ சேவகர்களுக்கும் தெரியாது. யாத்திரை செல்லுகின்ற பாகவதர்களுக்கும் தெரியாது; ஆனுலும் அங்கீகரிக்க அவகாசம்

பார்க்கிற ஸர்வேச்வரன் அந்த ராஜசேவகர்களை பாகவத ரக்ஷணம் பண்ணினவர்களாகத் திருவுள்ளம் பற்றுகின்றான். அந்த ராஜசேவகர்கள் அந்த பாகவதர்கள் சென்ற வழியில் சென்றது தன்னையே ஒரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான்.

### அவனடியார்களின் விடாயைத் தீர்த்த ஸுக்ருதம்

ஒருவன் ஓரிடத்தில் நிலம் வாங்கி அதிலே வெங்காயம் உள்ளி முதலானவற்றைப் பயிர் செய்கிறான். தண்ணீர் இறைக்க அங்கே சௌகரிய மில்லாமையால் நெடுந் தூரத்திலே நீருள்ள விடத்தில் துலையிட்டு, தன் வயலிலே வந்து சேரும்படி தண்ணீர் இறைக்கின்றான். அந்த நீர் ஒரு பெரிய வாய்க்காலாகப் பெருகி வயலுக்குச் செல்லா நின்றது. யாத்திரை செல்கின்ற சில பாகவதர்கள் தாபார்த்தர்களாய் தாகம் மிகுந்து எங்கும் தண்ணீர் கிடைக்காமல் வருந்தி வருகையில்,இந்தத் தண்ணீர்ப் பெருக்கைக் கண்டு பரமானந்தம் கொண்டு காலும் கையும் முகமுங் கழுவி விடாய் தீர்ந்து வாழ்த்திச் சென்றார்கள். நெடுந்தூரத்தில் துலையிட்டுத் தண்ணீரிறைக்கின்ற அவன் இதைச் சிறிதும் அறியாதவனாயிருந்தாலும் ஸர்வஜ்ஞனான எம்பெருமான் "என்னடியார்களது விடாயைத் தீர்த்தானிவன்" என்று கொண்டு இதையொரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான்.

### அவனடியார்களுக்கு ஒதுங்க நிழல் கொடுத்த ஸுக்ருதம்:

ஒரு தனிகன் தான் சூது சதுரங்கம் ஆடுவதற்காக ஒரு சாவடி கட்டி, அதிலே சூதாடிக் காலம் கழிக்கின்றான். ஆனால் இரவு முழுவதும் சூதாடிக் கண் விழித்திருக்க முடியாதே; நடுநிசிவரையில் சூதாடிவிட்டு உறங்குவதற்கு வீடுபோய் விடுகிறான். அப்போது, யாத்திரையாக வழிநடந்து வருகின்ற சில பரமபாகவதர்கள், தாங்கள் சயனிப்பதற்கு இடம் கிடைக்காமல் வருந்தியிருந்து இந்தச் சாவடியிலே ஒதுங்க நேர்கின்றது. இப்படி ஒரு நாளல்ல; நாடோறும் நேர்கின்றது; இதை அந்தத் தனிகன் அறியான்; அறிந்தானாகில் ஒருவரும் உள்ளே புகாதபடி கதவுகள் போடவும் ஏற்பாடு செய்திடுவான். இப்படி பல பாகவதர்கள் தங்கிப் போகிறார்களென்பதை அவனறியாமையாலே, சேமக்காப்பு செய்யப்படாமலிருந்து யாத்திரை செய்வார்க்குப் பேரின்பமளிக்கும் வசதியாக இருந்து வருகிறது. இது எம்பெருமான் திருவுள்ளத்திலே பட்டு, 'என்னடியார்க்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தானிவன்' என்று ஒரு ஸுக்ருதமாகக் கணக்கிடலாகிறது.

### பசுவதத்திலும் அவன் காணும் ஸுக்ருதம்:

ஒருவன் கோஹத்தி பண்ணியே ஜீவிக்குமியல்வினன்; அவன் ஒரு நாள் ஒரு பசுவைக் கண்டு அதைப் பிடித்துக் கொல்ல முயன்று தொடரத் தொடங்கினான்; இதையறிந்த அந்தப் பசு அஞ்சியோடத் தொடங்கிற்று; இவனும் விடாது அதைத் தொடர்ந்து ஓடுகிறான். பசு ஓடும்வழியில் ஒரு பெருமாள் கோயில் இருந்தது; அதற்கு வலமாக ஓடிற்று அந்தப் பசு: இந்தக் கிராதகன் அதைத் தொடர்ந்து பிடிக்க வேண்டியதற்காகத் தானும் அந்தக் கோவிலை வலஞ்செய்வானாய் ஓடுகிறான்; ஒரு பகவதாலயத்தை வலஞ்செய்கிறேமென்கிற எண்ணம் அவனுக்கில்லை; கோவிலை வலஞ்செய்வது ஸுக்ருதம் என்கிற அறிவுமில்லை யவனுக்கு; ஆனாலும், ஆள்பார்த்துத் திரியும் எம்பெருமான் 'இவன் என்கோயிலை வலஞ்செய்தான்' என்று இதை யொரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான்.

### க்ருதஜ்ஞதாகுண விவரண நிகமநம்:

இங்ஙனே பல நிகழ்ச்சிகள் உலகியல் வாழ்க்கையில் நிகழ்பவையுள. இவையே அஜ்ஞாதஸுக்ருதமெனப்படுவன. மேலே நிரூபிக்கப்பட்டவற்றில் யாத்ருச்சிக ஸுக்ருத கோஷ்டியில் சேர்வன சில; ப்ராஸங்கிக ஸுக்ருத கோஷ்டியில் சேர்வன சில; ஆநுஷங்கிக ஸுக்ருத கோஷ்டியில் சேர்வன சில. ஆக இப்படிப்பட்ட ஸுக்ருதங்களை எம்பெருமான் தானாக அறிந்து நம்மை விஷயீகரிப்பதற்கு இவற்றை ஹேதுவாகவோ வியாஜமாகவோ கொள்ளுகின்றானென்று, இது தன்னையும் நாம் சாஸ்திரங்களாலேயே அறிகிறோம். இப்படிப்பட்ட

ஸுக்ருதஜ்ஞானம் எம்பெருமானிடத்தி லுள்ளது பற்றியே அவனுக்கு க்ருதஜ்ஞன் என்னும் புகழ் தோன்றிற்று.

ஆளவந்தாரும் தமது ஸ்தோத்திர ரத்னத்தில் 'வசீ வதாந்ய:' என்னும் ச்லோகத்தில் எம்பெருமானது பல திருக்குணங்களையும் கூறிவருகையில் 'க்ருதீ க்ருதஜ்ஞ:' என்று இக்குணத்தையும் கூட்டிக் கூறியுள்ளார். எம்பெருமானுடைய க்ருதஜ்ஞதா குணத்தை இவ்விதமாகவே நம் ஆசாரியர்கள் நிரூபித்தருளிப் பக்தர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றனர்.

இத்தகைய குணம் இராமபிரானிடத்து உள்ளதாக நாம் எதுகொண்டு அறிகிறோமென்னில், ஓரிடத்தையே இங்குக் குறிப்பிடுவோம்; விபீஷணாழ்வான் சேர்ந்த போது அவனை அங்கீகரிக்கக் கூடாதென்று வாதித்தவர்களில் தலைவன் ஸுக்ரீவன்; இராமபிரான் அவனுடைய வாதங்களைக் கண்டித்து விபீஷணாழ்வானைத் திருவுள்ளம் பற்றியே தீருவதென்று தனது உறுதியை வெளியிட்டபின், விபீஷணனைத் தன்னிடம் அழைத்து வரும்படி ஸுக்ரீவனுக்கே கட்டளையிட்டுச் சொல்லும் போது 'ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட! தத்தமஸ்யாபயம் மயா' என்றார்.

'ஸுக்ரீவ! விபீடணனுக்கு நாம் அபயமளித்தோம். ஆதலால் அவனை நீயே அழைத்துவா' என்று சொல்லி, உடனே 'விபீஷணோ வா ஸுக்ரீவ! யதிவா ராவணஸ் ஸ்வயம்' என்றார்; இதன் பொருளாவது, ஸுக்ரீவ! நம்மை அடைக்கலம் புகுவதாக வந்து நிற்பவன் விபீடணனென்று நீங்கள் சொல்லுவதனால், அவனை அங்கீகரித்ததாகச் சொன்னேன்; ஒருகால் விபீஷணனல்லாமல் அவனது வேடம் பூண்ட இராவணனே வந்திருப்பதாகத் தெரியவந்தால் அவ்விராவணனை அங்கீகரிப்பதா? என்று மறுபடியும் விசாரம் வைத்துக் கொள்ளாமல், அவனையே தாராளமாக அழைத்துவா என்றபடி.

இங்ஙனம் தம்முடைய உதாரமான திருவுள்ளத்தைக் காட்டுகின்ற இராமபிரான் ராவணனிடத்தில் என்ன ஸுக்ருதங்கண்டு இந்த வார்த்தை சொன்னான் என்று ஆராயுமளவில், மகாபாபியான அவ்விராவணனிடத்தில் புத்தி பூர்வமான ஸுக்ருதம் காணமுடியாமல் போனாலும், மேலே விவரித்த வகையில் யாத்ருச்சிகம் முதலிய ஸுக்ருதங்கள் காணநேருமென்கிற துணிவு கொண்டே, அங்ஙனமருளிச் செய்யலாயிற்றென்று நம் ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுகின்றனர்.

(தொடரும்)



திருவாரூரில் நிகழ்ந்த 'அறநிலைய ஆலோசகர் குழுவினர்' கூட்டத்திற் கலந்து கொண்டு சிறப்பித்த உறுப்பினர்கள் (21—10—67)

# தன்னையுங் காணார்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

பச்சையப்பன், ஒரு கல்லூரி மாணவன். நல்லசுறுசுறுப்பானவன். கூரிய மதியும் சீரிய வளமையும் பெற்றவன். அவன் மனதில் பலப்பல சிந்தனைகள் புயல்போல் தோன்றும். அறிவுப்பசி கொழுந்து விட்டெரியும்.

ஒரு ஞாயிறு; விடுமுறை நாள்; மாலை நேரம். உலாவும் பொருட்டு ஊரைக்கடந்து வெளிப்புறஞ் சென்ருன். சலசல என்று அம் பிரா நதி ஓடிக் கொண்டிருக்கின்றது. அதன் கரையில் ஒரு அரசமரம். அம்மரத்தின்கீழ்த் திருமூல நாயனுரைப்போல ஒரு மகான் அமர்ந்து இருந்தார். அவருடைய திருமுகத் தில் ஞான ஒளி பளிச்சென்று வீசிக்கொண் டிருந்தது. கண்களில் கருணை வழிந்து கொண்டிருந்தது.

மகானுடைய அருள் வடிவைக் கண்டு ஒரு கணம் மெய்ம்மறந்து நின்ருன் பச்சையப் பன். நல்ல மிடுக்கான வயது; துடுக்காகப் பேசும் திறம் உடையவன். பெரியவர் அரு கில் வந்து நின்ருன். "சுவாமீ! வணக்கம். இங்கே தன்னந் தனியாக அமர்ந்திருக்கின் றீரே. தாங்கள் யார்? ஏன் இங்கிருக்கிறீர்?" என்று வினவினுன்.

"குழந்தாய்! நான் தனியாக இருக்கவில்லை. என்னுடன் இன்னெருவர் இருக்கின்ருர். அவரை நீ அறியமாட்டாய்" என்ருர். "சுவாமீ! என்ன ; ஆச்சரியம்! ஒருவரே இருக்கின்றீர் உம்முடன் இன்னெருவர் இருக்கின்ருரா? நான் என்ன குருடனு? யார் சுவாமி! இருக்கின்ருர்? அவர் ஊருக்குள் பிச்சை எடுக்கப் போயிருக்கின்ருரா?" என்று கேட்டான்.

"என்னுடன் இருப்பவர் என்னைவிட்டு ஒரு போதும் பிரிய மாட்டார். அதனுல் அவருக் குப் பிரான் என்று ஒரு பேருண்டு. அவரை நீ பார்க்க முடியாது" என்ருர். "ஐயனே! நான் மூடனன்று; நன்கு கல்வி பயில்கின்ற வன். எனக்குக் கண் பார்வை நன்ருக இருக் கின்றது. நீர் என்னை ஏமாற்றுகின்றீரா? உம் முடன் இருப்பவரை நான் காணமுடியாதா?" என்ருன் பச்சையப்பன். "அப்பனே! அவர் என்னுடன் மட்டுமன்று; உன்னுடனும் இருக்கின்ருர். அவர் பொறிபுலன்கட்கு அப் பாற்பட்டவர்" என்று விடை யிறுத்தார் அப்பெரியவர். "சுவாமீ! இது வெறும் கற் பனை. காணுத பொருளை உண்டென்று எப் படி நான் நம்பமுடியும்? என்னை மடையன் என்று எண்ணுகின்றீரா? ஒரு பொருள் இருக்குமானுல் கண்ணுக்குத் தெரிய வேண் டாமா?" என்று மீண்டும் வினவினுன்.

"தம்பீ! உன் பெயர் என்ன?" என்று கேட்ட பெரியவருக்குத் தன் பெயர் பச்சை யப்பன் என்ருன். அவர், "நல்லது, பச்சை யப்பா! உனக்கு உண்மையை விளக்க வேண் டும் என்பது என் இச்சையப்பா! நீ பேசு வது கொச்சையப்பா. நீ மோட்டார் சக்கரத் தில் உள்ள டயரைப் பார்த்திருப்பாய். அதில் உள்ள டயர்தான் கண்ணுக்குத் தெரிகின்றது. அதற்குள் இருக்கின்ற 'டியூப்' கண்ணுக்குத் தெரிகின்றதா? அதற்கும் உள்ளே இருக்கின்ற காற்று கட்புலனுக்குத்தெரிகின்றதா? காற்றுக் குள் இருக்கும் ஆற்றல் தெரிகின்றதா? அந்த டயர்போல் இந்தத் தூல உடம்பு; உள்ளிருக் கும் 'ட்யூப்' போல் உடம்புக்குள் இருக்கும் சூக்கும உடம்பு; காற்றைப்போல் ஜீவான்மா; காற்றுக்குள் ளிருந்து அதனை அசைக்கும் ஆற்றலைப் போல் பரமான்மா.

இத் தூல உடம்பையே நன்கு அறிய முடிவதில்லையானுல், அதற்குள்ளிருக்கும் சூக்கும உடம்பையும், ஜீவான்மாவையும், உயிர்க்குயிராய் நிற்கும் பரம்பொருளையும் எப்படியறிய முடியும்?" என்று கூறினுர்.

"சுவாமீ! சற்று நில்லுங்கள். இந்த உடம்பை நன்கு அறிய முடியவில்லை என்றீர்களே. ஏன் இந்த உடம்புதான் நன்கு தெரிகின்றதே?" என்ருன். "பச்சையப்பா! பொறுமையாகக் கேள். கூறுகின்றேன். இந்த உடம்பை நீ காண்கின்றனையா?" "ஆம் காண்கின்றேன்." "இந்த உடம்பு முழுவதையும் பார்க்கின்றனையா? "நன்ருகப் பார்க்கின்றேன்". "சற்று சிந்தித்துச் சொல், உடம்பு முழுவதும் தெரிகின்றதா?." "சுவாமீ! நான் என்ன சிறு பிள்ளையா? கல்லூரி மாணவன் சுவாமீ! சிந்திக்காமலா கூறுகின்றேன். இதோ இந்த உடம்பு முழுவதும் தான்தெரிகின்றது". "தம்பீ! உன் உடம்பின் பின்புறந் தெரிகின்றதா?". பச்சையப்பன் சற்றுத் திகைத்தான்; திரும்பித் திரும்பிப் பார்க்கின்ருன். பின்புறத்தைக் காண இயலுமா? "ஐயனே! பின்புறந் தெரியவில்லை". "நல்லது முன் புறமாவது எல்லாப் பகுதிகளுந் தெரிகின்றதா? நீ பார்க்கின்றனையா?". "முன்புறம் எல்லாம் நன்ருகத் தெரிகின்றது. இதில் ஏதும் ஐயம் இல்லை". "அப்பா! அவசரப் படாதே. முன்புறம் எல்லாந் தெரிகின்றதா?". "தெரிகின்றது; தெரிகின்றது". "முன்புறத்தில் முக்கியமான முகந் தெரிகின்றதா?". பச்சையப்பன், நாணினன். "ஐயனே! முகந்தெரியவில்லை". "குழந்தாய்! முன்புறமும் பின்புறமும் தெரிய வேண்டுமானல் இரு கண்ணாடிகள் வேண்டுமல்லவா? இரண்டு கண்ணாடிகட்கு இடையே நின்ருல் இருபக்கங்களையும் பார்க்கலாம் அல்லவா? அதுபோல் பரம் பொருளையும், குருவருளுந் திருவருளுந் துணை செய்தால் காணலாம்.

"பச்சையப்பா! இப்போது நீ வீட்டிற்குச் செல். இரவு ஏகாந்தமாக இருந்து 'நீ யார்?' என்பதைச் சிந்தனை செய்; செய்து நாளை வா".

பச்சையப்பனுக்கு ஏதோ ஒரு புதிய உலகிற் புகுந்தது போன்ற ஒரு உணர்ச்சி உந்தியது. தன் வீட்டிற்குச் சென்ருன். உணவில் நாட்டம் ஏற்படவில்லை. தான் படிக்குந் தனியறையில் தாளிட்டு அமர்ந்தான். நான் யார்? என்று சிந்தித்தான். அவனுக்கு நன்கு மேலே தெரிந்தது மயிர்த் தொகுதி. "ஓ! இம் மயிர்த் தொகுதி நானு? இல்லை; இந்த உரோமமா நான்?" உரோமம் படர்ந்த தோல் நானு? இல்லை இல்லை. உரோமம் உதிர்ந்தபின், தோல் உரிந்த பின்னும் நான் இருக்கின்றேனே? தோலால் மூடப்பட்ட புண் நானு? சீ நான் புண்ணுக இருக்க முடியுமா? புண்ணிடை ஊறும் உதிரம் நானு? புண்ணுக்குள் நடு நடுவே இருக்கும் எலும்பு நானு? எலும்புக்குள் இருக்கும் நாறுகின்ற மூளைக் குழம்பு நானு? இல்லை. உடம்புக்குள்ளே வழுவழுக்கின்ற கொழுப்பு நானு? அல்லது உள்ளே ஊர்கின்ற புழுக்கள் நானு? அந்தோ அவை நானுக இருக்க முடியாது. பின்னை நான் யார்? குடலுக் குள்ளிருக்கும் மலசலம் நானு, சீசீ. மலமா நான்? சலமா நான்? உடம்பைப் பிணித்திருக்கின்ற நரம்பு நானு? நான் யார்? ஒன்றுந் தெரியவில்லையே?

நான் ஒரு பரம மூடன்; கடலைப் பற்றிப் படித்தேன், மண்ணைப் பற்றிப் படித்தேன், விண்ணைப்பற்றி ஆராய்ந்து படித்தேன், மதியைப் படித்தேன், கதிரைப்பற்றிப் படித்தேன், கனலையும் புனலையும் படித்தேன், பொன்னைப்பற்றிப் படித்தேன், ஆனல் என்னைப் படித்தேனில்லை. என் படிப்பு என்ன படிப்பு? என்னைப் படிப்பித்த ஆசிரியரும் இதனைப் படித்தாரில்லையே?

"மேவிய புன்மயிர்த் தொகையோ? அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ? தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ? புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ? கூறுசெய்து
இடை இடை நிற்கும் எலும்போ? எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ? வழுவழுத்து
உள்ளிடை ஒழுகும் வழும்போ? மெள்ள நின்று
ஊரும் புழுவின் ஒழுங்கோ? நீரிடை
வைத்த மலத்தின் குவையோ? வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ? உடம்பிற்குள்
பிரியா தொறுக்கும் பிணியோ? தெரியாது
இன்ன தியானென் றறியேன்; என்னை
எங்குந் தேடினேன்; யாதினுங் காணேன்"

எதிரிலே சிவபெருமானுடைய திருவுருவம் வரைந்த படம் இருந்தது. அதனை உற்று நோக்கினன். கண்களை மூடினன். நெடு நேரம் அசைவற்று நின்ருன். தெய்வத்திருவருள், மாலையில் கண்ட குருவருளால் உணர்த்தியது. ஆணவப்படலம் அற்றது. ஊனவிழி மூடியது; ஞானவிழி திறந்தது. பரம்பொருளின் அருட்டிறத்தைக் கண்டான்; தன்னையுங் கண்டான். எல்லாம் அதுவாகக் கண்டான்.

முன்னம்
வரைத்தனி வில்லால் புரத்தை அழலூட்டிக்
கண்படை யாகக் காமனை ஒருநாள்
நுண்பொடி யாக நோக்கி யண்டத்து

வீயா அமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
சந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புது வெயில் எறிப்ப
எண்ணருங் கோடி இருடி கணங்கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத! பொருவிடைப் பாக!
மங்கை பங்க! கங்கை நாயக! நின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கிறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன்; பிறரையுங் கண்டேன்
நின்னிலை அனைத்தையுங் கண்டேன்''

பொழுது புலர்ந்தது. பச்சையப்பன் புதிய வனுகி வெளிவந்தான். அம்பிராநதியின் ஆற்றங்கரைக்கு ஓடினன். அங்கே அரசின் கீழ் அமர்ந்திருந்த ஞான அரசைக் கண்டானில்லை. அலறினன் உலறினன். ''ஞான குருவே எங்குச் சென்றீர்? எங்குச் சென்றீர்?'' என்று கதறினன், பதறினன்.

''அப்பனே! நான் உனக்குள்ளே இருக்கின்றேன்'' என்ற இனிய வானொலியைக் கேட்டான்.

.. ..................................என்னை
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணுத் தன்மை யோரே
—பட்டினத்தார்.

அவனுடைய உளத்தில் ஒளி தோன்றியது. எங்கும் நிறைந்த இறைவா! அறியா மாந்தர் பிச்சுலகில் ஏதேதோ பிதற்றித் திரிகின்றார்கள். ஆ! ஆ! என்ன ஆனந்தம். என் உள்ளமெல்லாம் ஆனந்த வெள்ளத்தில் நனைகின்றதே. நானுர்? என் உள்ளமார்? ஞானங்களார்? என்று அறிவித்தனையே.

உன்னை யறிந்தவர்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்கள். உன்னை உணராதார் ஒன்றையும் உணராதார். உன்னைக் கண்டபின் என்னையுங் கண்டேன். உன்னைக் காணுதவர் தன்னையுங் காணுர் என்று கூறி நின்றுன்.

அருளாலே எவையும்பார் என்றுன் அத்தை
அறியாதே சுட்டியென் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால்—கண்ட
என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி!
—தாயுமானுர்.



திருவாரூரில் நிகழ்ந்த
'அறநிலைய ஆலோசகர்
குழுவினர்' கூட்டத்திற் கலந்து
கொண்டு சிறப்பித்த
உறுப்பினர்கள்
(21—10—67)

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ., பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8.)

இதுவரையில் மண்டை, உச்சி முதலிய இடங்களில் வரும் நோய்களைப் பற்றியும், அதற்கு உரிய பரிகாரங்களைப் பற்றியும் எழுதினோம். இப்போது கண் மூக்கு, வாய் முதலிய உறுப்புகளைப் பற்றி ஆராய்வோம்.

கண் அக்கினி அம்சமென்றும், அதையே சிகார மென்றும், மூக்கு வாயு அம்சமென்றும், அதையே வகரமென்றும், வாய் அப்பு அம்ச மென்றும், அதையே மகார மென்றும், சித்தர்கள் சொல்வாராயினர்,

இவைகளுடன் பிருதிவி அம்சமாகிய நகாரமும், ஆகாய அம்சமாகிய யகாரமும் சேர்ந்து இயங்குகிறது. இவைகள் தனித்தனியே இயங்க முடியாது. அக்காரணத்தைக் கொண்டே சித்தர்கள் "ஓம் நமசிவாய" உன் தலையிலுள்ள தென்றனர். பஞ்சபூத சக்திகள் எல்லாம் இயங்கும் இடம் அது வாகும்.

இப்பொழுது 'கண்' என்ற உறுப்பை எடுத்துக் கொள்வோம். இதைக் காட்டிலும் முக்கியமான அவயவம் மனித உடலிலில்லை. "கண்ணும் காலும் சரியாயிருக்க வேண்டும்" என்று பெரியோர்கள் சொல்கிறார்கள். மிகவும் பிரியமுள்ளவர்களை, 'என் கண்ணே' யென்று அழைக்கிறோம்.

கண்ணொளி மங்க ஆரம்பித்தாலே, மனிதனுடைய உடற்சக்தி குறைந்து விடும். ஆகையால் கண்களை வெகு சாக்கிரதையாகப் பாதுகாத்தல் வேண்டும். கண்களைப் பாதுகாக்க உச்சியில் மருத்துவம் செய்தல் வேண்டுமென்றும், அதற்கு அறுகம்புல் தைலம், வில்வத் தைலம் ஆகியவைகள் மிக்க பலனைத் தரும் என்பதைப்பற்றியும், முன் கட்டுரையில் எழுதியிருந்தோம். கண்ணொளிக்குப் பொன்னுங்காணி ஓர் சிறந்த மூலிகை. மேற்படி மூலிகையை அரைத்து, வடைபோல் தட்டி, அரைக்கால் படி நல்லெண்ணெயில் இட்டுப் பக்குவமாகக் காய்ச்சி ஆறவைத்து, வாரத்திற்கு இருமுறை தைலக் குளி செய்து வருதல் மிகமிக நல்லது. இந்தத் தைல ஸ்நானம் செய்யும் நாட்களில் மோர், பெண் சங்கமம் பூரணமாய் விலக்கினால் உடனுக்குடனே தைலத்தின் குணத்தை அறியலாம்.

கண்களில் சிலருக்குக் கட்டிகள், தடிப்புகள் வருவதுண்டு. அதற்குச் சுடுசாதத்தில் கொஞ்சம் வெண்ணெய்யை யிட்டுக் கலக்கி, ஒரு துணியில் முடித்துக் கண்களுக்கு ஒத்தடம் கொடுக்கவும். கண்ணில் நீர் வடிதல். குத்தல் முதலிய உபத்திரவங்களும் நீங்கும், கண்நோய் என்று சிலருக்குக் கண் சிவந்து, சூரிய வெளிச்சத்தையும் பார்க்க முடியாமல் பல நாட்கள் வருந்துவர். இதற்குக் கோழி முட்டை வெண்கருவை எடுத்து ஒரு பீங்கான் கோப்பையிலிட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் படிகாரத்தை நுணுக்கி ஒரு சிட்டிகை வெண்கருவில் சேர்த்து, ஒரு தென்னந்துடைப்பக் குச்சியின் முனையை இரண்டாகப் பிளந்து, அரை அங்குல நீளமுள்ள மற்றொரு குச்சியை அதில் சொருகி, அக்குச்சியால் வெண்கருவைக் கடையவும். அது நீராகும். அந்த நீரைக் கண்களில் இரண்டு மூன்று நாட்கள் விட்டு வந்தால், கண்களிலுள்ள அழுக்கு நீங்கி, வீக்கம் குறைந்து, வலிகள் சாந்தமடைந்து பூரண குணமாகும்.

முக்கியமாக, பெண்கள் கண்களில் அஞ்சனமிடுவது சாலச் சிறந்தது. நவீனம் என்று சொல்லும் இக்காலத்தில் அஞ்சனமிடும் பழக்கம் அற்று விட்டது. இது துக்க கரமானது. கண்களுக்கு, ஆண்களும் மாதத்திற்கு இருமுறை அஞ்சனம் இடுதல் நல்லது. கண்படலம் (Cataract) முதலிய வியாதிகள் வராது. இந்த அஞ்சனம் நம்வீட்டுப் பெண்களே தயார் செய்து வந்தனர். ஆனால் இக்காலத்திய பெண்கள் கடைகளில் விற்கும் அஞ்சனங்

களை வாங்கிக் கண்களை அழகு படுத்துவதாக நினைத்துப் பாழ்படுத்திக் கொள்கின்றனர். இது பெருந்தவறு. அஞ்சனம் இடாமலிருந்தாலும் இருக்கலாம். ஆனால் கண்ட அஞ்சனங்களைக் கண்ணில் இடுவதை அறவே விலக்குதல் வேண்டும்.

**கண் அஞ்சனம் தயார் செய்யும் முறை :**

ஒரு வெண்மையான மெல்லிய துணி எடுக்கவும். ஒருசாண் நீளம் ஒருசாண் அகலமுள்ள துண்டுகளாய்க் கிழித்து 5-6 துண்டுகள் எடுத்து கரிசாலை என்னும் கரிசாலன் கண்ணிமூலிகையை இடித்துப் பிழிந்த சாற்றில் துண்டுகளை நனைத்து நிழலிலுலர்த்தவும். உலர்ந்த பிறகு மறுபடியும் நனைத்து உலர்த்தவும். இப்படி ஏழுமுறைகள் செய்தால் மூலிகையின் சத்துத் துணிகளுக்கு ஏறிவிடும். பிறகு ஒரு அகலமான அகலில் விளக்கெண்ணெய் ஊற்றி மேற்படி துண்டுகளைத் திரிபோல் செய்து கொண்டு, அகலில் 2, 3 வைத்து அதன்மேல் லேசாக விளக்கெண்ணய் தடவிய மற்றொரு மண் அகலோ, முடிந்தால் ஒருதாம்பிர அகலோ மூடவும். கொஞ்சம் காற்றுப் போகும்படி இருத்தல் வேண்டும். இல்லாவிடில் விளக்கு அணைந்து விடும். காற்றில்லா இடத்தில் வைக்கவும். இப்படி எல்லாத் திரிகளும் எரிந்த பிறகு மேல் பாத்திரத்தில் ஒட்டியுள்ள கரியை வழித்து ஒரு வெள்ளி டப்பி அல்லது தாம்பிர டப்பியிலிட்டுக் கொஞ்சம் விளக்கெண்ணெய் இட்டு மத்தித்து மெழுகு பதமாய்ச் செய்து வைக்கவும். இந்த அஞ்சனத்தை ஆண்களும் பெண்களும் கண்களில் தீட்டிவரின் கண்களின் ஒளி பல வருடங்கள் மங்காதிருக்கும்.

மற்றொரு சிறிய முறை. பல் துலக்கும் போது, முகத்தையும் வாயையும் அலம்புவதைப் போல நீரினால் கண்களையும் அலம்பிவரின், கண் பார்வை மங்காது. கண்களைத் திறந்து கொண்டு தண்ணீரைக் கையில் எடுத்துக் கண்களில் அடித்தல் வேண்டும். படலங்கள் நீங்கிப் பளிச்சென்று கண்கள் விளங்கும். இவ்விதம் செய்பவர்கள் 80 வயதானாலும் கண்ணாடிகளில்லாமல் படிக்கலாம். இது ஒரு சிறந்த முறை. செலவில்லாத முறை. டாக்டர்கள் செய்யும் அறுவைச் சிகிச்சைகளைப் புறக்கணிக்கும் முறை.

மற்றும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் போது, கண்களிலும் எண்ணெய் யிட்டுக் கீழும் மேலும் கண்களைப் புரட்டி விடும் பழக்கம், நம் தென்னாட்டில் இருந்து வந்தது. இந்த நற்பழக்கமும் எப்படியோ மறைந்து போயிற்று. ஆங்கிலக் கண் நிபுணர்களில் சிலர் இதைக் கண்டித்து வருவதாகவும் தெரிகிறது. அப்படிச் செய்பவர்கள் மருத்துவம் தெரியாததின் குற்றமே யல்லாமல், மக்களுக்குப் பெரும் பாதகத்தைச் செய்பராவர். கண்களுக்கு எண்ணெயிடுங்கள். எந்த நிபுணராயினும் அதற்கு மாறுபாடாகச் சொன்னால் அவர் வயிற்றுப் பிழைப்பிற்குச் சொல்லுகிறாரென்பதை உணருங்கள். நம்முடலைப் பற்றி ஆங்கில மருத்துவர்கள் நன்கு தெரிந்து கொள்ளாதவர்கள். செத்த பிணத்தை அறுத்து என்ன கற்றுக் கொள்ள முடியும். உடலிலுள்ள உத்தமன் போனபின்பு உடலின் தத்துவங்கள் எல்லாம் அறவே மாறுபாடடைந்து விடுகிறது அல்லவா. உடலின் தத்துவத்தை அறிந்து கொள்ளும் வகையில் மேனாட்டு மருத்துவ விஞ்ஞானம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

(தொடரும்)



கூத்தப்பிரான்

# உள்ள பொருளை உணருங்கள்

(கவியோகி மகரிஷி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், சென்னை)

[கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார், நமது இந்து சமயப் பெருந்தொண்டர். அவர் மும்முறை உலகைச் சுற்றிப் பல நாடுகளில் நமது சமயத்தைப் பற்றி ஆவேசமாகப் பேசியுள்ளார். அண்மையில் அவர் ருஷ்யா, எஸ்தோனியா, லிட்வியா, தாஷ்கண்டு, காபூல், நார்வே, சுவீடன், இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று வந்தார். அவர் சொற்பொழிவுகள் ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் நிகழ்ந்தன. இங்கே அச்சொற்பொழிவுகளின் சில பகுதிகளைத் தருகிறோம். இது மாஸ்கோவிலிருந்து 100 கல் தொலைவில் உள்ள எஸ்னுயா போலியானாவில் செய்யப் பெற்றது.

—ஆசிரியர்.]

**1. தன்னைத் தன்னால் உயர்த்துக:**

நாம் ஒரு புனிதமான இடத்தில் கூடியுள்ளோம். எஸ்னுயா போலியானா, டால்ஸ்டாய் வாழ்ந்த இடம். டால்ஸ்டாய் எங்கள் நாட்டு மகானான மகாத்மா காந்தியிடம் அன்பு கொண்டவர். அவர் எங்கள் உள்ளத்தைத் தொட்ட சிந்தனைச் சிற்பி. எங்கள் பகவத் கீதையைப் பருகியவர். டால்ஸ்டாயின் நூலகத்தில் அவர் படித்த நூல்களெல்லாம் வரிசையாக, கவர்ச்சியாக விளங்குகின்றன; அவர் வீடு முழுதுமே நூலகமாகவே யிருக்கின்றது. அந்த நூல்களில் பகவத் கீதையை முதலிற் காண்கிறோம்; விவேகானந்தர் சொற்பொழிவுகளைக் காண்கிறோம்; எண்ணரிய சமய நூல்களைக் காண்கிறோம். கீதைக்கு அடுத்தபடி அவர், பைபிளை வைத்துள்ளார். அவர் கீதையில் ஓர் அடையாளம் வைத்து ஒரு செய்யுளைக் கோடிட்டுள்ளார். அது கீதையின் கருத்தைத் தெளிவுபடுத்தும் செய்யுள். அதை உங்களுக்கு மொழி பெயர்க்கிறேன்.

**உத்தேரத் ஆத்மானாத் மானம்**
**ஆத்மாந மவஸாதயேத்**
**ஆத்மைஹி ஆத்மனோ பந்து:**
**ஆத்மை வரிபூராத்மன:**

**ஸர்வபூதஸ்தம் ஆத்மானம்**
**ஸர்வபூதானி சாத்மனி**
**ஈக்ஷதே யோகயுக்தாத்மா**
**ஸர்வத்ர ஸமர்தசின:**

தன்னைத் தன்னால் உயர்த்துக; தன்னைத் தாழ்த்தற்க! தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன். ஒருமை உணர்வு கொண்டு, அனைத் துயிர்களிலும், கலந்துள்ள என்னை வணங்குவோன், ஆன்மாவில் உள்ள உன்னுடன் ஒருமை கொண்ட அறிஞன், அவன் சம நோக்குடையவன்; அவன் தன்னையே அனைத்துயிர்களிடமும், அனைத்தையும் தன்னுயிரிடமும் காண்பவன். அவனுடன் நான் எப்போதும் இருக்கிறேன். அவன் எப்போதும் என்னுடன் இருக்கிறான்.

**2. எங்கள் சமயம் உங்கள் சமயமே:**

எங்கள் சமயம் உலகளாவிய சமரசச் சமயம். அது மனிதருக்கு மனிதர் வேறுபாடு காணாத ஒருமையில் ஊன்றியது. சாதி, மதம் நாடு, நிறம், நீ-நான்-அவன்-ஆண்-பெண் என்ற வேறுபாடெல்லாம் மனவேறுபாடுகளே. மனவேறு பாடே இனவேறுபாடாக முளைக்கிறது. எங்கள் சமயம் ஒருமையே நோக்குவது; அதுவே உங்கள் சமயமும் ஆகும்,

**மனித சமுதாயம் ஒன்றே-அதன்**
**மன்னவனான மனச்சாட்சி ஒன்றே**
**இனியவுலகமும் ஒன்றே-உலகு**
**எங்கும் விளங்கும் இறைவனும் ஒன்றே**
**எல்லாரும் இன்புற வாரீர்.**

இதுதான் இந்து சமயத்தின் அழைப்பு. இங்கே இன்று உலகிலிருந்து பல அன்பர் வந்திருக்கிறார்கள். அவர்களை இங்கே ஈர்ப்பது எது? ஒரு தூய ஆத்மாவின் நினைவு. டால்ஸ்டாயின் புனித வாழ்வு இங்கே இன்னும் சுழல்கிறது. அவர் பெரிய செல்வர்; இளமையில் உலக இன்பங்களை நுகர்ந்தவர்;

முதுமையில் அந்த இன்பங்களையெல்லாம் உமிழ்ந்து விட்டு வாழ்வுக் கனியில் ஆத்மரசத்தைப் பருகியவர். அவரை அவர் மனைவிகூட நன்றாக அறியவில்லை; அவரை மக்களும் அறியவில்லை. அவருடைய பேர்த்தி மாட்ச்பெல் இதோ இருக்கிறாள். அவள் அவரை அறிந்து கொண்டாள். அவள் உள்ளம் இந்த உலகின் போலி யின்பங்களைக் கடந்து உள்ளே துள்ளும் பேரின்பத்தைத் தேடியது. மாட்ச்பெல் இந்தியாவிற்கு வந்து இந்திய யோகிகளுடன் உறவு கொண்டாள். "சட்டை தெரப்பி போட்டு, மேசைமேல் இனிப்புத் தட்டுகளைக் கரண்டியால் எடுத்துண்டு, எடுப்பாக வாழும் சீமான்களின் வாழ்வு எனக்குப் புளித்துப் போனது. இந்தியாவில் கோவணங்கட்டிக் கொண்டு தனித்து, இனித்துத் தியானம் செய்து உள்ளடங்கி நிற்கும் இந்த எளிய சாதுக்களிடமே நான் விண்ணரசைக் கண்டேன்" என்கிறாள் மாட்ச்பெல்.

### 3. உள்ள பொருள்:

உண்மை எது? யோகமா, போகமா? ஆத்மீகமா, உலகாயதமா? உடலா, உள்ளமா? செல்வமா, அதைவிட்டுச் செல்வதா? துறவா, உறவா? சிறிது சிந்திப்போம்.

டால்ஸ்டாய் இறுதிக்காலத்தில் வீடு பிடிக்காமல், நள்ளிரவில் புத்தர் போலத் தப்பிச் சென்றார். "வீட்டிலிருந்து செல்லச்செல்ல விடுதலை; கலகக் காட்டினின்று, பொறாமைப் புதரினின்று, பொய் வஞ்சக் கள்ளரிடமிருந்து நான் உண்மையைத் தேடிச் செல்லுகிறேன்" என்றார். டால்ஸ்டாய் ஓர் சிறிய வண்டி நிலையத்தில் அமர்ந்து சிந்தித்தார். "வண்டிகள் வருகின்றன, போகின்றன; இவற்றில் எத்தனையோ பிரயாணிகள் செல்லுகின்றனர்; வருகின்றனர். அவர்கள் இந்த நிலயத்தில் இரண்டு நொடிகளே நிற்கலாம்; பிறகு வண்டி புறப்பட்டு விடும்; இந்த நிலையத்தை மறந்து விடுவார்கள். அதுபோலவே வாழ்வென்னும் வண்டியில் இந்த உள்ளுயிர் ஏறியுள்ளது; இது இந்த உடலிற் சிக்கி மன வேறுபாடுகளில் நோக்குப்பட்டு, சுற்றத்தின் இடும்பை இடர்களிற் சிறைப்பட்டு, நரக வேதனைபட்டது. முடிவில் 'விட்டலே பேரின்ப வீடு' எனக் கண்டது. இந்தச் சிந்தனையுடன் டால்ஸ்டாய் அதே வண்டி நிலையத்தில் உயிர்விட்டார். அவர் சட்டைப் பையில் ஒருகடிதம் இருந்தது. அது இன்னும் காட்சிச்சாலையில் உள்ளது. "பற்றே துயரம்; பற்றறலே இன்பம்; இந்த உடல் மண்ணாகும்; இந்த உயிர்த்துடிப்பான ஆன்மா உடலை உதறிச் சென்றது. கடிதம் படித்த பிறகு கடிதத்தை மூடிய பையினால் என்ன பயன்? என் கடிதங்களையெல்லாம் உள்ளத் தானாகிய ஆண்டவனுக்கு எழுதி விட்டேன். என் பொறுப்புத் தீர்ந்தது. இந்த உடலை நான் அடிக்கடி சுமந்துதியானிக்கும் பிர்ச் மரத்தடியில் புதைத்து விடுங்கள். அங்கே சமாதி எதுவும் கட்டக்கூடாது. பசும் இயற்கையின் மடியில் உடல் உறங்கட்டும். அதை மண்புழுக்கள் உண்ணட்டும். அங்கே மலர்கள் இயல்பாக மலரட்டும். நான் உடலில்லை; நான் ஆன்மா; ஆண்டானிடம் செல்கிறேன். அவன் இச்சைப் படி என்னை உய்க்கட்டும்". இதுதான் அந்த அறிஞரின் இறுதி எழுத்து: இதுதான் உண்மை: உள்ள,பொருள். இதுவே நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டியது. இதுதான் இந்து சமயத்தின் பிழிசாறு. இது எல்லா வுலகுக்கும் பொதுவான நல்லறிவு.

### 4. ஆன்மா எது? கடவுள் என்ன?

நீங்கள் என்னைக் கேட்கிறீர்கள். "ஆன்மா எது, கடவுள் எது? நாம் காணலாமா? காணாததை எப்படி நம்புவது" என்று. சுற்றிலும் பாருங்கள். இயற்கைப் பசு நகைபுரிகிறது. இந்தப்பசு நகையில் ஏதோ ஒரு ஒளி வீசுகிறது. அதுதான் ஆன்மா; ஒரு விதை நடுகிறோம், முளை கிளம்புகிறது; இலை விடுகிறது; கிளை விடுகிறது; மலர் குலுங்குகிறது; மலர் பூந்தாள் உண்டு காயாகிக் கனியாகிறது; கனியுட் கொட்டையுள்ளது. கனியின் இனிமைக்காகக் கொட்டையை ஊன்றுகிறோம். அது மீண்டும் மரமாகிக்கனிகிறது. சுற்றிலும் ஆப்பிள், ஆரஞ்சுக் கனிகள் குலுங்குகின்றன. ஒவ்வொரு கனியும் "எனக்குள் இனிப்பது உள்ளத்தான், ஆத்மநாதன்" என்று பேசுகிறது. எங்கள் நாட்டுப் பெரியார் 'கனியிற் சுவைப்பது கடவுள் அருள்' என்று பாடியிருக்கிறார்கள். ஆளுக்குள் வாழ்வது ஆன்மா; ஆன்மாவுக்குள் வாழ்வது கடவுள். கடவுள் என்றால் மனத்தைக் கடந்து உள்ளத்தில் உறையும் தூய இன்பப் பொருள். அதுவே உள்ளத்தில் உள்ளே உள்ள உயிர்க்கரு. அந்த இன்பப் பொருள், அங்கு-இங்கு-அவர்-இவர் என்றதைபடி, எங்கும் எவரிடமும் உள்ளது. அதுதான் மனதில் நினைப்பது; உள்ளத்தில் துடிப்பது; கண்ணில் காண்பது; காதிற் கேட்பது; அது வெளியேறினால் உடல் பிணமே; புலன்கள் வெறுமையே.

### 5. திருக்குறளில்:

திருக்குறள் என்ற உலகநூல் உள்ளது. அது எல்லோருக்கும் பொது நூல். அது

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்கிறது. அன்பின் வழியது உயிர்நிலை (Life breathes in Love). அதை அருளியவர் திருவள்ளுவர். அவர் சென்னை மயிலாப்பூரில் எளிய குடியில் தறி நெய்து ஒரு தொழிலாளியாகவே வாழ்ந் தார். அவர் குறளினின்று இரண்டு இங்கே சொல்லி விளக்குகிறேன்.

ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒரு தலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

"One minded sage sees inner Truth
He is free from thoughts of re-birth"

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

"It is knowledge to know self-Truth
And remove the folly of birth"

பிறப்பு-இறப்பு-மறப்பு-துறப்பு எல்லாம் இந்த உடலுக்கே. இதற்குள் என்றும் உள்ள ஒருபொருள் உள்ளது. அது உடலிற்கட்டுப் பட்டதன்று. அதையே "துஞ்சும்போதும் சுடர்விடும் சோதியை" (The flaming light is alive even in sleep) என்றார் அப்பர். இப் போது விழித்திருக்கிறோம். காது கேட்கிறது; கண் காண்கிறது; நாவு சுவைக்கிறது. நாம் உறங்கும்போது, காது கேட்பதில்லை, கண் காண்பதில்லை, வாய் சுவைப்பதில்லை. ஆனால் உள்ளம் துடிக்கிறது, மூச்சு உயிர்க்கிறது. புலனுணர் விறந்தபோது, உறங்கும்போது நம்முள் விழித்திருப்பது எது? உயிர்ப்பது எது? கனவு காண்பது எது? அதுதான் ஆத்மா; அதற்குப் பின்னால் இருந்து நம்மை இயக்குவதுதான் பரமாத்மா, கடவுள்.

6. ஜீவ மின்சாரம்:

இது மின்சாரயுகம்; இங்கே மின் விளக்கு, விசிறி, அடுப்பு, ஒலிப்பெட்டி, கணப்பு எல் லாம் உள்ளன. இதோ இந்த விசையை முடக்குகிறேன், இப்போது விளக்கு எரியவில்லை, விசிறி வீசவில்லை, அடுப்பு எரியவில்லை, ஒலிப் பெட்டி ஒலிக்கவில்லை, ஏன்? இத்தனைக்கும் உயிராயிருப்பது மின்னோட்டம். மின்னோட் டமே இத்தனைக் கருவிகளையும் ஓட்டு கிறது. இத்தனையும் உடல்; கம்பிகள் நரம்பு கள் போலும். மின்னிலையம் உள்ளம் போலும். அதனினின்று மின்சக்தி வந்தால் எல்லாப் பொறிகளும் இயங்கும். இன்றேல், எல்லாம் உறங்கும். இத்த மின்சக்தி போன் றது நமது உயிரான்மா, சீவான்மா. இந்தச் சீவாத்மா ஒரு மின்னிலையம்; இதற்கு மேலே ஓர் விண்ணகம் உள்ளது. விண்ணினின்று வரும் நுண் சக்தியே மின்சாரம். விண்ணகம் சுத்த சக்தி பரமாத்மமயம். வேதம் "ஆகாச சரீரம் ப்ரம்ம" "விண்ணகமே கடவுள் உடல்" என்கிறது. காற்று, தீ, புனல், மண், பயிர், உயிர் எல்லாம் விண்ணினின்றே வரு கின்றன. இதையும் கடந்த பரமாகாசம் உள் ளது. அது நமது மூளைக்குள் உள்ளது; அதன் சக்திதான் நம் உள்ளத்தில் துடித்து உயிர்ப்பை இயக்குகிறது. இத்தனையும் நாம் செய் வதன்று, இயற்கை-கடவுள் செய்வது. ஆத லால் நமது மனம் மொழி மெய் உள்ளம் உணர்வுகள் எல்லாம் அதில் ஈடுபட்டால் நாம் உள்ளின்பம் பெறலாம். அதுவே உட லெடுத்த பயன்.

"மனமன்று; மனதில் நினைப்பது எது? அதுவே கடவுள்; அதன் அருள் விளக்கமே உயிருலகம்" என்கிறது வேதம்.

7. விதையின் வேண்டுகோள்:

இதோ அழகான ஆரஞ்சுப்பழம்; இதன் மேல் உள்ள தோலே நம் உடல்; தோலுக் குள் உள்ள சிறுசிறு நார்களே நமது நரம்புகள்; இக்கனியை உரிக்கிறேன். தோலை இதோ போட்டுவிட்டேன். உள்ளே சுளைகள் உள்ளன; அவை எவ்வளவு அழகாக அடுக் கப் பட்டுள்ளன! இந்தச் சுளைகளே பல நாட்டு மக்கள் என்போம். இந்தச் சுளை இந் தியா, இது ஜப்பான், இது கனடா, இது இங்கிலாந்து, இது பிரான்சு, இது ஜெர்மனி, இது ரஷ்யா. எல்லாச் சுளைகளுள்ளும் நிரம்பி யிருப்பது ஒரு சாறு; சாற்றுக்காகவே கனியை உண்கிறோம். சாற்றுக்காகவே கனியை வளர்க்கிறோம். சாறுதான் கனியின் உயிர், சீவன். சாற்றுக்குள் விதை உள்ளது; அதுதான் ஜீவ சக்தியான கடவுள். அதை நட்டால் மீண்டும் மரம் செழித்துக் கனி பழுக் கும். இந்த விதைக்குள் மரம் நுட்பமாக அடங்கியுள்ளது. அதுபோலவே நம் ஆன்மா விலும் பரமாத்மா ஆகிய கடவுள் உள்ளது. தோலை உரித்துச் சுளையை உரித்து விதையைக் காணவேண்டும். விதை என்ன சொல்லு கிறது? தம்பி! என் சுவையை நுகர்; என்னை நட்டு மீண்டும் தோட்டமாக்கு; நீ எப்போதும் கனிச் சாற்றைச் சுவைக்கலாம் என்கிறது.

**8. அறிவை அறிய வழிகள் :**

அதுபோல இந்த உடல் மனம் உள்ளங் கடந்த ஆன்மா, பரமாத்ம இன்பத்தைச் சுவைக்க வேண்டும். அந்த இன்பத்தை உள்ளாழ்ந்தே அறிய வேண்டும். அதை அறிவதே அறிவு; அதைக்கலந்து வாழ்வதே இன்ப வாழ்வு; அதை அறியநான்கு வழிகள் உண்டு. சரியை கிரியை யோகம் ஞானம். சரியை என்பது ஒழுக்கம்(Moral character) தூய்மை வாய்மை-நன்மை-மென்மை-வன்மை முதலிய ஒழுக்க நெறி; கிரியை என்பது நற்செயல் (Good deed)-வழிபாடு: நமக்குஉயிர்க்குயிராயிருக்கும் தூய-இன்பப் பொருளை உள்ளக் கோவிலில் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, அன்பு நிறைந்து வாழ்வதே யோகம் என்பது. அந்தப் பொருளுடன் உள்ளுறவு கொள்வது ஞானம் என்பதாம். அதை அறிந்து அந்த அறிவே தான் என வாழ்வதே அறிவின்பம். இனி சிறிது தியானித்து உள்ளே ஊர்வோம்-கண்ணை மூடுங்கள்; உள்ளத் துடிப்பையே கவனியுங்கள். ஓம் என்று சிந்தித்திருங்கள்.



திருவண்ணமலை ஸ்ரீ அருணசலேசுவரர் கோயில், 'விநாயகர் நிலயம்' கட்டிடத் திறப்பு விழாவிற்குத் தமிழக முதலமைச்சர், பேரறிஞர் பெருந்தகை, மாண்பு மிகு. அண்ணு, எம். ஏ., அவர்களும், உழவுத் துறை அமைச்சர் மாண்பு மிகு. எ. கோவிந்தசாமி அவர்களும், வருகை தந்து சிறப்பித்தல் (12—11—67).

# ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

திரு. கே. பட்சிராஜன், பி.ஏ., பி.எல்., திருநெல்வேலி.

(முற்றொடர்ச்சி)

தானறப்பெய்து மாயும் தனிப்பெரு மேகம் கடைசியில் பெய்யும் மழை ஓரே பாட்டமாக இருக்கும் என்பர். அதேபோன்று இக்கருணை மூர்த்தியான உடையவர் என்னும் காளமேகமும் இவ்வுலகை நீத்துப் 'போக்கிலா உலகம்' புகுநாள் சமீபித்ததை உன்னி இம்மன்னுயிர் தழைக்க அருளி "எண்பத்திரண்டு வார்த்தைகள்" என்ற அமுத தாரையைப் பொழிந்தது. பிரபன்ந மிருதம் என்ற நூல், இவ்வார்த்தைகளைத் தருகின்றது. அவற்றின் சுருக்கம் :

1. பகவத்கைங்கர்யம், ஆசார்யகைங்கர்யம், பாகவத கைங்கர்யம் இவற்றுள் ஏற்றத் தாழ்வின்றிச் சமபுத்தி வேண்டும். 2. நமது பூர்வாசாரியர்கள் வார்த்தைகளிலே வேத வாக்குக் கொப்ப விச்வாச புத்தி இருக்க வேண்டும். 3. இந்திரியங்களை நம் வசமாக்கி 'வாரி சுருக்கி மதக்களிறைந்தினையும் சேரி திரியாமல் செந்நெறீஇ' என்ற பொய்கையார் வாக்கின்படி அவற்றைக் கைங்கர்ய நெறியிலே செலுத்த வேண்டும் 4. உலகியல் நூல்களிலே உளத்தைப் பறி கொடுத்து விடலாகாது. 5. என்றுமே இறையறிவு நூல்களில் உன்னுள்ளம் நிலைக்க வேண்டும். 6. ஏதோ பகவத் கிருபையால் ஒரு ஆசார்யன் நல்வழி காட்ட அதனை உணர்ந்த பின்பும் இந்திரியவழி மனம் செல்ல அநுமதிக்கலாகாது. 7. புலனறிவாம் தீமையிலே ஏற்றத்தாழ்வில்லை. ஆதலின் ஒன்றிரண்டின் தீமைகளை விலக்கி விட்டோம் என்று மகிழ்ந்திருக்க வழி கிடையாது. 8. போகப் பொருள்களிலே மோகம்கொள்ளவேண்டாம். 9. இம்மோகத்தை வென்றால் இறைவனது நாம சங்கீர்த்தனத்தில் சுவை ஏற்படும். இது ஏற்படின் போகப் பொருட் சுவை நெற் செய்யப் புல்தேயுமாபோல் தன்னடைவே மாயும். நாம சங்கீர்த்தனம் என்பது பகவந் நாமம் மட்டுமல்ல பாகவத நாமங்களுமாகும். 10 பாகவத சகவாசமும், அவர்கள் வார்த்தையில் விச்வாசமும், மோக்ஷ ஸாதனங்கள்.

11. எத்தகைய அறிவுடையவனாயினும் முன்சொன்ன கைங்கர்ய ருசியற்றவன் விரைவிலே புலன்களுக் கடிமையாய்க் கெடுவது திண்ணம். 12. புலனடக்கம் மட்டும்பயன் விளைவியாது. 13. ஸ்ரீ வைஷ்ணவ தர்மமின்றி வெறும் சத்கர்மா இறைவனைக் கிட்ட உதவாது. 14. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் வயது, சாதி முதலிய ஏற்றத் தாழ்வு கிடையாதாகையால் ஒருவரையும் ஏகவசனமாக அழைக்கக் கூடாது. 15. ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது கைகுவித்து வணக்கம் செலுத்திக் கொள்ள வேண்டும். 16. இறைவன் திருமுன்பும் ஆசாரியன் திருமுன்பும் கால் நீட்டக் கூடாது. 17. இறைவன் கோயில் கொண்டுள்ள திக்கிற்கு நேரே கால் நீட்டிப் படுக்கக் கூடாது. 18. காலையில் துயிலுணர்ந்தெழுந்ததுமே ஆசார்ய பரம்பரையே உள்ளத்தே நினைதல் வேண்டும். 19. இறைவனை வணங்கும்போது திருமந்திரத்தையும், த்வயத்தையும் மனத்தில் உச்சரித்துக் கொண்டு வணங்கவேண்டும். 20. பகவத் பாகவத ஆசார்ய நாம பாராயணஞ்செய்வோர் பாராட்டுதற்குரியர்.

21. ஸ்ரீவைஷ்ணவர்களைத் தூரத்தே காணும் போதே அஞ்சலியுடன் எதிர் சென்று வரவேற்று அவர்கள் போகுங்கால் நம் திருஷ்டியினின்று மறையும் வரை கூப்பிய கையனாயிருத்தல் வேண்டும். 22. பாகவதர்களையன்றிப் பிறரைப் பின் சென்று ஒன்றிரத்தல் கேட்டுக்கு வித்தாகும் 23. கோபுர விமானங்களைப் பார்த்ததும் வணங்க வேண்டும். 24-25. வார்த்தைகள், வழுக்கியும் பிற தெய்வ வணக்கம் செய்யா மகான்களின் நிலையையும், பெருமையையும் பரக்கக் கூறும். 26. பாகவத ஆசார்ய குணானுபவமன்றி அவர் குற்றங்களைக் கூறுதல் கூடாது. 27. ஸ்ரீ வைஷ்ணவனின் நிழலை மிதிக்கக் கூடாது.

(தொடரும்)